அகஸ்தியமகாமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

# இரத்தினச்சுருக்கம்

முந்நூற்றறுபது.

சென்னை: வித்தியா ரத்நாகர அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1933. [அணா—6.

S. 96

40

உ

தேவரிஷி முனிசித்தர்கள் திருவாய் மொழிந்தருளிய
ஞான யோக சாஸ்த்திர ஆராய்ச்சி நிலையம்,
ஸ்ரீ மீனாக்ஷி அம்மன் கோவில் (வடக்கு ஆடி வீதி,)
மதுரை.

ஸ்தாபகர்:-
ந. சுப்பிரமணியபிள்ளை என்ற ஞானபண்டிதசுவாமி

S. 96

உ

கடவுள் துணை.

அகஸ்தியமுனிவர் அருளிச்செய்த

# வைத்திய இரத்தினச்சுருக்கம்

36

முந்நூற்றறுபது.

இஃது

குயப்பேட்டை

**வீ. இராஜு முதலியார்,**

பார்வையிடப்பட்டது.

மதுரை புதுமண்டபம் புக்ஷாப்

பி. கா. சி ஏஜண்டு

மு. கிருஷ்ணப்பிள்ளை அவர்களால்

சென்னை.

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

இதன்விலை] 1928. [[illegible]

உ

கடவுள் துணை.

அகஸ்தியமுனிவர் அருளிச்செய்த

# வைத்தியரத்தினச் சுருக்கம்.

## மருந்தின் தலைப்புகளின் அகராதி.


| பக்கம். | பெயர். | பாடற்றொகை | பக்கம். | பெயர். | பாடற்றொகை |
|---|---|---|---|---|---|
| 25 | அக்கினிசூரணம் | 125 | 62 | காரீயச்செந்தூரம் | 354 |
| 26 | அசுவகெந்திசூரணம் | 129 | 60 | காளகண்டமேக நாராயண செந்தூரம் | 340 |
| 27 | அசுவகெந்திபலராட் சதத்தைலம் | 151 | 35 | கிழ்க்காய்நெல்லித் தைலம் | 185 |
| 51 | அப்பிரேகசெந்தூரம் | 282 | 31 | குமரித்தைலம் | 161 |
| 48 | அயக்காந்தசெந்தூரம் | 266 | 20 | கூழ்பாண்டலேகியம் | 4 |
| 14 | அர்த்தனாரீஸ்வரம் | 60 | 39 | கூழ்பாண்டக்கிருதம் | 211 |
| 47 | ஆக்கிராணகசியம் | 255 | 59 | கெந்திசெந்தூரம் | 330 |
| 35 | ஆதண்டத்தைலம் | 187 | 32 | கொம்பரக்குத்தைலம் | 165 |
| 11 | இதுவுமொருவகை | 41 | 14 | கோரோசினைக்குளிகை | 55 |
| 13 | இரசசிந்தாமணி | 50 | 28 | சஞ்சீவிசூரணம் | 145 |
| 52 | இரசபற்பம் | 289 | 33 | சந்தனாதித்தைலம் | 173 |
| 10 | இரசானந்தவைரவம் | 35 | 20 | சாபங்கவில்வாதிலேகியம் | 97 |
| 29 | ஏலாதிசூரணம் | 149 | 24 | சவுபாக்கியசுண்டி | 119 |
| 41 | கணத்தெண்ணெய் | 223 | 9 | சித்தாந்தவைரவம் | 33 |
| 17 | கண்டாத்திரிலேகியம | 73 | 15 | சிலோதாரிமணி | 64 |
| 18 | கண்டங்கத்திரிலேகியம் | 80 | 18 | சித்தாதிலேகியம் | 83 |
| 21 | கண்டங்கத்திரிலேகியம் | 103 | 45 | சுகபேதியெண்ணெய் | 249 |
| 41 | கண்டங்கத்திரிகிருதம் | 219 | 11 | சுயமக்கினி | 39 |
| 26 | கண்டாத்திரிசூரணம் | 131 | 47 | சூரணங்களின்சுத்தி | 259 |
| 47 | கண்டாவிழ்தம் | 257 | 48 | செந்தூரவைப்புக்கரு | 261 |
| 11 | கபாடமாத்திரை | 43 | 58 | சேத்துமசு[illegible]க்கியாழம் | 324 |
| 23 | கபாடலேகியம் | 108 | 55 | தங்கபற்பம் | 304 |
| 42 | கரப்பானெண்ணெய் | 227 | 54 | தாம்பிரபற்பம் | 300 |
| 15 | கரிசாலைலேகியம் | 66 | 53 | தாளகபற்பம் | 295 |
| 44 | கலிங்காதியெண்ணெய் | 241 | 26 | தாளிசப்பத்திரிசூரணம் | 13[illegible] |
| 58 | சன்னி பதின்மூன்றுக்கும் பெயர். | 327 | 23 | திப்பிலிரசாயனம | 112 |

| பக்கம். | பெயர். | பாடற்றொகை |
| --- | --- | --- |
| 25 | திரிராட்சதசூரணம் | 126 |
| 49 | திரிலோகசெந்தூரம் | 271 |
| 52 | துருசருகு | 288 |
| 40 | தூதளைக்கிருதம் | 215 |
| 58 | தோஷமேழுக்கும்பெயர் | 328 |
| 9 | ஸ்திரீ புருஷர்களுக்கு நாடிபார்க்கும்வகை | 30 |
| 47 | நசியம் | 256 |
| 53 | நாகபற்பம் | 297 |
| 5 | நாடிநிதானம் | 1 |
| 7 | நாடிபார்க்குங்காலம் | 13 |
| ,, | நாடியிலக்கணம் | 14 |
| 9 | நாடிபார்க்கும்மாதவரை | 31 |
| 37 | நிலப்பனைக்கிருதம் | 196 |
| 27 | நிலவாரைச்சூரணம் | 139 |
| 17 | பஞ்சதீபாக்கினிலேகியம் | 77 |
| 27 | பஞ்சதீபாக்கினிசூரணம் | 137 |
| 50 | பஞ்சலோகசெந்தூரம் | 275 |
| 36 | பதின்மூன்றுசன்னிக்குந் தைலம் | 190 |
| 56 | பவளபற்பம் | 313 |
| 46 | பழத்தெண்ணெய் | 252 |
| 57 | பித்தசுரக்கியாழம் | 320 |
| 38 | புளியாரைக்கிருதம் | 204 |
| 12 | பூபதிகுளிகை | 46 |
| 14 | பூமணிக்குளிகை | 58 |
| 63 | பூரணசந்திரோதயம் | 357 |
| 35 | பொன்னுங்காணித்தை | 183 |
| 38 | பொன்னுங்காணிக்கிருத | 201 |
| 19 | மகாவில்வாதிலேகியம் | 88 |
| 50 | மண்டூரச்செந்தூரம் | 278 |
| 23 | மஸ்துமிரசாயனம் | 114 |
| 42 | மாந்தயெண்ணெய் | 230 |
| 32 | மிருகாமலத்தைலம் | 169 |
| 43 | மேகத்தெண்ணெய் | 232 |
| 62 | ரசகற்பூரபற்பம் | 349 |
| 61 | ரசலோகசெந்தூரம் | 345 |
| 48 | லோகசெந்தூரம் | 262 |
| 53 | வங்கபற்பம் | 294 |
| 28 | வல்லாரைச்சூரணம் | 142 |
| 39 | வல்லாரைக்கிருதம் | 207 |
| 56 | வாதசுரக்கியாழம் | 316 |
| 43 | விழுதியெண்ணெய் | 236 |
| 10 | வாதராட்சசன் | 36 |
| 30 | வில்வாதிலேகியம் | 157 |
| 46 | வீரபத்திரக்கலிக்கம் | 254 |
| 55 | வெண்காரஞ்சலாசத்துகலைக் கொம்பு கல்நார்பஸ்பம் | 308 |
| 54 | வெள்ளிபற்பம் | 302 |


மருந்தின் தலைப்புகளின் அகராதி முற்றிற்று.

உ

கடவுள்துணை.

அகஸ்தியமுனிவர் அருளிச்செய்த

# வைத்தியரத்தினச்சுருக்கம்

## மூந்நூற்றறுபது.

---

காப்பு.

எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

பூரணமாய்நிறைந்தகுரு மலர்த்தாள்போற்றி
புகலுகிறேன்வைத்திய ரத்தினச்சுருக்கந்தன்னை
வாரணமாமுகத்தோனைப் பணிந்துவாழ்த்தி
வைத்தியந்தான்முந்நூற்றோ டறுபதுக்குள்
காரணமாஞ்செந்தூரம் பற்பம்லேகியங்
கருவான தயிலமொடு கிருதமெண்ணெய்
சூரணமாங்கிராணமொடு கலிக்கமாத்திரை
சுளுவாகநாடிமுதற் சொன்னோம்பாரே.

நூல்.

நாடிநிதானம்.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

கரிமுகனடியைவாழ்த்திக் கைதனினாடிபார்க்கில்
பெருவிரலங்குலத்தில் பிடித்தநடுவேதொட்டால்
ஒருவிரலோடில்லாத மூபர்நடுவிரலிற்பித்தந்
திருவிரன்மூன்றிலோடிற் சேத்துமநாடியாமே. (1)

ஆகியநாடிமூன்றும் படபடென்றோடிற்சன்னி
வாகினிலன்னங்கோழி மயிலெனநடக்கும்வாதம்
ஏகியவானம்பட்டை யிவையெனநடக்கும்பித்தம்
போகியேதவளைபாம்பு போலவாஞ்சேத்துமந்தானே. (2)

சேத்துமமெழுந்திருக்கிற் றித்திப்புநாவிலேறும்
ஏற்றியகசப்புமீறி லெழுப்பிடும்பித்தமாகும்
மாற்றியபுளிப்புமீறில் வந்திடும்வாதமாகும்
சேத்துமந்தன்னிற்பித்தந் தீர்க்கநன்றுவாதமாமே. (3)

வாதத்தில்வாதமாகில் வளர்ந்திடுமென்னம்போல
நீதுப்த்தவுடலினோர்ந்து நெகிழ்ச்சியாய்ச்சுருக்கும்வாங்கும்
ஆதுற்றுப்பதறுமேனி யசனமுமற்பமாகும்
ஏதுற்றதனத்தின்முன்னே யெண்ணியேயறிந்துசொல்லே. (4)

வாதத்திற்பித்தமாகில் வாயதுகுழறிப்பேசும்
பேதித்துத்தலைபிடித்துப் பிணங்கியகுணங்கள்வேறாய்த்
தாதுற்றபுத்திதானுந் தடைப்படுந்தடங்கண்மாதே
கோதுற்றவயிறுவிம்மிக் குடறனைப்புரட்டுந்தானே. (5)

வாதத்திற்சேத்துமமாகில் வலியொடுவீக்கமுண்டாம்
பேதித்துத்தலைபிடித்துப் பிணங்கியகுணங்கள்வேறாய்த்
தீதுற்றமெங்வளுத்துத் திடமுடனசனஞ்செல்லா
பேதித்துநாவும்பேசும் பெருகவேவீக்கமுண்டாம். (6)

பித்தத்திற்பித்தமாகிப் பிதற்றிடுங்கிறுகிறுக்கும்
சத்தியுமதிகமாகுஞ் சரீரத்திலிளைப்புமுண்டாம்
அத்தியாயுலகுமேனி பாகமும்வேறதாகும்
வற்றியேவெளுத்துக்காயம் வறண்டுபின்வீக்கமுண்டாம். (7)

பித்தத்தில்வாதமாகிற் பிடரியுங்காலுங்கையும்
குத்தத்துப்போலேயாகுங் குறுகியமெய்ப்பதறும்பின்னே
அத்தியாயுலகுமேனி யாருகஞ்சுகத்தால்நோவாம்
புத்தியுமடியுமிந்தப் பொறுமைபோய்க்கோபமாமே. (8)

பித்தத்திற்சேத்துமமாகிற் பிதற்றுவாய்குழறுமிக்கச்
சத்தியும்வாய்நீர்தானுந் தானறியாமலோடு
சுற்றிடும்பேய்கள்போலச் சுழற்றியேவயிற்றிரேறும்
பித்தமுமெடுத்துக்கொட்டிப் பிடரியில்நோவதாமே. (9)

வாட்டிடுஞ்சேத்துமத்தில் வந்திடுவாதமாகில்
நாட்டியகால்கள்போல நரம்பெலாம்வலித்துநிற்கும்
கூட்டியபிடரிதானுங் குன்றவேவலிக்குமாகில்
நாட்டியவிழியுமெல்லாம் நாக்குவாங்குழறுந்தானே. (10)

சீர்பெறுசேத்துமத்திற் றின்பதுகசப்புண்டாகும்
பார்பெறுநாவுதன்னிற் பலவிதம்புளியுளிப்பாம்
சேர்ப்பதுபேசுமாறுந் திடமில்லைகோழையாகும்
சார்பதுகண்ணும்பீளை சாரும்பின்சுத்தம்வேறும். (11)

சேத்துமத்திற்சேத்துமமாகிற் றிமிதமாயழியுஞ்சொன்னோம்
ஆத்துமநல்லதல்ல அழிவதுமெய்கண்டாயே

கூற்றன்வந்திடுவதாகுங் குருவிழிவட்டங்கொள்ளும்
சாத்திரமறிந்துசொன்னோம் யாத்திரைநாடிதானே. (12)

நாடிபார்க்குங் காலம்.

காலமேசேத்துமநாடி கட்டுச்சிபித்தநாடி
மாலையில்வாதநாடி வகைதப்பிபதறிநின்றால்
ஏலவேயிவர்கட்கெல்லா மியம்பினரிதுதானென்று
காலஞ்சின்மரணமென்று நன்முனியருளிச்செய்தார். (13)

நாடி இலக்கணம்.

போற்றியநாடிதானும் போத்துபோற்புறந்துடித்தால்
சீற்றவின்னுதலேயிக் கிடுஞ்சுகமானவேகேளாய்
சாத்திடுந்திங்களொன்றிற் சுருதியேதீராவிட்டால்
மாற்றியமாதம்பத்தின் மரணமெனறுரைக்கலாமே. (14)

குறித்திடுஞ்சேத்துமநாடி குதிரைபோல்திமிர்ந்துநின்றால்
கறுத்திடும்விழியாம்நல்ல காரிகையாளேகேளாய்
மறுத்திவைபேசவேண்டாம் வயதிவைமுடிந்ததென்று
பொறுத்தல்லதிங்களொன்றிற் புகன்றிடுமரணமாமே. (15)

ஆதித்தன்சந்திரன்போ லந்தித்தநாடிதானும்
பேதித்துநிற்குமாகில் பெருக்கவேவகையினோடே
சேதித்துக்கண்டுநாடி சுரங்களிற்புக்குமாகில்
வாதத்தில்வாய்வுபீடை வந்துற்றுநிற்குந்தானே. (16)

கடிந்ததோர்நாடிதன்னைக் கருதியேபார்க்கும்போது
விடிந்தபின்சேத்துமநாடி வுதறியேதொடர்ந்துநின்றால்
கடிந்ததுபித்தநாடி கட்டுச்கிதுடிக்குமாகில்
மடிந்ததுவாதநாடி மாலையில்மரணந்தானே. (17)

சேத்துமநாடிதானுந் தியங்கியமஞ்ஞைபோல
நாட்டியேவட்டைபோல நடுங்கியேபதறிநின்றால்
கூட்டவேவேண்டாமேழு நாளினில்மரணங்கொள்ளும்
நாட்டமாய்முனிவர்சொன்னார் நயம்படக்குறித்துப்பாரே. (18)

ஏற்றியேதீபந்தன்னி லெரிசுடர்முனையைப்போலத்
தோற்றியநாடிதானுந் துயரறநடக்குமாகில்
கூற்றனுக்கிடமுமில்லை குறைபடாமருந்துசெய்யில்
மாற்றியவாணாளும் வளர்ந்திடுந்திண்ணந்தானே. (19

### வேறு.

கண்ணும்பல்லுந்தான்கருத்துக் கருதுமூச்சுவாய்திறந்து
உண்ணும்வயிற்றிற்சேத்துமமு மோடிமிகவேதானடந்தாற்
பண்ணுமருந்துபலியாது பண்பாய்சுவாசமேல்வாங்கும்
மண்ணும்விண்ணுந்தானறிய மரணமாவார்கண்டீரே. (20)

### வேறு.

இடைகொடைமார்பின்கீழே யெகிபடப்பதறியோடின்
முடுகிடவிங்குமாசின் மூவரிலொருவரோடில்
படரவேதாரமிஞ்சிப் பஞ்சிடுங்கண்ணும்வாயும்
அடரவிக்குணங்கள்கண்டா லறிந்துகொள்மரணமென்றே. (21)

### இஃது அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

எடுக்கும்படுக்குமெழுந்திருக்கு மிளைத்தேமுச்சுதலைவாங்கும்
வடுக்கணொத்தவிழியிரண்டு மலரவிழ்க்கும்வழிபார்க்குந்
தொடுக்குந்தொடுத்தசேத்துமமுந் தொண்டைதன்னையடைப்பிக்கு
மடுத்துவருவதில்லைகண்டா யறிவீர்மரணநிச்சயமே. (22)

### இதுவும் அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

ஊசிபோன்மூகமுநீண்டு உடம்பெலாந்நரம்புதோன்றும்
பாதிபேச்சுநாவறண்டுபேசிப் பாந்திருண்மூடுமாகில்
பேசுநாவறண்டுபேசிப் பீத்ததுபிதற்றுமாகில்
காசினிவறியச்சொன்னேன் கண்டுகொள்மரணமென்றே. (23)

நாடியான்முன்னோர்சொன்ன நற்குறிக்குணங்களாலு
நீடியவிழியினாலு நின்றநாட்குறிப்பினாலும்
வாடியமேனியாலு மலரொடுநீரினாலுஞ்
சூடியவியாதிதன்னைச் சுகம்பெறவறிந்துசொன்னேன். (24)

சுகம்பெறவங்கமெல்லாஞ் சுருக்கியகுணங்களாய்நன்
முகங்குறிநாடிமூக்குச் செவிநுதநயனநாடி
அகந்துடிபடர்க்குநாடி யதுதிசைவிடுதிநாடி
உகந்துடியுந்திநாடி யுண்மையாய்நடைகள்பாரே. (25)

பார்மனக்கவலையற்றும் பலபலவிசாரம்விட்டுத்
தேர்மனந்தெளிந்துநீயுஞ் செல்குணவழியிதென்று
ஊரகமுந்திதன்னி தொளிபலவியாதிசெய்யில்
தீபனவுண்டியாலே சேர்ந்திடுநோய்கடானே. (26)

சொல்லியவுந்திதன்னிற் சுழித்ததோசெழுத்தைப்பற்றி
வல்லையிலெழுந்தநாடி யெழுபத்தீராயிரத்தில்
வல்லவர்புகலுநாடி பத்திலேழுநீக்கி
நல்லதோர்நாடிமூன்று நயந்துநீயறிந்துபாரே. (27)

தான்மிகக்குளிர்ச்சிகொள்ளி லடங்கியநாடிவாதம்
மீனமுகில்குழலாய்நெய்யா லிறைச்சிகளுண்டால்வாதந்
தீன்மிகவருமேகோழி தின்னவர்நாடிபித்தம்
வானநற்கனிகடன்னை வாங்கினால்வாதமாமே. (28)

வாதத்திவிளநீர்பின்னை வாங்கினாடிவாதம்
போகவேகோபமுள்ளே பொருமினாடிபித்தம்
கோதேசேர்குழலாள்தன்னைக் கூடினாடிபித்தம்
தீதிலாமுனிவர்சொன்னார் திறமுடனறிந்துதானே. (29)

ஸ்திரீ புருடர்களுக்கு நாடிபார்க்கும் வகை.

தானெனவுலகத்துள்ளே தபங்கியநாடிபார்க்கில்
வானெனுமின்னேகேளாய் வரும்புனல்சொல்லக்கேளு
நானெனுபுருடர்க்கெல்லா நாடிதான்வலக்கையாகும்
தேனெனுமடவார்க்கெல்லாந் திடம்பெறவிடக்கைசித்தே. (30)

நாடிபார்க்கும் மாதவரை,

சித்திரைவைகாசிக்குச் செழுங்கதிருதயந்தன்னில்
அத்தமாமானியாடி யைப்பசிகார்த்திகைக்கு
மத்தியானத்திற்பார்க்க மார்கழிதையுமாசி
வித்தகன்கதிரோன்மேதில் விழுகின்றநேரந்தானே. (31)

தானதுபங்குனிக்குந் தனதுநல்லாவணிக்கும்
மானமாம்புரட்டாசிக்கு மற்றைராத்திரியிற்பார்க்கத்
தேனென்றுமூன்றுநாடித் தெளிவாகக்காணுமென்று
கானமாமுனிவர்சொன்ன கருத்தைநீகண்டுபாரே. (32)

நாடிநிதானம் முற்றிற்று.

---

## சித்தானந்த வைரவம்.

### எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

பாரப்பா புலத்தியனே சித்தானந்தம் பரிவான வைரவந்தான் சொல்லக்கேளு, சேரப்பா திரிகடுகு (1) சிவப்புநாவல் திறமான

(1) சிகப்பு - லிங்கம்.

(1) வெரிச்சலொடு (2) பொரிச்சலேழும், நீரப்பா சமன்கூட்டிப் பழத்தின்சாற்றால் நிசமாகநாற்சாம மரைத்துக்கொண்டு, தாரப்பா குன்றிபோ னிழலுலர்த்தத் தப்பாமற் செப்பிலைவைத்துச் சொல்லக் கேளே. (33)

கேளப்பா விஞ்சிநீ ருள்ளித்தயிலங் கெடியான மூலப்பாலிற் கொடுத்தாயானால், நாளப்பா சன்னிவகை யெல்லாம்போகும் நல மாக தேன்கூட்டிக் கொடுத்தாயானால், தாளப்பா தோஷமென்ற தெல்லாம்போகுந் தப்பாது கண்ணிலிட திருந்திரும், கேளப்பா ரசானந்த வைரவந்தான் செப்புகிறேன் சிவப்புநாவற் (3) பொரிதா னெட்டே. (34)

இராசானந்தவைரவம்.

எட்டப்பா நாலியீ ராறுமாகு மிதமான திப்பிலியும் பன்னிரண்டு, தட்டப்பா விஞ்சிரசந் தன்னாலாட்டித் தளமாக நாற்சாம மரைத்துக்கொண்டு, விட்டப்பா மிளகுபோ னிழலுலர்த்தி விருதான செப்பில்வைத்துச் சொல்லக்கேளு, அட்டப்பா வறுபான மறிந்துபோடு அப்பனே சன்னியென்ற மூலம்போமே. (35)

வாதராக்ஷதன்.

போமப்பா வாதரா க்ஷசனைக்கேளும் புதுமையாம் (4) வேந்தனொடு (5) நாற்றங்காந்தஞ், சேமப்பா வப்பிரக தாம்பிரபற்பம் திறமாக வஞ்சுவிதம் சமனாய்க்கூட்டிச், சாமப்பா வெள்ளைச்சாரணையின்சாற்றால் தளமாகநாற்சாம மரைத்தபின்பு, வேமப்பாசிந்தியிட கியாழந்தன்னில் வெகுசுறுக்காய் நாற்சாமமரைத்திடாயே. (36)

அரைத்திடுவாய் கொடிவேலிக் கியாழந்தன்னில் அருந்துளசிச் சாறு (6) திரி பலைக்கியாழம், அரைத்திடுவாய் வெவ்வேறே சாமமாண்டு அழகாகமொத்தையா யுருட்டிக்கொண்டு, அரைத்திடுவாய் சாரணையி னிலையரைத்து அன்பாக மருந்தையுள்ளே வைத்துமூடி, அரைத்திட்ட விலைகருகப் புடத்தைப்போட்டு ஆறினபின் னெடுத்ததனை லரைக்கக்கேளே. (37)

கேளப்பா சித்திமூ லத்தின்கியாழம் சிறுபையாய் நாற்சாம மரைத்துக்கொண்டு, நாளப்பா மும்மூன்று வராகன்விதம் நலமாக

---

(1) எரிச்சல் - பெருங்காயம். (2) பொரிச்சல் - வெண்காரம். (3) பொரி - வெண்காரம். (4) வேந்தன் - ரசம். (5) நாற்றம்-கந்தகம். (6) திரிபலை - கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய்.

வேயுருட்டிக் கட்டிக்கொண்டு, தாளப்பா நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு தளமான சன்னிவகை தோஷமெல்லாம், வேளப்பா வனு பான மறிந்துபோடு வெகுசுருக்காய் வாதமெல்லாம் விழலாய்ப் போமே. (38)

## சுயமக்கினி.

கேளப்பா சுயமக்கினி சொல்லக்கேளு புகழான ரசமூன்று (1) நாற்றம்ரண்டு, காமப்பா காந்தசெந் தூரம்காலு கலங்காதே (2) சிலையிரண்டு (3) சிவப்பிரண்டு, தாமப்பா வெழுகுபொடி தானொன்று தவறாமல் (4) குமரிச்சாறரைப்புக்கேளு, ஆமப்பாபட்ச மொன்று அரைத்துருட்டு அப்பனே யிஞ்சிரசந்திரிகடுகுதூளே. ()

தூளிலே தேன்கூட்டிப் பணவிடைதான் போட்டுத் தொடர்ந்துவரை மண்டலந்தான் கொண்டாயானால், நாளிலே யக்கினியா மந்தந்தீரும் நாடாது பீலிகையுங் குன்மவாயும், தேளிலே வாயு வென்றதெல்லாந்தீருந் திறமான கசிபொடு பாண்டுதீரும், சூலி லே சுரமெல்லாஞ் சுருக்காய்தீரும் சுகமாகும் பத்தியந்தான் புளி கசப்புத்தள்ளே. (40)

## இதுவுமொருவகை.

தள்ளவே யின்னமொரு செய்திகேளு தயவான வேர்தனொன்று நாற்றம்ரண்டு, விள்ளவே அயப்பொடிதா னொனுங்கூட்டி விருதான குமரிச்சா றதனாலாட்டிப், பள்ளவே நாற்சாம மரைத்துருட்டிப் பாங்கான வெருக்கிலைபாற் சுற்றிக்கட்டிக், கள்ளவே யாண்டத்தில் பட்சம்வைத்துக் கலங்காதே பொடிசெய்து திருகிக் கொள்ளே. (41)

கொள்ளடா தேன்கூட்டி மண்டலந்தான் கோடியான கும்ப மெட்டுப் பீலிகையுந்தீரும், தள்ளடா பாண்டுவகை யெல்லாந்தீருந் தளமான மண்டலந்தான் கொண்டாயானால், விள்ளடா சுரமென்ற தறுபானன்கும் விட்டுவிட்டுக் கடல்புக்கும் விருதுபோடே. (42)

## கபாடமாத்திரை.

போடவே கபாடமாத் திரைதான்கேளு புகழான சாதிக்காய்ப் பத்ரிக்காயம், நாடவே சீரகமும் விடையங்கிராமபு நலமானவபினி (6) சடை வன்னிக்கற்பர், தேடவே வெந்தயமுங் கழற்சிவித்துத்

(1) நாற்றம் - கந்தகம். (2) சிலை - மனோசிலை. (3) சிவப்பு - லிங்கம். (4) குமரி - சோற்றுக்கற்றாழை. (5) சடைவன்னிக் கற்பம் - சடைக்குஞ்சரம்.

திறமான குரோசானி பதினென்றுந்தான், ஆடவே சமன்தூக்கிக் கல்வத்திட்டு அப்பனே (1) யானந்த மூலிசாறே. (43)

சாற்றாலே நாற்சாம மரைத்துக்கொண்டு சாதகமா யிலந்தை விதைத் தரமாணந்தான், காத்தாலமே திளிஞ்சென்ற தயிர்கான் மூன்று கசக்காதே (2) மதுவிலிடு மூன்றுநாள்தான், வார்த்தாலே வாழையிட பூவின் சாற்றால் வகையான தனிச்சாற்றி லிட்டாயா னால், வேர்த்தாலே யிரத்தமுஞ் சீழ்கிராணி விதமானசலக்கிராணி தானுமாமே. (44

ஆமப்பா சலக்கிராணி வாய்வுக்கிராணி அப்பனே சூரிகா கிராணிதீரும், போமப்பாசோறுசோறுய்க்கழிகிராணி பொலிவான நீர்தாய்க் கிராணி தீரும், காமப்பா வயிற்றிலுள்ள கடுப்புத்தீரும் நலமான பாண்டுநோய்க் கிராணி தீரும், தாமப்பா வதிகாரக் கடுப் புத்தீருந் தப்பாது புளிக்கூட்டிப் பத்தியம்போடே. (45)

## பூபதிக்குளிகை.

யோடப்பா சடலத்துண் ணோய்கள்போகம் பூபதிதன் மருந் தொன்று சொல்லக்கேளு, சாடப்பா தங்கமொடு வெள்ளி நாகந் தளமான லோகமொடு முத்து ரத்தினம், நாடப்பா சூதமொடு கெந்தி லிங்கம் நலமான சிலையொடு தார்சிங்கி நாலி, ஆடப்பா விவையெல்லாம் பழச்சாற்றாலே ஆட்டியே நாற்சாமம் வில்லை செய்யே. (46)

செய்யப்பா ரவியுலர்த்தி பரவில் வைத்துத் திறமான மேல் மூடிச் சீலைசெய்து, வையப்பா முப்புடத்தில் சிவந்துயோகும் வள மாக வெடைக்கெடைதான் லிங்கங்கூட்டி, மெய்யப்பா முலைப்பாலி னுன்கேசாமம் விடாமலரை விரனீள முண்டைசெய்து, கையப்பா நிழலுலர்த்திச் செம்பில்வைத்துக் கலங்காதே வைரவற்குப் பூசை பண்ணே. (47)

பண்ணியே பூபதியை முலைப்பா லுக்கும் பரிவாக வரிசியெ டை கொடுத்தாற் கேளு, சண்ணியே சந்நிபதின் மூன்றுந் தீரும் தப்பாது தோஷமென்ற தேழுந் தீரும், கண்ணித்திரி தோஷமுஞ் சிவ் கிவித மெல்லாங் காணுது கடல்புக்குங் கருதிப்பாரு, விண்ணி யே சிரசினின்ற தோஷமெல்லாம் வெகுசுறுக்காய் தீருமடா விரை ந்துபாரே. (58)

---

(1) ஆனந்தமூலி - கஞ்சா. (2) மது - தேன்.

பாரப்பா பூபதியை யிஞ்சிச் சாற்றாற் பரிவான தேன்கூட்டிக் கொடுத்தாற் கேளு, சாரப்பா சமமாகப் போனாலுந்தான் சாதுரியப் பிராணன்வந்து சற்றேபேசும், ஆரப்பா பிரமலபி யவ்வளவேயாயின் ஆதித்தும் பேசிகடு மரணமாவான், தாரப்பா பூபதியைச் சொன்னேன் சொன்னேன் சாதித்து வைத்தியஞ்செய் தருமமாமே. (49)

ஆமப்பா ரசசிந்தா மணியைக்கேளு அப்பனே சூதமொடு சிவந்தரத்தம், தாமப்பா தங்கமொடு வெள்ளிமுத்து தயவான பவழமொடு தீட்சணந்தான், நாமப்பா சிலைகெந்தி யப்பிரேகம் நலமாக வகைக்குமிரு கழஞ்சுகூட்டிக், (1) காமப்பால் விட்டரைப்பாய் சாமம்நாலு கருவான சித்திரமூலக் கியாழந்தானே. (50)

கியாழத்தா லரைத்திடுவாய் சாமம்நாலு கெடிதான வெருக்கம்பாற் சாமம் ரண்டு, நியாயமாஞ் (2) சோகிதனி லடைத்துக் கொண்டு நிலவரமாய் மூலமென்ற சாம்பலுக்குள், வியாழமாய் அறையறைபாய் வைத்துமூடி விதமாக வெழுசீலை மண்ணுசெய்து, கியாழமா விரவிதனி லுலரப்போட்டுத் திறமாகக் கசப்புடத்திற் சென்று வாங்கே. (51)

வாங்கியே எடைக்கெடைதான் சூதங்கூட்டி மைந்தனே நாபி முக்காற் கழஞ்சி கூட்டி, ஓங்கியே நாற்சாமந் திரிகடுகு கியாழம் உத்தமனே திரிபலையின் கியாழந் தன்னாற், றேங்கியே யிருசாம மரைத்த பின்பு திறமாக வெருக்கனிடப் பட்டைச் சாற்றால், தாங்கியே யிருசாம மரைத் துருட்டித் தப்பாம னிழலதனி லுலர்த்தி வையே. (52)

வைத்திதனை வைரவர்க்குப் பூசைபண்ணு வாகாகக் கணபதியை பூசைபண்ணு, தைத்தொரு மாத்திரைக்குச் செபந்தான் பண்ணு தப்பாமற் றேவியைத்தான் பூசைபண்ணு, சித்திதருமாத்திரையை யனுபானத்தில் திறமாகக் குன்றியெடை கொடுத்தாற் கேளு, பற்றிநின்ற சன்னிமுதற் றோஷமெல்லாம் பறக்குமடா சுரமென்ற தெல்லாந் தானே. (53)

தானென்ற ரசசிந்தா மணியின் பேரைச் சாற்றினால் யமதூதர் ஒடுக்குவார் பார், ஏனென்றே நானிருந்தால் வைத்தியோரே எய்துமோ மாத்திரைநா னியம்பக்கேளு, பானென்ற மாத்திரைகள் பணமாய்ச் செய்து பரிவான வுலகத்திற் வைத்தியஞ் செய்ய

(1) காமப்பால் - முலைப்பால். (2) சோகி - பலகறை.

தேனென்ற வைத்தியர்க்குச் சொன்னே னீந்நால் திதமான வாதி யென்றுற் செய்வான் பாரே. (54)

### கோரோசனைக்குளிகை.

பாரப்பா கோரோசனைக் குளிகைகேளும் பாங்காகக் கோரோசனை குங்குமப்பூ, சாரப்பா கர்ப்பூர ரசஞ்சங் தூரஞ் சார்பான பச்சைக்கர்ப் பூரமேலம், சேரப்பா வப்பிரேயங் கிராம்பு கோஷ்டம் திறமான சாதிக்கா யக்கிராகாரம், ஆரப்பா வகைபொன்று கழஞ்சு மூன்று அப்பனே கல்வத்திற் பொடித்துக் கொள்ளே. (55)

பொடித்திதனை யரைப்பதற்குக் கியாழங்கேளு பேரான சந்தனத்தூள் கியாழஞ் செய்து, துடித்திதனைச் சாமநா லரைத்துக் கொண்டு துலங்கவே சண்பகப்பூக் கியாழஞ்செய்து, கடித்திட்டு விருசாமமரைத்துக்கொண்டு கருவான குங்குமப்பூ கியாழஞ் செய்து, துடித்திட்டு விருசாம மரைத்துக் கொண்டு துலங்கவே குன்றிபோ லுருணடை செய்யே. (56)

உருண்டைசெய்து நிழலுலர்த்தி செப்பில் வைத்து உத்தமனே முலைப்பாலில் கொடுத்தாயானல், தொண்டையுறு சேத்துமங்கடொண் ணூற்றுறும் தொலைந்துவிடுஞ் சன்னியெல்லாஞ் சொல்லாதோடும், மண்டைகட்டுச் சூலைமுத னீர்த்தோஷங்கள் மயக்கமொடு சேத்துமம் பாண்டுபோகும், சண்டையிட்டு வந்தவொரு வலிப்பியாவுஞ் சண்ணுண்டு போகுமடா சொல்லக்கேளே. (57)

### பூமணிக்குளிகை.

கேளடா பூமணிதான்சொல்லக்கேளு கிருபையாய் ரோகணியுமிலுப்பைப் பூவும், நாளடா வாளமது ரொட்டி சேர்த்து நலமான குமரிச்சா றதனுலாட்டி, வேளடா நாச்சாம மரைத்துக் கொண்டு விதமான தூதுளங் காய்ப்போலுருட்டித், தாளடா நிழலுலர்த்திச் செப்பில் வைத்துத் தளமான் விஞ்சிரசந் தேனுங் கூட்டே. (58)

கூட்டியமாத் திரைதா னென்றுதேய்த்துக் குழப்பியே காலமே கொடுத்தாற் கேளு, நாட்டியதோர் சன்னிசுர மெல்லாந் தீரும் நலமான விடாசுரமும் நாடாதோடும், தீட்டியதோ ருள்ளியென்ற வைதலத் தூட்டத் திறமான தோஷமெல்லாந் தீரும் தீரும், வாட்டியே யெண்ணெயிலே கொடுத்தாயானல் வாங்கிவிடும் வாயுவெல்லாம் மாண்டுபோமே. (59)

### அர்த்தனரீஸ்வரம்.

போமப்பா அர்த்தனரி சூரணந்தான் கேளு புகழான சூதமொடு காவி கேந்தி, நாமப்பா வெண்காரம் சமனுய்த்தூக்கி நலமான

நொச்சியிலைச் சாற்றினாலே, வேமப்பா விருசாம மரைத்துக் கொண்டு விதமான குகைபிலிட்டுச் சீலைசெய்து, தாமப்பா மண்செய்து சட்டிக்குள்ளே தயவாக வுப்மையிட்டுக் குகையை வையே. (60)

வைத்ததிலேமேலு மந்த வுப்பைக்கொட்டி வாகாக மேற்சட்டி கொண்டுமூடி, தைத்ததிலே சீலைசெய் தடுப்பிலேற்றித் தப்பாமற் கமலவுன்னி நாலுசாமம், நைத்ததிலே யாறவிட் டெடுத்துக் கொண்டு நலமான செங்கழுநீர்சாற்றினாலே, வைத்ததிலே நாற் சாம மாட்டிக்கொண்டு, பருவமு— னெச்சிரசம் விட்டேயாட்டே.

ஆட்டப்பா நாற்சாமம் பாகத் சாற்றால் அப்பனே நாற்சாம மாட்டிக்கொண்டு, நாட்டப்பா ரவிமுகத்தி லுலர்ந்த பின்பு நன் றாகக் குழலடைத்து வைத்துக் கொண்டு, மூட்டப்பா பணவிடை துள் சாற்றிவிட்டு முறையாகக் கொடுத்திடவே சுரங்கள் தீரும், காட்டப்பா விருபுரத்தோர் பறந்தா னிறக்குங் கருவான முன் சாற்றி வசியம் பண்ணே. (62)

பண்ணப்பா ஒருபுரத்திற் சுரந்தா னிற்கும் பக்குவமாய் மறு புறத்தி னசியம்பண்ண, கண்ணப்பா விருபுறமுந் தணிந்துபோகுந் தப்பாது ஆட்டுப்பாற் கழஞ்சி கொள்ள, நண்ணப்பா புலத்தியற்கா ய்ச் சொன்னேன்கேளீர், நாட்டிலுள்ளோரிதையறிந்து யார்தான் செய்வார், கண்ணப்பா வெளிப்பிலலைசொல்லிவிட்டேன் கருவான வைத்தியர்க் கருமைகாணே. (63)

## சிலோதாரிமணி.

காணப்பா சிலோதாரி மணியைக் கேளு கனத்த (1) பொரி திரிகடுகு படியொவ்வொன்று, காணப்பாகடனுரைவுஞ் சூரைவிந்து நலமாக விந்துப்பு காயமொன்று, மாணப்பா சேர்வாள ரெண்டுங் கூட்டி வகைபத்து மிளநீரிற் சாமமாட்டி, பேணப்பா விலைந்தை விதைப் பிரமாணந்தான் பிசகாம னிழலுலர்த்திச் செப்பில்வையே.

வைத்தப்பா விஞ்சிநீர் தேனுங்கூட்டி வளமான மாத்திரையை க்கொடுத்தாயானல், சத்தப்பா வாயுவொடு வாதமெல்லாஞ் சாந்த மாம் பித்தமெல்லாங் கீழேசாடும், வைத்தப்பா மறுவிலே யிட்டா யானல் மாந்தமொடு உப்பிசமும் வாங்கிப்போகும், எய்த்தப்பாநீர டைப்பு சதையடைப்புதீரு மிதமான சிலோதாரி யென்றுகாணே.

## கரிசாலைலேகியம்.

காணப்பா பாண்டுவகை யாவும்போகக் கரிசாலை லேகியந்தான் சொல்லக்கேளு, காணப்பா பொற்கையான் சாறுபடி யிரண்டு நல

(1) பொரி - வெண்காரம்.

மான நெருஞ்சிரசம்பலமிரண்டு, வாணப்பா சிறுகீரைச் சாறுபடி ஒன்று வளமான பொடுதலைநீர் படிதா னென்று, தாணப்பா கீழ்க் காயி நெல்லிச்சாறு தருவான செருப்படிநீர் யடிதானென்றே. (66)

ஒன்றப்பா கியாழவகை சொல்லக்கேளு ஊரமான நாவல்கருங் காலியத்தி, ஒன்றப்பா தென்னம்பூ வகையொன்றுக்கு ஓர் பலந் தான் மஞ்சணன்று யிடித்துப்போட்டுக், கண்டப்பா தூணிநீ ரெட் டொன் றுக்கிக் கருவான சாற்றினுள்ளே கருத்தாய் வைத்துக், கிண்டப்பா சமமாக்கி பிறக்கிக் கொண்டு கெணிதமுடன் கருவான சாற்றிற் சேரே. (67)

சேர்க்கவின்னங் கியாழமொன்று சொல்லக்கேளு செப்பு இறேன் மிளகொடுமிள கரணைமூலம், மார்க்கமாம் அவுரியொடு சிற் றுமுட்டி வளமான பேராமுட்டி விலாமிச்சோடு, தீர்க்கமாய் படி மூன்று நிறுத்துக் கொண்டு திறமாக விடித்ததனை தூணி நீரில், சேர்க்கவே சோடாத்தோ டொன்றுய்க் காச்சி சிதறுதே முன் கியாழந் தன்னிற் கூட்டே. (68)

கூட்டுவாய் பனைவெல்லம் பலந்தா னெட்டு கூறுன கன்னல் வெல்லம் பலந்தானெட்டு, மாட்டுவா யாவின்பாற் படிதானுலு வள மாகக் கரைத்துவிட்டுச் சொல்லக் கேளு, காட்டுவா யடுப்பேற்றிப் பாகுசெய்து கருவான சீரகமு மேலங் கிரும்பு, நீட்டுவாய் சாதிக் காய் சாதிப்பத்திரி நினைவாக வேரமங்குரோ சானியாமே. (69)

ஆமப்பா நாகப்பூ கற்கடகச் சிங்கி அப்பனே கோஷ்டமோ டக்கிறு காரம், தாமப்பா மதுரமொடு தாளிச பத்திரி தப்பாமற் றிரிகடுகு திரிபலாதி, நாமப்பா வகையொன்றிற் பலந்தா னென்று நலமாகச் சூரணித்து முன்பாகில் தூவி, வேமப்பா கிண்டையிலே யாவினெய்தான் விரைவிலரைப் படிவீதம் விட்டுக் கிண்டே. (70)

கிண்டப்பா தேனதிலே படிதான் விட்டுக் கிருபையொடு திரி லோகச் செந்தூரந்தான், தாண்டப்பா பலமொன்று கூடப் போட் டுத் தப்பாமல் (1) மண்டூரம் பலமொன் றப்பா, மண்டப்பா கிண்டி ய்தை மெழுகாய் வாங்கி மகத்தான புன்னைக்கா யளவுவீதம், கொண்டப்பா மண்டலந்தான் சென்றதானுற் கூறுகெட்ட வெண் பாண்டஞ் சிவக்க லாச்சே. (71)

ஆச்சப்பா பாண்டுவகை யாவும் போகும் யப்பனே பித்தவெ ட்டைக் கைகாலோச்சல், காச்சப்பா காந்தலுட னெறிவு போகுங்

---

(1) மண்டூரம் - பழஞ்செங்கற் கிட்டம்.

கனமான வாந்தியொடு மயக்கந்தூக்கம், ஓச்சப்பா விக்கமொடு நீர்ச்சுரப்பு முத்தமனே கிராணியெல்லா மொழிந்துபோகும், நீச்சப்பா வரோசிபங்க ளெல்லாம்போகும் விசமான (1) அசுவ கெந்தித் தைலமூழ்கு. (72)

### கண்டாத்திரிலேகியம்.

மூழ்கவே கண்டாத்திரி லேகியஞ் சொல்வேன் முக்கியமா யிஞ்சிரசம் படிதானொன்று, நீழ்கவேகண்டங்கத்திரியின்சாறுநினை வடிதப் படியொன்று கூடவிட்டுத் தாழ்கவே நெருஞ்சிநீர்ப் படிதா னொன்று தப்பாமல் முள்ளங்கிப் படிநீர்விட்டு, வீழ்கவே பழச் சாறு படிதான் விட்டு வியனான வாவின்பாற் படியிரண்டே. (73)

இரண்டான பனைவெல்லம் பலந்தானெட்டு நணுகியதை யடுப் பேற்றி பாகுதேரிற், குன்றான திரிகடுகு சீரகமுமேலங் குணமான வாய்விளங்கங் கிராம்பு தாளிசம், நன்றாகபலமொன்று சூரணித்து நலமுடனே நாற்படிதான் வலனும்வாரே. (74)

வார்த்தப்பா கிண்டியதை மெழுகுபோல வளமான லேகியத் தைப் பதனம்பண்ணு, பார்த்தப்பா யாக்களவு வீதமாகப் பதரும விருநோய் கொள்ளுங்காலம், காத்தப்பா மண்டலந்தான் கொண் டாயானாற் கலங்காதே வாதமொடு வாயுவெல்லாம், போத்துறுநற் பித்தமொடு வாந்தி சூலைப் புகழுநல் வழிவிலகும் பறந்துபோமே.

போய்ப்பாரே சிங்கங்க ளன்னதோஷம் பொறுக்காத குன்ம மெட்டும் பொருமல் விக்கல், சாமப்பா பித்தத்தி னெரிவி தெல் லாம் சாடிவிடுங் கடுப்புவலி சாந்தமாகும், நாமப்பா பித்தத்தின் கபாலகுத்தல் நாடாது மயக்கமெல்லா நடுங்கியோடும், தேமப்பா குமரியிட தைலமூழ்கில் திறமான தந்தநோய்த் திரும்பாரே. ()

### பஞ்சதீபாக்கினிலேகியம்.

பாரப்பா பஞ்சதீ பாக்கினி யென்னப் பகருகின்ற லேகியந் தான் சொல்லக்கேளு, ஆரப்பா திரிகடுகு யேலஞ் சீரம் அப்பனே வகையொன்று பலந்தானொன்றும், பேரப்பா விளவறுப்பாய்ச் சூர ணித்துப் பெரிதான வாவின்பாற் படியிரண்டு, சேரப்பா பனை வெல்லம் பலந்தானெட்டுச் சிறப்பாகக்கரைத்ததிலேபாகுசெய்யே.

செய்யப்பா சூரணத்தை தூவிக்கிண்டு திறமான கிதநெய்தா னூரியுழக்கு, கையப்பா விட்டதிலே கிண்டிக் கிண்டிக் கருவாக

(1) அசுவகெந்தி - அமுக்கரு.

மெழுகுபத மாகவாக்கி, மையப்பா பாக்களவு மிருநேரந்தான் மைந் தனே மண்டலந்தான் கொண்டாயானால், தையப்பா தீருகின்ற வியாதிகேளு தருவான வாய்வோடு வாதமாமே. (78)

ஆமப்பா வுஷ்ணங்கள் பித்தவாயு அப்பனே சரீரத்தி லுளைவு குத்து, போமப்பா வலிகடுப்பு மெரிச்சல்பேதி பொருமலுடன் வாயுவென்ற கிரகணிதீரும், வேமப்பா வலிகடுப்பா மஸ்திவெட்டை விருந்தான வாந்தியெல்லாம் விழலாய்போகுஞ், சாமப்பா வாக்கி னிட தைலமூழ்கு சகலசுரம் விட்டோடுஞ் சார்புபாரே. (79)

கண்டங்கத்திரிலேகியம்.

சார்வான லேகியந்தா னென்றுகேளு சாற்றுகிறேன் கண்டங் கத்திரி தூக்கம்பாரு, ஆர்வாக விடித்ததனைத் தூணிநீரில் அப்ப னே யெட்டொன்றாய்க் காய்ச்சிவிட்டுச், சேர்வாகப் பனைவெல்லம் பலந்தான் பத்துச் சேர்த்ததிலே பால்படிதான் பாகுசேரில், தார் வாக திரிகடுகு திரிபலாதி தருவான வாய்விளங்க மோமமாமே. ()

ஓமமொடு குரோசானி லவங்கப்பட்டை உத்தமனே சீரகமு நறுக்கு மூலம், நாமமோ டத்திதிப் பிலியுங் கோஷ்டம் நலமான தாளிசமு மக்கிராகாரம், வோமமொடு வகையொன்று பலந்தானெ ன்று வளமாகச் சூரணித்துப் பாகிற்றூவி, சேமமோ டாவினெய்ப் படிகால்விட்டுத் தரமான தேனதிலே படிகால் வாரே. (81)

வார்த்ததிலே கிண்டியது மெழுகுபோலே வளமான லேகியம் பாக் களவு வீதம் பார்த்ததிலே யிருநேரங் கொண்டா யானாற் பறக்குமடா கழவாதம் பாரிச் சூலே, தேற்றியே கிருமியொடு புழு க்க ளெல்லாந் தோரத்தை விட்டோடுங் கர்ப்பவாயு, சாற்றதிலே யுஷ்ணநோய் பித்தமெல்லாஞ் சாராது சித்தாதி லேகியங்கேளே.

சித்தாதிலேகியம்.

கேளப்பா வாறுதிங்கள் சென்ற காடி கிருபையாய் படிபத் தும் புளித்த மோரும், நாளப்பா படிபத்துக் கூடவிட்டு நலமான புளியிலைதுக் கிடித்துப் போட்டுக், கேளப்பா துருப்பிடித்த விரும் பெடைதான் போட்டு கொதிக்கவைத்து எட்டொன்று மிடித்துக் கொண்டு, வேளப்பா கையாவீர் படிதா னிரண்டு விருகான விஞ்சி ரசம் படிதா னென்றே. (83)

ஒன்றான பழச்சாறு படிதா னென்று உத்தமனே நெருஞ்சி ரசம் படிதா னென்று, சென்றான சிறுகீரை படிதானென்று செரு ப்படிதான் படியொன்று தென்னம்பு நீர், பண்டான படியொன்று

கீழாநெல்லி புதரூமத் படியோன்று கூடச்சேர்த்து, கண்டர்ன வாவின்பால் படிதானுலு கருவான பனைவெல்லம் பலந்தான் பத்தே.

பத்தாகக் கரைத்துவிட்டுப் பாகுசேரில் பக்குவமாங் கடைச்சரக்கு திரிகடுகு வோமம், நத்தான திரிபலை கோஷ்டமாஞ்சில் நலமான சீரகம் வாலமிளகு ஏலம், கைந்தான கிராம்புதா லிசப்பத்திரி கருவான லவங்கத்தோ லானைத்திப்பிலி, ஓத்தான பலமொன்று தூக்கிக்கொண்டி உருவாக யிளவறுப்பாய்ச் சூரணந்தான் செய்யே. 85

செய்யப்பா முன்பாகிற் றாவிக் கெண்டிச் செரியாக வாவினெய் படிதான்வாரு, கொய்யப்பா தேனதிலே படிதான்வாரு குழம்பாக லெகியத்தைப் பதனம்பண்ணு, பையப்பா விருகமுஞ்சி யிருநோவ் கொள்ளப் பறக்குமடா பாண்டுவகை யெல்லாந் தீரும், மையப்பா பித்தவெட்டை பித்தவாய்வு மயக்கமோ டக்கினியாமந்தந்தானே.

மந்தமொடு வெளுப்பான தேகமெல்லாம் வண்டுபோல் சுழுக்குமடா மண்டலத்தில், அந்தமகோ தரம்பீலி கையால வாயு அப்பனே சோகையொடு கிராணிமூலம், பொந்தமா முடம்பெரிப்பிளைப்போடீளை பொருமலுட னுப்பிசங்க ளிரைச்சல்திரும், பந்தமாம் பத்தியங்கள் நன்றாய்க்காத்து பக்குவமா மண்டலத்தில் சொல்லக்கேளே. (87)

மகாவில்வாதிலேகியம்.

சொல்லக்கேள் புலத்தியனே யின்னமொன்று சுருக்காக நோய்க்கெல்லா மகாவில்வாதி, வல்லக்கேள் வில்வத்தின் மூலமப்பா வளமாகப் பலம்நூறுவெட்டிவந்து, நல்லக்கேள் விலாமிச்சை வகை பாதிரி நலமாக நன்னாரி பருவினாவும், அல்லக்கேள் சிற்றாமல்லி பேராமல்லி அழகான சிறுவிளா வேறுமாமே. (88)

ஆமப்பா சிறுவகை முன்னையோடு அப்பனே முசுமுசுக்கைகொடு வேலிதேற்றான், நாமப்பா வகையொன்று பலமூன் றாகும் நலமாகவிடித்தே யிருதூணிநீரில், வேமப்பா வெட்டொன்றாய் வடித்துக் கொண்டு வெறுளாதே கொம்மட்டிப் பழச்சாறு நிஞ்சி, காமப்பா சாறுபடி யொன்று விட்டுக் கலங்காதே சர்க்கரை சேர் நாலுமாமே. (89)

ஆமப்பா வாவின்பால் படிதான் ரண்டு அப்பனே ரரைத்ததெல்லாம் பாகு சேரில், போமப்பா திரிகடுகு திரிபலாதி புகழான லவுங்கமோ டேலங்கோஷ்டம், ஈமப்பாமதுரகெந்தஞ் சீரம்ரண்டு

நலமான விளங்கமொடு சகஸ்திரபேதி, வாமப்பா தாளிசம் செண்பகப்பூ அக்கிராகாரம் வளமான மல்லிவிளா வரிசிநேதக்கே. ()

தேக்கான முந்திரிகை பேரீச்சு வில்வந் திறமான வாலுளுவை மரகில் சிறுநாகம், பாங்கான நாகணமும் பருத்திவித்தும் பகருமேவ (1) னிம்பவித் திலுப்பைப்பூவு, தூக்கான வகைபொன்று பலமொன்றுகச் சூரணித்து பாகிலே தூவிக் கிண்டி, சீக்கான தேனதிலே படியளவை தான் விட்டு நினைவாக வாவிசெய்படி யளவை தான்வாரே. ()

வார்த்தப்பா மெழுகுபோல் கிண்டிக்கிண்டி வளமான லேகியத்தைப் பதனம்பண்ணு, கோர்த்தப்பா லேகியத்தைப் புன்னைக்காயளவு கொண்டுவா விருநேரம் தீரும் நோய்கள், சாற்றப்பா சுவாசமுடனரோசியங்கள் தவராதே வீக்கமொடு சுத்தியேரிப்பாண்டு காத்தப்பா விஷபாண்டு வயிற்றெரிச்சல் கனமான வுப்பிசங்கள் கிராணிபோமே. (92)

போமப்பா கைகாலி லெரிவு காந்தல் புகலும்வெள் ளோக்காளமன்ன தோஷம், நாமப்பா சூலையொடு சயந்தாவெட்டு நலமான சுரங்களறு பத்துநாலுங், தாமப்பா பீத்தமென்ற நாற்பதுந்தான் தளமான வஸ்திசுர மான வெல்லா, ஆமப்பா வதிசார முள்ளில் ரோக அருளான லோகவைத்துக் கொள்ளுகொள்ளே. (93)

கூழ்பாண்டலேகியம்.

கொள்ளவே கூழ்பாண்ட லேகியந்தான் குணமான கூழ்ப்படி சாறுபடி நாலு, விள்ளவே தாழையிட விழுதின் சாறு விருதான படியொன்று சென்னம்பூ வொன்று, தள்ளவே பழச்சாறு படி தானென்று தளமான வாவின்பால் படி தான் ரண்டு, பள்ளவே சர்க்கரை தான் பலமோபத்து பதருமற் கரைத்திதனைப் பாகுசேரே.

சேருமே சீரமல்லி கோஷ்டம் திறமான மிளகுமா சிக்கா யேலம், காருமே சாதிக்கா சாபத்திரி கருவான மதுரமொடு தாளிசந்தான், வாருமே ஒருவகைக்குப் பலமொன்றுக வகையாக சூரணித்துப் பாகிற்றூவி, சேருமே தேனின்படி யளவை தான்விட்டு நினைவாகக்கூழ்போலே கிண்டிவாங்கே. (95)

வாங்கியே புன்னைக்கா யளவுவீதம் வளமான லேகியத்தைக் கொண்டாயானல், நீங்குமோ காமாலை சோகையெல்லாம் நீங்காமலஸ்திசுரமஸ்திவெட்டை, தாங்கியதோர் பிரமியங்கள் வெள்ளவீழ்தல் தனமாகும் தேசபுஷ்டி விந்துவூறும், பாங்கியே கிஷ்ணநோய் நீர்சுறப்பும் பாக்கும்புளி புகையிலைத் தள்ளிகொள்ளே. (96)

சரபங்க வில்வாதிலேகியம்.

கொள்ளவே யின்னமொன்று சொல்லக்கேளு குணமான சரபங்கவில் வாதிலேகியம், விள்ளவே வில்வவேர் வமடகாவேர் விரு

---

(1) நிம்பவித்து - வேப்பங்கொட்டை.

தான சங்கம்வேர் வகைக்குத்தூக்கு, கொள்ளவே கூறுகிற சிற்று மல்லி திறமாக பேர்மல்லி (1) கூந்தல் முள்ளி, கள்ளவே சாரணை வேர் கண்டங்காலி நலமான விலாமிச்சை சிந்தில்தானே. (97

தானென்ற கொடிவேலி பொன்முசுட்டை தலமான நன்னாரி சிறுதேக்கப்பா, வானென்ற மூலிவகை பதின்மூன்றுந்தான் வளமான மலமஞ்சு யிடித்துநைய, வேனென்ற வாற்றுநீர் தூணிவிட்டு விளங்கவே பெட்டொன்றாய் நிறுத்திக்கொண்டு, கானென்ற கன்னல் வெல்லஞ் சேர்தானுலும் கருவான வாவின்பால் படியிரண்டு சேரே. (98)

சேர்த்தப்பா கரைத்ததிலே பாகுசெய்து திறமான திரிகடுகு திரிபலாதி, வார்த்ததிலே ஏலம்புமேல மிருசீரகந்தான் வளமான கோஷ்டந்தாளிசபத்திரி, தார்த்ததிலே யோமமரன் டாத்தை கண்டு தளமான கொத்தமல்லி லவங்கப்பட்டை, ஆர்த்ததிலே யக்கிராகார மாத்தைதிப்பிலி அப்பனே வால்மிளகு சாதிக்காயாமே.

ஆமப்பா வகையொன்று பலமொன்றாக அப்பனே யிளவறுப் பாய்ச்சூரணித்துச், சேமப்பா பாகிலே தூவிக்கிண்டித் திறமான தேன்படிநெய் யரைதான்விட்டு, நாதப்பா குழம்புபோல் வாங்கி வைத்து நலமாகக்கழஞ்சிநிறையிருநேரங்கொள்ள, காமப்பா பித்த வெட்டை பாண்டுதீருந்தவறுண்டு போகுமடா சயமெட்டுந்தானே.

தானென்ற குன்மமெட்டுங் கிராணியாறுந் தடமான வாய்க்சப்பு வெள்ளோக்காளா, தேனென்றவாயூர லக்கினிமந்தந் திறமான சூலையொடு கைகால்காந்தல், பானென்ற பித்தமது நாற்பதுந்தான் பறக்குமடா மண்டலத்தில் பரிந்துகொள்ளு, வேனென்ற பத்தியந்தான் புளிகசப்பு விளக்கியதோர் புகையொடு பெண்ணுந் தள்ளே.

தள்ளப்பா திரிலோகம் வைத்துக்கொள்ளு தளமான வாலரசச் செந்தூரந்தான், கொள்ளப்பா லோகசெந்தூரந்தானுங் குறையாமற் பணவெடைதான் வைத்துக்கொள்ளு, தள்ளப்பா பித்தமென்றதெல்லாம்போகுந் தருவான சேத்துமங்கள் தொண்ணூற்றாறும், விள்ளப்பா கடல்புக்குங் கண்டுக்கொள்ளு விருதாக வின்னமொரு சேதிகேளே. (102)

கண்டங்கத்திரிலேகியம்.

கேளப்பா கண்டங் கத்திரியான செடிதான லேகியந்தான் சொல்லக்கேளு, நாளப்பா வாற்றுமுள்ளி பலந்தானாறு நலமான

(1) கூந்தல - முத்தியாகூந்தல.

கரிமுள்ளியதற்குப்பாதி, தாளப்பா சிற்றுமுட்டி தளமான மிளகரணை கொடிவேலிகளாகவும், ஆளப்பா வாதண்டச் சிறுகாஞ்சேரி அப்பனே விலாமிச்சை முட்கா வேளையாமே. (103)

ஆமப்பா கோரையுட னுத்தாமணியும் அப்பனே கழற்கொடிபு மாமரவி லிங்கம், தாமப்பா வகைபொன்று பலமொன்றாகத் தவறும விடித்தேயிரு தூணி நீரில், வேமப்பா வெட்டொன்று யிறுத்து வாங்கி விருதான கொம்மட்டிப் பழசாறு, தாமப்பா படியரையுங்கூடவிட்டுத் தளமான வாவின்பால் படிதான் ரண்டே.

இரண்டான சர்க்கரைதான் பலமுமைந்து நினைவாகக் கரைத்ததிலே பாகுசேரில், கண்டான கடைக்கு சொல்லக் கேளு கருவான திரிகடுகு திரிபலாதி, நன்றான சிங்கிபிரு வாதந் தானும் நலமான வார்த்தை யக்கிரா லவங்கப்பட்டை, பின்றான லவுங்கஞ் சரதிக்காய் பத்திரியுங் கூட்டே. (105)

கூட்டுவாய் வகைபொன்று பலமொன்றாகக் கூசாம விளவறுப்பாய்ச் சூரணித்து, காட்டுவாய் பாதிலே தூவிக்கிண்டி நலமாகத் தேன்படிநெய் யரைதான்விட்டு, காட்டுவாய் மெழுகுபோல கிண்டிக்கிண்டிக் கசக்காமல் பீங்கானில் வழித்துவைத்து, தீட்டுவாய் லேகியந்தான் புன்னைக்காய்விதம் திறமாக மண்டலத்தில் தீரும் நோய்கேள். (106)

கேளுதான் சயமெட்டும் குன்மமெட்டும் கெடியான வாதமென்றன்பதும்போம், நாளுதா னிப்பீனை விளுநீர்கோவை நாடாது இசிவுமுதல் கழல்வாதங்கள், தாளுதான் கெர்ப்பவெட்டை கெர்ப்பச்சூலை தவறுண்டுபோகுமது புழுக்களெல்லாம், ஆளுதான் தாளகமும் லோகங்கூட்டி அடைவாக்கொண்டுவரத் தீரும்பாரே.

கபாடலேகியம்.

பாருமே கபாடலே கியத்தைச் சொல்வேன் பண்பான நாவலொடு வாசி வத்தி, சேருமே கருங்காலி யொதியம் பட்டை திறமாகப் பலம்பத்து நிறுத்துக் கொண்டு, சாருமே யிடித்துவைத்தூணிநீரில் தளமாகவடுப்பேற்றி யெட்டொன்றுக்கி, வாருமேபனை வெல்லம்பலந்தான்பத்து வளமாகக்கரைத்ததனிற் பாகுசெய்யே.

பாகிலே தூவுதற்கு மருந்து கேளு பதறுமல் கஞ்சாவைச் சுத்தி செய்து, பாகிலே பலயொன்று தூக்கிக்கொண்டு பாங்கான மிளகுசுக்கு சீரகமுங்கூட, பாகிலே யோமமொடு குரோசானி ஓமம் பருவமாய்ச் சிங்கிகாட் டாத்திப் பூவும், பாதிலே வால்மிளகு சிறுநாமப்பூ பக்குவமா யல்லியோ டேலமாகும். (109)

ஆருமே ஏிராம்புடனே சாதிப்பத்திரி அடைவான சாதிக்காம் விடையந்திப்பிலி, நாருமே வகையொன்று பலமொன்றாக நலமாக விளவறுப்பாய்ச் சூரணித்து, வேகுமே பாகிலே தாவியேதான் வெகுசுறுக்காய்த் தேனெய்யும் விடடுக்கிண்டி, தாகுமே பீங்கா னில் பதனப்பண்ணித் தப்பாமல் மண்டலந்தான் பாக்களவு கொள்ளே. (110)

அளவாகக் கொண்டுவரத் தீரும் நோய்கள் அதிகமுள்ள சூசிகா கிராணிவாயு, பருவான கடுப்புமுதல் பாண்டுகிராணி பாங் காக பேதியோ டுஷ்ண வாயு, களவாக மூலத்தின் கிராணி வாய்வு கனேகாணு தோடமெது மற்றவாயு, வளமாகக் கிராணியெல்லாந் தீரும் தீரும் மார்க்கமுட னின்னமொரு வரிசைபாரே. (111)

திப்பிலிரசாயனம்.

பாருமே திப்பிலி ரசாயனஞ் சொல்வேன் பகருகின்ற திப்பி லியும் பலந்தான் பத்து, சேருமே மிளகுமஞ்சு சுக்கு மஞ்சு திற மான விருசிர மோமம் ரண்டு, ஆருமே யாத்தைரண்டு தாளிசு பத் திரி அடவான லவங்கப்பத் திரியும் பட்டை, காருமே திரிபலை லவங்க மேலங் கனமான கொடிவேலி பலமொன்று தூக்கே.

தூக்கியே யிளவறுப்பாய் சூரணித்துச் சுகமான சர்க்கரை தான் சமனாய் கூட்டி, தாக்கியே தேன்விட்டுப் பிசைந்து கொண்டு தப்பாமல் வெருகடிதான் கொள்ளும் போது, தேக்கியே யிளைப் போடே யீளைகாசம் திறமான சேத்துமநோய் தொண்ணூற்றும், நீக்கியே யுத்தரத்தின் வாயுவெல்லாம் நீங்கிவிடு மண்டலத்தில் நினைவாய் பாரே. (113)

மஸ்துமிரசாயனம்.

பார்த்திடுவாய் புலத்தியனே மேகவகைதீரப் பண்பான மஸ் துமிர சாயனஞ் சொல்வேன், சேர்த்திடுவாய் சீனமுத லமுக்கரு வேர் திறமான வகையொன்று பலம்பத்தாகும், சாற்றிடுவாய் நில ப்பனைவேர் பலந்தானைந்து தவமான தண்ணி விட்டான் பலந்தரன் ரண்டு, ஆற்றிடுவாய் நன்னாரி சங்குமூலம் அன்பான திரிகடுகு திரிபலையு மாமே. (1[illegible]4)

ஆமப்பா லவங்கத்தோல் லவங்கப்பத்திரி அப்பனே சிறுநா கம் வாய்விளங்கம், போமப்பா மல்லியிரு சீரமோமம் புகழான குரோசானி அரத்தைகெந்தம், காமப்பா சிறுதேக்கு கண்டங்காலி நலமான கொடிவேலி விலாமிச்சை மூலம், தாமப்பா தக்கோலம் வால் மிளகிருேடு தளமான முந்திரிகை பேரீச்சுக் கூட்டே.

கூட்டப்பா வெட்பாலை தாமரைக் கிழங்கு குலமான சாதிக் காய் கிரும்புபத்திரி, நாட்டப்பா கருவேம்பி நிலவகைக்கு நலமா

கப் பலமொன்று நிறுத்துக் கொண்டு, காட்டப்பா விளவறுப்பா ய்ச் சூரணித்துக் கருவான குங்குமப்பூ கோரோசனை கர்ப்பூரம், வாட்டப்பா கழஞ்சுநிறை கூடச்சேர்த்து, வளமான சர்க்கரை சேர் நாலுவாங்கே. (116)

வாங்கியே வாவின்பால் படிதானாலு வளமான சர்க்கரையைக் கரைத்துக் கொண்டு, பாங்கியே பாகுபத மாகும்போது பதறாதே சூரணத்தை காய்ச்சிக்கொண்டு, தேங்கியே தேன்படிதா னொன்று வாரு திறமான வாவினெய் வரைதா னப்பா, வாங்கியே மெழுகு போல் கிண்டி கிண்டி வளமான பீங்கானில் பதனம் பண்ணே.

பண்ணப்பா விருநேரம் பாக்களவு கொள்ளப் பரிவுடனே தீரு கின்ற வியாதிகேளு, புண்ணப்பா கிராந்தியொடு சூலை தீரும் புது மையாங் கண்டத்தில் மாலைதீரும், நண்ணப்பா வாய்வோடு வாத மெல்லாம் நாடாது பிரமிபங்கள் விங்கப்புற்று, தண்ணப்பா சேத் துமரோம் தொண்ணூற்றாறுந் தவறுண்டு போகுமடா பத்தியங் காணே. (118)

சவுபாக்கியசுண்டு.

காரப்பா வுலகத்தோர் நோய்க ளெல்லாங் களைக்குமடா சவு பாக்கிய கண்டி யென்றால், சேரப்பா சுக்கதுதான் பலந்தானெட்டு நினைவாக மேற்றோலைச் சீவிப் போட்டு, சாரப்பா மொச்சைவிதப் பிரமாணந் நான் தளமாக வேநறுக்கிப் புதுசட்டிக்குட், சேரப்பா செம்முள்ளிச் செந்திராயும் திறமான முறுக்கிலையுங் கரிசாலையாமே.

ஆமப்பா சிறுசெருப்பு சாற்றிலாட்டி அப்பனே சாறுவகை படிகாஸ்வீதம், நாமப்பா புதுசட்டிச் சுக்கில்விட்டு நலமாக வெவ் வேறே பாவிபுலர்த்தித், தாமப்பா விடித்து நன்றாய்ச் சூரணித்து தனமாக வடிகொண்டே யப்பால்வைத்து, போமப்பா தக்கோலம் வாலுளுவைவித்து புகழான குகைநீறு (1) கரியபோளங் கூட்டே.

கூட்டப்பா வாய்விளங்கந் தான்றிக்காய் நெல்லி கூறான திப் பிலியுந் திப்பிலிமூலம், நாட்டப்பா வகையொன்று பலந்தான் வாங்கி நலமாக விளவறுப்பாய்ச் சூரணித்துக், கூட்டப்பா வமுக்கு பொன் முகத்தை குருவான கண்டங் கத்திரி நன்றுடு, நீட்டப்பா நிலப்பனையும் வகையொன்றுக்கு நினைவாகப் பலமிரண்டு நிறுத்துக் கொள்ளே. (121)

கொள்ளப்பா சுத்திசெய் திடித்துத் தூளாய்க் குணமாக வடி கொண்டு வைத்துக் கொண்டு, விள்ளப்பா மூலவரைத் தூளொன் றாய்க் கூட்டி விளங்கவே சர்க்கரையைச் சமனாய்வாங்கி, தள்ளப்பா வாவின்பால் படியிரண்டில் நலமாக சர்க்கரையை கரைத்துக்கொ ண்டு, அள்ளப்பா வடுப்பேற்றிப் பாகமானா லப்பனே முன் தூளை கொட்டிக் கிண்டே. (122)

(1) கரியபோளம் - கறுப்புக்குங்கிலியம்.

கண்டப்பா ஆனாக நன்மூய்க்கின்றிக் இருமையாய்ப் புதுக்க லசத் தணிலடைத்து, கண்டப்பாவெருகடிதா னிருநோரங்கொள்ள நலமாகத்தீருநோய் நவில்கீலேது, கண்டப்பா கிராணிவகை யெல்லாந்தீரும் கருவானபிரமியங்கள் சூகிராவா, கண்டப்பா வாதமொடு பித்தமெல்லாங் காணுமலோடுமடா கண்டுகொள்ளே. (123)

கொள்ளவேயந்திரமாம்வாயு தீரும் சூரணமேகவகைவா தருலே, கொள்ளவே யந்திரமாய் கந்தந்தீரும் கர்ப்பான வாயூறல் வாய்கசப்பு, கொள்ளவே வயித்தி லுள்ள வியாதியெல்லாம் குடிபோகுஞ் சவுபாக்ய சுண்டிகண்டாய், கொள்ளவே புளிகசப்புப் பத்தியந்தான் சூரணபுகையோடு பெண்ணுந்தள்ளே. (124)

அக்கினிச்சூரணம்.

தன்னப்பா வக்கினியாஞ் சூரணத்தைச்சொல்வேன் தளமான கொடிவேலி திரிகடுகு சீரமும், விள்ளப்பா சிறுதேக்கு யானைத்திப் பிலிப்புக்கோஷ்டம் விளங்கியதோரிந்துப்பு வகைபொன்று பலந் தான், நள்ளப்பா காயங்கால் வசம்புகால்தான் நலமான கடுகுபொடி மறைப்பலந்தான்கூட்டித், தெள்ளப்பாவிளவுறுப்பாய்ச் சூரணித்து திறமானசீனிசமங் கூட்டிக்கொள்ளே. (125)

திரிதராட்சதசூரணம்.

கொள்ளவே வெருகடித்தூள் வெந்நீரிற்கொள்ளக் சூரணகிரா ணிவகை யுதிரவாயு, பள்ளவே மூலவாயுவாதமெல்லாம் பறக்குமது திரிதராட்சதசூரணங்கேள், துள்ளவே முந்திரிகைப் பேரீச்சம்பழந் தான தளமானவதிமதுரம் மூக்காவேளை, நள்ளவே நெற்பொரியு(1) முத்தக்காசு நலமானவேலமொடு இராம்புகூட்டே. (126)

கூட்டுவாய் கொத்தமல்லி மிளகுவேலி சூரண திப்பிலியுங் கூகை லவங்கப்பத்திரி, ஆட்டுவாய் வகையொன்று பலமொன்றாக அப்பனே சூரணித்துச் சர்க்கரையைக்கூட்டி, வேட்டுவாய் வெருகடிதான் தேனிற்கொள்ள வெகுசுறுக்காய்ச் சொல்லுகிறேன் விளம்பக்கேளே. (127)

கேளப்பா யந்திரவாய்வு பாண்டுரோகம் கெடிதான தாபசுர மயக்கம் தூக்கம், வாளப்பா பித்தவகை நாற்பதுந்தான் வளமான வரோசிகங்க ளன்னத்தோஷம், நாளப்பா வுஷ்ணநோய் சேத்துமங்கள் நலமானவக்கினியா மந்தவாய்வு, தாளப்பாகையெரிவுகாந்த லெல்லாம் தவறுண்டுபோகுமடா செப்பிற்கொள்ளே. (128)

---

(1) முத்தக்காசு - கோரைக்கிழங்கு.

## அசுவகெந்திசூரணம்.

கொள்ளவே யசுவகெந்தி சூரணங்கேள் சூலமான லவுங்கமொன்று நாரப்பூண்டு, தள்ளவேயேலம்வாள் மிளகோரெட்டு தளமான திப்பிலியிரெட்டுசுக்கு, விள்ளவே முப்பத்திரண்டுங்கூட்டி விசையான வசுவகெந்தி யறுபத்துநாலு, நள்ளவேசுத்திசெய்துலர்த்திக் கொண்டு நலமாக வறுப்பாய்ச் சூரணந்தான்செய்யே. 129

செம்பப்பாசமனுகச் சர்க்கரையைக்கூட்டித் திறமான வாவின் பால் நெய்யிற்கொள்ள, கையப்பாவெருகடிதான் கொள்ளும்போது கனமான மேகவகை யெல்லாந்தீரும், மெய்யப்பாவஸ்திசுரம் வெட்டைபோகும் மேலானசுவாசமோ டீளைபோகும், தையப்பா மேகத்தின் பாண்டுபோகும் தனமானவூறலெல்லாஞ் சாராதென்றே. ()

## கண்டாத்திரிசூரணம்.

சாரவேகண்டாத்திரிசூரணஞ்சொல்வேன் கருவானவிஞ்சியது பலந்தான்பத்து, சேரவேமேற்றோலைப் போக்கிப்போட்டுச் சிறுகவே நறுக்கியதைப்பழச்சாறூட்டித், தாரவேநாளொன்று ஊறப்போட்டுத் தவறாமல் மறுநாள்தான் ரவியுலர்த்தி, ஆரவே சீரகமும் பலந்தானொன்று அப்பனே முன்போல பழச்சாறூட்டே. (131)

ஊட்டியே மறுநாள்தான் காயப்போட்டு உத்தமனே மிளகொடுதாளிசப்பத்திரி, நாட்டியேதிப்பிலியின் மூலங்கிராம்பு நலமாக கோஷ்டமொடு வாய்விளங்கம், வாட்டியே யிளவறுப்பாய்ச் சூரணித்து வளமான சர்க்கரைதான் சமனுய்க்கூட்டி, நீட்டியே வெருகடிதான்கொண்டாயானால் நீங்கிவிடும் பித்தமுதல் வாய்வு போமே. (132)

போமப்பா வரோசிகங்க ளன்னத்தோஷம் புகழீனபித்தவெட்டை போருமல்விம்மல், நாமப்பாவாயுவொடுவாதமெல்லாம் நாடாதுசூலையெல்லா நலினமாகும், சேமப்பாவயிற்றிலுள்ள வியாதியெல்லாந் திறமாகத்தீருமடா பத்யங்கூறுவேன், நாமப்பாவுலகோர்க்கா யிரங்கிச்சொன்னேன் நலமான சூரணத்தை நாட்டிப்பாரே. (133)

## தாளிசப்பத்திரிச்சூரணம்.

நாட்டியேசொல்லுகிறேன் புலத்தியனேயையா நலமானதாளிசப்பத்திரிச் சூரணந்தான், காட்டியேதாளிசப்பத்திரி பலந்தான் பத்து கருவானதிரிகடுகுதிரிபலாதி, நீட்டியே கோஷ்டமோடக் கிராகாரம் நினைவாகவத்திதிப்பிலிசீரகம், கூட்டியே கொத்தமல்லி வாய்விளங்கங் கூறான கிராமயேலஞ் சாதிக்காயே. (134)

காயோபெத்திரிபு மாஞ்சில்சோம்பு கருவாவால்மிளகுலவங்
கப்பட்டை, காயோடுசீவையெல்லாம்பலமொன்றாகத் தவறாமல்சூர
ணித்துதடியேகொண்டு, சேயோடுசர்க்கரைதான் சமனாய்க்கூட்டித்
திறமாகவிசைந்துகொண்டு வெருகடிதானேரம், வாயோடுமண்டலந்
தான்கொண்டாயானால் வாங்குமடா க்ஷயகாச மீளாபோமே. (135)

போமடா வஸ்திசுர மஸ்திவெட்டை பொறுக்காத தீர்க்காசம்
புண்ணாகுநெஞ்சில், நாமடா பித்தவெட்டை பித்தம்பாண்டு ஏடாது
கிராணிவகை யெல்லாந்தீரும், தாமடாவரோசிகங்க ளன்னத்தோ
ஷம் தளராதவிம்மலோடு விக்கல்கக்கல், காமடாகைகாலி லெரிவு
காந்தல் சாந்தமாம் புளியோடு புகையுந்தள்ளே. (136)

## பஞ்சதீபாக்கினிச்சூரணம்.

தள்ளவே பஞ்சதீபக்கினியென்னுந் தளமான சூரணத்தைச்
சொல்லக்கேளு, விள்ளவே திரிகடுகோட்டேலஞ்சீரகம் விதமாகவகை
யொன்றுபலமொன்றாக, நள்ளவேயிளவறுப்பாய்ச் சூரணித்து நல
மாகவடிகொண்டு சர்க்கரைதான்சேர்த்துத், தள்ளவேதேனெய்யில்
வெருகடிதான்கொள்ளத் தாமாகத்தீரும்நோய் செப்பக்கேளே.

செப்புகிறேனுஷ்ணநோய்சூலைவாய்வு சேர்ந்தபித்தவாயுவோடு
சிலேத்மரோகம், தப்புகிறேன்பொருமலொடு செரியாமந்தம் தள
ரானமயக்கமொடு கிறுகிறுப்பு, வெப்புகிறேனஸ்திசுர மஸ்திவெட்
டை வேறானமூலத்தின் வாய்வுதீரும், செப்புகிறேன் புளிகசப்பு
புகையுந்தள்ளு திறமான சூரணத்தைத் தெரிந்துகொள்ளே. ()

## நிலவாகைச்சூரணம்.

நலமாகச்சூரணமொன்று சொல்லக்கேளு நன்றான நிலவாகை
சுக்குங்கூட்டிப், பிலமாக மிளகுவாய்விளங்கமோமம் பேரானவகை
க்குவொருபலமேதூக்கிச் சிலமாகரவிமுகத்திலுலரப்போட்டுச் சித
றாமலிடித்துச் சூரணந்தான்செய்து, நலமாகச்சர்க்கரைதான் சம
னாய் கூட்டித் தவறாமலிருநேரங் கொண்டாற்கேளே. (139)

கேளப்பாவாயுவென்ற தெல்லாம்போகுங் கெடியானபித்தமெ
ல்லாங் கீழ்நோக்கிப்போகும், வாளப்பாவுஷ்ணநோ யெல்லாந்தீரும்
வளமானபொருமலொடுவிம்மல்தீரும், காளப்பா சேத்துமரோயெல்
லாந்தீரும் நலமானவிக்கலொடுவாந்திதீரும், தானப்பாவுடம்பெரிவு
அவாசகாசந் தவறுண்டுபோகுமடா சாற்றக்கேளே. (140)

சாற்றுகிறேனீரருகல் மலபாதங்கள் தளசாதவயிற்றுவிம்ம லிருமல்தீரும், தேற்றுகிறேன்குன்மமெட்டு மகோதரங்கள் தெளிவான வாயுவெல்லாந் தீரும்தீரும், ஆற்றுகிறேன் கெர்ப்பவலி கெர்ப்பரோகம் ஆச்சரியம்புழுக்களெல்லா மகன்றுபோகும், சாற்றுகிறேனிவந்நீர்க்கொண்டாயானால் கலங்காதேவயிற்றிலுள்ளவியாதிபோமே.

வல்லாரைச்சூரணம்.

போமப்பா சூரணமொன்று சொல்லக்கேளு புதுமையாம் வல்லாரைப் பாவிற்போட்டு, நாமப்பாவவித்துலர்த்திக் காயப்போட்டு நலமாகச்சூரணித்துப் பலம்பத்தானால், தாமப்பா கிராம்பேலஞ் சாதிக்காயும் தளமானபத்திரியுமாசிக்காயும், தேமப்பா தாளிசப்பத்திரிதிரிபலாதி திறமாகவிளவறுப்பாய்ச் சூரணந்தானசெய்யே. ()

செய்யப்பா வகையொன்று பலந்தானென்று திறமாகவிரண்டு மொன்றாய்ச் சேர்த்துக்கொண்டு, பையப்பா சர்க்கரைதான் சமமாய்க்கூட்டிப் பதனமல்வெருகடிதா னெய்யிற்கொள்ள, தையப்பா மேகமெல்லாம் தவறுண்டேபோய் சரீரத்திலுள்ளதெல்லாஞ் சாந்தமாகும், கையப்பாபிரமியங்கிரந்தியெல்லாம் கனமானகுஷ்ணநோய் காணாதென்றே. (143)

காணாதுநீரருகல் நீரெரிப்புகண்ணெரிவு கண்புகைச்சல்காணாதோடும், தோணாதேயுடம்பெரிவுமூலச்சூடும் சுருக்கானநீர்ச்சூடும் குளிர்ந்துபோகும், நாணாதுமதுமேகந் தந்திமேகம் நாடராது ஷயரோகம் ஈளினமாகும், கோணாதுதேகமெல்லாங் குளிர்ச்சிகாணுங் கொண்டுவாவப்பிரேகம் வைத்துக்கொண்டே. (144)

சஞ்சீவிச்சூரணம்.

கொள்ளவே சஞ்சீவிச்சூரணத்தைச்சொல்வேன் குணமானசீந்திலடித்தண்டைவாங்கி, விள்ளவே மேற்றோலைவாங்கிப்போட்டு வெருளாதே நறுக்கியதையுலரப்போட்டுக், கள்ளவே யிடித்துநன்றாய்ச் சூரணித்துக் கருவாகவடிவுகொண்டு படித்துள்வாங்கி, நள்ளவே மூன்றாத்தில்சுத்திசெய்து நலமானபொடிபடிக் காவின்பாற்படியே.

படிபாகவரைப்படிதான் சீனிபோட்டுப் பாங்காகரவியுலர்த்திக் காய்ந்தபின்பு, அடியாகவுரலிலிட் டிடித்துக்கொண்டு அப்பனே சாதிக்காய் சாதிபத்திரி கடியாக வால்மிளகேலங்கிராம்பு கசகசா தாளிசமு மாசிக்காயும், வடிவாகவிளவறுப்பாய்ச் சூரணித்து வளமாக வகைக்கொரு பலந்தான்கூட்டே. (146)

கூட்டியேபிரண்டுமொன்றுஞ் சேர்த்துக்கொண்டு குறைப்பாம லாறுபலஞ்சீனிசேர்த்து, நாட்டியவெருகடிதா னெய்யிற்கொள்ள நலமாகத்திருநோய் நவிலக்கேளு, தாட்டிசமமேகநீரிருபதும்போம் தளமான பிரமியங்கள் மேகமெல்லாம், வாட்டியே வற்றியதோர் தேகமெல்லாம் வளமாகுமஸ்திசுரம் வெட்டைபோமே. (147)

போமப்பா மூலத்தின் சூடுபோகும் பொல்லாத பித்தவகை யெல்லாம்போகும், நாமப்பா கண்ணெரிவு கைகால்காந்தல் நாடாது தேகமெல்லாங் குளிர்ச்சியாகும், தாமப்பா வூறலெல்லாந் தவறுண் டேபோம் தளமானபாலத்தின் ரணங்கள்தீரும், வேமப்பா வரலை கச் செந்தூரந்தான் வெகுசுறுச்சாய் பணவெடையைப் பிரேகங் கொள்ளே. (148)

ஏலாதிச்சூரணம்.

கொள்ளவேயேலாதிச் சூரணங்கேள் குணமான லவங்கமொ ன்று மிளகிரண்டு, விள்ளவேநாகம்நால் தாளிசமெட்டு விதமான கூகைநீறுபதினாறாகும், நள்ளவேசுக்கதுதான் முப்பத்திரண்டு நல மானவேலமது வறுபத்துநாலு, தள்ளவே சர்க்கரைதான்சமனுக் கூட்டிக் கலந்து புதுக்கலசமதிற் பதனம்பண்ணே. (149)

பண்ணவேவெருகடிது விருநேரங்கொள்ளப் பறக்குமடா பித் தமொவாதம்வாய்வு, தண்ணவேயிரந்திரணமயிரந்தி தவமான மேகூறல் சொரிசிரங்கு, நண்ணவே சிலவிஷங்க ளுடாதேர்டும் நலமான குஷ்டமொடு குறைநோய்தீரும், வெண்ணவே பெரும்பாடு வெலும்புருக்கிப் பிஞ்பாராதோமின்ன மொன்றுகேளே. (150)

அசுவகெந்திபலாட்சதத்தைலம்.

ஒன்றானவுலகத்தோர்நோய்கட்கெல்லாம் உரைக்கிறேன்தைல மொன்றுறுதியாக, நன்றானவசுவகெந்தி பலநாட்சதராமம்துசொல் லுகிறேன்கவிலக்கேளு, சென்றனவசுவகெந்திபலமூன்றுசிற்று மூட்டி பதினைந்து வெள்ளருக்குதாலு, ருன்றான நன்றுரிசீக்தில் விலாமிச்சு கோரையுடனெய்ச்சூட்டி யவுபிபென்னே. (151)

எண்ணவேநாரத்தைதுளசிவெட்டை இதமானமூலத்தைபலந் தானாலு, நண்ணவேயகில்நாலு தேவதாருநாலு நலமானகிழங்குடன் பலந்தானெட்டு, தண்ணவேகொம்பரக்கு பலந்தானெட்டு தள்ளி விட்டுவகையெல்லாம்பதினைந்தாகும், ஒண்ணவே யிடித்துநன்றாயிரு தூணிநீரில் ஒருவிறநால் தீவிட்டுச் சோடசத்தொன்றுக்கே. ()

ஆக்குவாயெள்ளெண்ணெய் சேர்த்தரைந்து அதின்பாதி தயிர் தண்ணீர் பால்சேரைந்து, ஆக்குவாய்கலக்கவகை மருந்துகேளுநற் றீடியான திரிகடுகு திரிபலாதி, மாக்குவாய் ஆதூரிமதுராங்கோஷ்டம் மாஞ்சில்முச்சீரகம் பூஞ்சாந்துகெந்தம், பாக்குவாய் மஞ்சள்ரோ கிணி செவ்வள்ளி பச்சிலைப்பூலாமூலங் கிளியூறல்கூட்டே. (153)

கூட்டுவாய்சதகுப்பி லவங்கப்பட்டை கூறேலம்வகைக்குரைப் பலமதாக, ஆட்டுவா பசுவின்பால் விட்டுரன்றும் அப்பனே கியாழ மெண்ணெய் தனிற்கரைத்து, நாட்டுவாயடுப்பேற்றிக் கொதிக்கும் போது நலமாகமூன்னரைக் கியாழம்விட்டு, மூட்டுவாயடுப்பேற்றி மூதிராமற்றன் முன்னவர்க்குப் பூசித்து வடித்திடாயே. (154)

வடித்திட்டதைலமதுமுழுகும்போதுவாகாகத்திருகிறவிபாதி கேளு, பிடித்திட்டமேகத்தின் சூலைபதினெட்டும் போனவாதத் தின் சூலைதானும், மடித்திட்டவாதசுரம் பித்தவாய்வு மயக்கமொடு சிலேத்மசுர மாண்டுபோகும், அடுத்திட்டுக் கண்ணுமடா பித்த வெட்டையெல்லாம் அணுகாதேயக்கினிபா மந்தந்தானே. (155)

மந்தமொடுபோண்டுவக்கை யெல்லாம்போகும் மைந்தனே கண்பு கைச்சல் கைகால்காந்தல், பெந்தமா முடம்பெரிவுசுவாசகாசம் பீன் பாராதோடுமடா மேகமெல்லாம், யந்தமாம்பத்தியங்கள் புளிகசப்பு பாங்கான புகையோடு பெண்ணுந்தள்ளு, இந்தவகை யெண்ணெய்போ லியாருஞ்சொல்ல ரிகத்திலுள்ளோர்பிழைக்கவென்றிரங்கினேனே.

## வில்வாதிலேகியம்.

இரங்கியேலேகியமொன்றுசொல்லக்கேளு இதமானவில்வாதி யென்றநாமம், பரங்கியேவில்வம்விலா மிச்சைக்கோரை பாங்கான சஞ்சீவி வகையொன்றுக்கு, தாங்கியேசிற்றாடன் பலந்தானெட்டு தானிடத்துக்கல்வெள்ளசீரிற்போட்டு, அரங்கியேசோடசத்தொன் றாகக்காய்ச்சி அப்பனே கொம்பரக்கு சேர்தான்பண்டே. (157)

இரண்டானதூணிநீ ரெட்டொன்றாக்கி நினைவாக வெள்ளெண் ணெய்படி தான்சுத்தி, குன்றான வாவின்பால்படி தானஞ்சு குலமான கற்கவகை சொல்லக்கேளு, நன்றான திரிகடுகுந் திரிபலாதி நலமான கஸ்தூரிமதுராங்கோஷ்டம், நன்றான விருசீர மாஞ்சில்மஞ்சள் கருது கெந்தங்கிளியூறல் பூஞ்சாந்தென்னே. (158)

என்னவேசெவ்வள்ளி லவங்கப்பட்டை இதமானபச்சையோடு பூலானேலஞ், பன்னவேவகையொன்றுபலந்தான்வாங்கிப் பாங்கான வாவின்பால் விட்டேயாட்டி, முன்னமேகியாழமெண்ணெய் தனிற் கரைத்து மோகமாய்டுப்பேற்றிக் கமலமாகக், கன்னவேமுதிராமல் கவனமாகக் கணபதியைப் பூசித்து வடித்திடாயே. (159)

வடித்திட்டதைலமதுமுழுகும்போது வாகாகத்தீருகிறவியாதி கேளு, பிடித்திட்டமேகநீரிருபதும்போம் பேரானபித்தவகை நாற்பதும்போம், துடித்திட்டகுன்மமெட்டுந் தொலைந்துபோகுந் தொலையாத சிரசில்நோய் சொல்லாதோடுங், கடித்திட்ட மேகவகை வறட்சியெல்லாங் காணுமலோடுமடா கருதிப்பாரே. (160)

குமரித்தைலம்.

கருதியேநீகேளுபுலத்தியனேயையா கருவானகுமரியிடதைலஞ்சொல்லுவேன், விருதானகுமரிச்சார் படியிரண்டு வெள்ளாவின் பாலதுதான் படியிரண்டு, கருகானயெள்ளெண்ணெய் படியிரண்டு சாற்றுகிறேன் கந்தவகை திரிகடுகுகோஷ்டம், மருவான மாஞ்சிலொடு திரிபலைச்சீரகம் மதுரமொடுபூஞ்சாந்தோ டேலமென்னே.

என்னவேபேச்சையிலே பூலாமூலம் இதமான லவங்கப்பத்திரியும்பட்டை, அன்னமேசெவ்வியக்கிராகாரம் அருளானகஸ்தூரி லவங்கங்கிகந்தந், தின்னவேரோகணியும் செண்பகப்பூ யானைதிப்பிலியுமந்திஷ்டி சோம்புமஞ்சள், பன்னவேவகையொன்று பலமரை தான்வாங்கிப் பரிவான வாவின்பால் படிவிட்டாட்டே. (162)

ஆட்டியே கரைத்தெண்ணெய் சாற்றினுள்ளே அப்பனையடுப்பேற்றிக் கமலமாக, மூட்டியேமெழுகுபதமாகவாங்கி முதியாமல் வடித்ததனைச் சீசாவில்விட்டு, நாட்டுவாய் தானியத்தில் வைத்து மூடி நலமாகமண்டலங்கால் சென்றபின்பு, தாட்டிகமாம் மண்டலந் தான் முழுகும்போது சாதகமாய்த் தீருநோய் சாற்றக்கேளே. ()

கேளடா மேகமென்ற தெல்லாம்போகும் கெடியான வஸ்திசுரம் வெட்டைபோகும், தாளடா பித்தமெல்லாஞ் சாந்தமாகுஞ் சரீரத்தில் வறட்சிமு ஊறல்போகும், வேளடா குன்மமெட்டும் பாண்டுயாவும் வெளுப்பான தேகமெல்லாம் வண்டுபோலாம், வாளடா வயித்தியர்க்காய்த் தைலஞ்சொன்னேன் வளமான மனமுடையோய் மகிழ்ந்துபாரே. (164)

மகிழ்வேகொம்மைக்குள்ளைதான் இரு அகத்தான கொம்பரக் குங் மலக்தானெட்டு, செகிழவே தூணிகீரெட்டொன்றுக்கிரிசமான தாளிக்குள் வடித்துவிட்டுத் தாளவே யெள்ளெண்ணெய் சேர்தா னுெக தயிர்தண்ணீர் சேரிரண்டு பால்சேரகுக, நிகழவேகாடியது சேர்தான் ரண்டு சிசமாகக் கற்கவகை சொல்லக்கேளே. (165)

கேளப்பா சதகுப்பை கடுகுரோகணி கிளியூறல் பூஞ்சாந்து பச்சைபூலா, நாளப்பா செவ்விவள்ளி லவங்கப்பத்திரி நலமான லவங்கத்தோல் மாஞ்சில்கோஷ்டம், தாளப்பா கஸ்தூரி மதுரங் கெந்தக் தயவாக விருசீரம் கிருகுவேலம், ஆளப்பா வகையொன்று கழஞ்சிரண்டு அப்பனே ஆவின்பால் விட்டுஆட்டே. (166)

ஆட்டவே பெண்ணைக்குட்களைத்து அடுப்பேற்றி மெழுகுபத மானவாறே, சட்டிலே வடித்ததனை முழுகும்போது நலமாகத் தீருகிற வியாதிகேளு, தாட்டிபமாம் பித்தவெட்டை பஸ்திசுரம் போம் தலைமயக்கம் வாயூறல்சார்தமாகும், வாட்டியதோர் சிதசுரம் மாண்டுபோகும் வற்றியதோர் தேகமெல்லா மூறும்பாரே. (167)

ஊறுமேகவெட்டை கனசுரங்கள் உத்தமனே கனப்பாண்டு வெளுத்ததேகங், தேறுமே தேகத்தில் வலிகடுப்புத் திறமாறலை யெல்லாக் தீருந்தீரும், காறுமே கற்றாழை புறங்கைவீசி நலமான தழுகணோய் நாடாதேதாமே, சீறுமேகாசமெல்லாந் தீர்ந்துபோகுந் திறமான வொண்ணைவிட் டொருநாளெண்ணே. (168)

மிருகாமலத்தைலம்.

என்னவே பத்தியந்தான் புளிகசப்பு இதமான படையோடு பெண்ணுமாகா, தள்ளவேதைலமொன்றுசொல்லக்கேளு தளமான மிருகாமலத் தைலஞ்சொல்வேன், நன்னவேமிருகாபழச் சாறுபடி ரண்டு நலமான காணிச்சாறு படியிரண்டு, பன்னவே குமரிச்சாறு படியிரண்டு பாங்கான செவ்விளநீர் படிதானெட்டே. (169)

படியானசிறுகீரைசாறுபடிரண்டு பழுதில்லா வாவின்பால் படி தான் ரண்டு, செடியான யெள்ளெண்ணெய் படிதான்மூன்று சேர்க்கவிதிற் கற்கவகை மருந்துகேளும், கொடியான மதுரமொடு கோஷ்டமேலங் குரோசாணி பச்சையிலை பூலாமூலம், கடியான கஸ்தூரி மாஞ்சில்மதுரங் கருவான பத்திரியும் சாதிக்காய்கூட்டே.

கூட்டுவாய் லவங்கப்பத் திரியும்பட்டை கொடிதான திரிகடுகு திரிபலாதி, நாட்டுவாய்பூஞ் சாந்துசோம்பு வால்மிளகு நலமான வகையொன்று கழஞ்சுமூன்று, கூட்டுவாயாவின்பால் விட்டுரன்றாய் அப்பனே சாறெண்ணெய் தனிற்கரைத்து, மூட்டுவாயடுப்பேற்றிக் கமலமாக முதிராமல் கணபதிக்குப் பூசைபண்ணே. (171)

பண்ணியே மெழுகுபதந்தனில்வடித்துப் பாங்காகமுழுகிவரத் தீருநோய்கேள், கண்ணிலே தாகமோடந்திமாலை கருவான நேத்திரநோய் தொண்ணூற்றாறு, மண்ணிலேபித்தவெட்டைபித்தவாய்வு மயக்கமுட னஸ்திவெட்டை மாண்டுபோகும், கண்ணிலே யுடம்பெரிவு கைகால்காந்தல் தலமான வுஷ்ணநோய் சாராதென்னே. (172)

சந்தனாதித்தைலம்.

சாரவே சந்தனாதித் தைலந்தன்னை சார்பான புலத்தியனே சொல்லக்கேளு, சேரவே மலர்க்காவில் சந்தனத்தூள் செப்புகிறே னெடையொன்று தூக்கியேதான், வாரவே விலாமிச்சை வெட்டிகாரை வகையுடன் சிந்திலொடு சிற்றாமுட்டி, காரவே பேராமுட்டி பேராமல்லி கருவான சிற்றாமல்லி யகலமாமே. (173)

ஆமப்பா நன்னாரிப் பாடகந்தான் அப்பனே வகையொன்று பலந்தான்நாலு, போமப்பா விருதூணி வெள்ளநீரில் பொடியாக விடித்திடித்தடுப்பிலேற்றி, நாமப்பா சோடசத்தொன்றாகக்காய்ச்சி நலமான பாண்டத்தில் வடித்துக்கொண்டு, தாமப்பா வெவ்விளநீர் படியிரண்டு தப்பாமல் காணிச்சாறு படியிரண்டுவாரே. (174)

வாரப்பா சிறுகீரை படிதானொன்று வாகான பொடுதலைச்சாறு படியொன்று, சேரப்பா வல்லாரை படிதானொன்று சிறுசின்னிச்சாறுதான் படிதானொன்று, காரப்பா பொற்றலைச்சாறு படியொன்று, ஆமப்பா கர்ப்பூர வல்லிச்சாறு அழகாகக் கூடவிட்டுப் படிதானொன்றே. (175)

நன்றப்பா தான்றியிட விழுதின்சாறு உத்தமனே எள்ளெண்ணெய் படிதான்மூன்று, நன்றப்பா சிறுநெய்தான் படிதானொன்று நலமான வாவின்பால் படிதான்நாலு, சூன்றான தயிர்தண்ணீர்ப்படியிரண்டு குறையாமல் பாண்டத்தி லூற்றிக்கொண்டு, சென்றாயே யடுப்பிலே கொதிக்கவைத்துத் திறமான கடைசரக்குச் சொல்லக்கேளே. (176)

கேளப்பா திரிகடுகு திரிபலாதி கிருமியாங் கஸ்தூரி மதுரமேலம், தாளப்பா பூஞ்சாந்து கிளியூறற்பட்டை தளமான லவங்

கப்பத்திரியும்பட்டை, நாளப்பா கிராம்புசா திக்காய்ப்பத்திரி நல மான பச்சையிலே மூலாமூலம், ஆளப்பா செவ்வள்ளி செண்பகப்பூ அப்பனே கெந்தமொடு சீரமாண்டே. 177)

ரெண்டான செங்கழுநீர் கோஷ்டமக்கிரா நிலையானமர்திஷ்டி பலகைமஞ்சள், செண்டான சந்தனமு முத்தக்காசும் திருக்கான வலம்புரிக்கா யிடம்புரிக்காய், குன்றுமல் வகையொன்றுபல மரை தான்வாங்கி குலமான வாவின்பால் விட்டேயாட்டி, வென்றான * மேஷப்பால் படியிரண்டில் கரைத்து வீறவே வெண்ணெயிலே விட்டுக்கொள்ளே. (178)

கேளப்பா வடுப்பேற்றிக் கமலமாகக் கிருபையாய்மெழுகுபதந் தன்னிலேதான், நாளப்பா கணபதிக்கு பூசைபண்ணி நலமான கம் பிளியால் வடித்துக்கொண்டு, தானப்பா குங்குமப்பூ கோரோசனை யும் தளமானபுழுகதிலே கழஞ்சுவீதம், கேளப்பா பொடித்திட்டுக் கலசத்துள்ளே குணமாகத் தாளியதில் வைத்துமூடே. (179)

மூடியே மண்டலங்கால் சென்றபின்பு முழுகிவரச் சீயக்கா யரைப்பதாகும், நாடியே தீருகிற வியாதிகேளு நாடாது மேக மென்ற திருபதுந்தான், சாடியே நீரழிவு நீரருக்கால் தள்ளுண்டு போகுமடா க்ஷயந்தானெட்டும், காடியே கண்ணெரிவு கண்புகைச் சல் கையெரிவு காலெரிவு மோடுங்காணே. (180)

ஓடுமடா பிரமியங்கள் ரணக்கிரந்தி உத்தமனே கற்றாழைநாற் றந்திரும், சாடுமடா வஸ்திசுர மஸ்திவெட்டை சரீரத்தில் மயக்க மெல்லாஞ் சாந்தமாகும், போகுமடா விரந்திகண்டி புண்புரைகள் போகும் பொல்லாத நோய்களெல்லாம் நில்லாதோடும், தேடுமடா பெண்மேலே மோகமெத்தச் சிக்காதே வலையினுள்ளே தெரிந்து நில்லே. (181)

தெளிந்துகொண்டு மாயத்திற் சிக்கவேண்டாம் தேகத்தி லுள்ளநோய் சிதறிப்போகும், அளிந்தபெரு குட்டமொடு சொறி சிரங்கும் அப்பனே யுள்ளவெட்டை யாறிப்போகும், நளிந்திந்த தயிலமது முழுகும்போது நன்றான புளியோடு புகைகசப்பு, வளி ந்துமிக வாய்வென்ற பதார்த்தந்தள்ளு வளமாகுஞ் சரீரமெல்லாம் வருணமாமே. (182)

* மேஷம் - வெள்ளாடு.

பொன்னாங்காணித்தைலம்.

ஆமப்பா பொன்னாங்காணித் தைலங்கேளு அப்பனே காணிச்சாறு படியிரண்டு, நாமப்பா கரிச்சாலைப் படிதானொன்று நலமான நெல்லிக்காய்ச் சாறுபடியொன்று, தாமப்பா எள்ளெண்ணெய் படியிரண்டு தப்பாம லாவின்பால் படியிரண்டு, வேமப்பா மதூரமது பலமிரண்டு விருதான முலைப்பாலா லரைத்துப்போடே. (183)

போடப்பா மெழுகுபதந்தனில்வடித்துப் புகழாக முழுகிவரத் தீருநோய்கேள், நீட்டப்பா நேத்திரநோய் தொணணூற்றாறும் நிலைமைகெட்ட காசமெல்லா நீங்கிப்போகும், வாட்டப்பா பித்தமெல்லாம் வாங்கிப்போகும் வளமாகநேத்திரங்க ளொளிபேபீறும், நாட்டப்பா வுஷ்ணமெல்லாந் தீருந்தீரும் நலமான கீழ்க்காய்நெல்லி தைலங்கேளே. (184)

கீழ்க்காய்நெல்லித்தைலம்.

கேளப்பா கீழ்க்காயின் நெல்லிதானுங் கிருபையாய்த்தூக்கிடித்துத்தூணிநீரில், வாளப்பாவெட்டொன்றாய் வடித்துக்கொண்டு வளமான வெள்ளெணணெய்ப் படியிரண்டு, நாளப்பா வாவின்பால் படியிரண்டு நலமான சீரகந்தான் பலமிரண்டு, வேளப்பா பாலிலே யரைத்துவிட்டு விருதாகமெழுகுபதம் வடித்துவாங்கே. (185)

வாங்கியே முழுகிவரப் பித்தவெட்டை மயக்கமொடு மஞ்சள்காமாலைதீரும், தாங்கியே வாந்தியெல்லாம் தவருண்டேபோம் தலைமயக்கம் வாயூறல் சாந்தமாகும், தாங்கிபேபுட்சுரங்கள் தீர்ந்துபோகும் தீரமுடனேயிதனைச் செய்துபாரு, ஏங்கியே திரியாதே மனஞ்சோங்காதே எளிதல்ல நோயப்பா விரங்கிப்பாரே. (186)

ஆதண்டத்தைலம்.

பாரப்பா சிரசிலுள்ள சூலைதீரப் பக்குவமாய் தைலமொன்று சொல்லக்கேளு, நேரப்பா வாதண்டை நொச்சிசங்கு நினைவாகவெருக்கோடு சிற்றாமுட்டி, ஆரப்பா வகையொன்று பலம்பத்தாகும் அப்பனே தூணிநீ ரெட்டொன்றாக்கிக், காரப்பா வெருக்கினிடபழுப்புச்சாறு கருவான படியொன்று பழச்சாறொன்றே. (187)

ஒன்றப்பா எள்ளெண்ணெய்ப் படிதானொன்று உத்தமனே வேப்பெண்ணெய் படியரைதான்கூட்டி, நன்றப்பா திரிகடுகு ஓமம்பூண்டு நலமான வசம்போல மஞ்சள்கூட்டிக், கன்றப்பா வரைத்தெண்ணெய் தனிற்கரைத்து கருவான மெழுகுபதந் தனில்வடித்து, மொன்றப்மா முழுகிவரத் தீருநோய்கள் முதலான சிரசிலுள்ள சூலைபோமே. (188)

சூலைபோம் வாயுவெல்லாஞ் சொல்லாதோடுஞ் சுருக்கானவாதத்தின்சூலைதீரும், வாலையாந்திமிர்வாத மிரைப்புத்தீரும் வயிற்றிலுள்ள வாயுவெல்லாம்வாங்கிப்போகும், சூலைபோஞ் சிறுகடுகுநேத்திரக்குத்தல் சொரிசிரங்கு கரப்பனோ டிரணங்கள்தீரும், ஆலப்பாபத்தியந்தான்புளிகசப்பு அப்பனேக்கைவாய்வு பதார்த்தங்தள்ளே.

பதின்மூன்று சன்னிக்குத்தைலம்.

தள்ளவே சன்னியெல்லாங் கடலேபுக்கும் தயவாகத்தைலமொன்று சொல்லக்கேளு, தள்ளவே வேப்பெண்ணெய்ப் புங்கவெண்ணெய் நலமான புன்னையெண்ணெய் பசுவினெய்யும், கள்ளவே மாட்டினு மணத்தினெண்ணெய்க் கருவாகச் சமன்கூட்டி யிதிலே வார்த்து தள்ளவே மூசுறுமுட்டை காலதாகும் கடையிலே யெண்ணெய்படி காலதாமே. (190)

காலான படிவிதஞ் சேர்த்துக்கொண்டு கருவான (1) குக்குடத்தின் முட்டைபத்து, மாலாக மஞ்சளையுங் கூடிவிட்டு மயக்காத கடைமருந்து சொல்லக்கேளு, சாலான சாதிலிங்கந் திருமூலவேர் சமர்த்தான கெந்திரசம் பாஷாணந்தான், ஆலான நாபியுடன் மிளகுதிப்பிலி அழகான யானைதிப் பிலியும்போடே. (191)

போடுவாய் லவங்கமொடு நேர்வாளந்தான் புகழான கழஞ்சுநிறைசமனுக்கூட்டி, நாடுவாய் கொடிவேலி கியாழத்தாலே நலமாகச் சாமமொன் றரைத்துக் கொண்டு, சாடுவா யெண்ணெயிலே தான்கரைத்துச் சதுராகக் கொதிக்கையிலே யெருக்கம்பாலும், கோடுவாய் கொடிக்கள்ளி சதுரக்கள்ளி குணமான விலைக்கள்ளிப் பாலுங்கூட்டே. (192)

கூட்டியேதிருகுகள்ளி (2) நானுங்கள்ளிகூசாதே படர்ந்தமுள்ளிக்கள்ளி, சாட்டியேபால்வகைதா னுழக்குமாகும் சாதகமாயெண்ணெயுடன் கலந்துகொண்டு, சூட்டியே கமலமாந்தீயிலன்பாய் முதிராமற் கொதிக்கையிலே கஸ்தூரிகேளு, நீட்டியேயஞ்சுபணமுலைப்பாலாலே நீயரைத்துக் கரைத்தெண்ணெய் தன்னில்வாரே. ()

வார்த்திடுவாய்முலைப்பால்தான் படிகால்வீதம் வளமானதேசிப்பால்படிகாலாமே, சேர்த்திடுவாய் காட்டெருமைப் பால்படிதான் திரியாம லெண்ணெயிலே விட்டுக்காய்ச்சி, ஆர்த்திடுவாயாற்றலறியிலைகால்போடு அன்பாக வெள்ளுள்ளி யரைத்துப்போடு, மூர்த்தி

(1) குக்குடம் - கோழி. (2) நானுங்கள்ளி - இலைக்கள்ளி.

டவே மெழுகுபத மானவாறே முன்னவனைப் பூசித்து வடித்தி டாயே. (194)

வடித்திட்டதைலமதைப் பாணியிலேற்று வாகுகோரோசனை யுங்கழஞ்சி பொடித்திட்டு, பிடித்திட்ட சன்னிவகை பதின்மூன்று கும போன காண்டிநிறையிப்தாயானால், துடித்திட்ட சன்னியெ ல்லாந் துலைந்துபோகும் துடியான விசுவுக்குத் துவளைபோட, நடித் திட்ட நாம்பெல்லா மிருதுவாகும் நலமில்லா விசுவெல்லா நளின மாமே. (195)

நிலப்பனைக்கிருதம்.

நள்ளவே கிருதமொன்றுசொல்லக்கேளு நலமான நிலப்பனையு மொதிபம்பட்டை, விள்ளவே கருங்காலி நாகப்பட்டை விதமான * வேந்தனிட பட்டைதானும், அள்ளவே வகையொன்று பலம்பத் தாக அப்பனேயிடித்துநன்று யிருதூணிநீரில், தள்ளவே சோடசத் தொன் றாகக்காய்ச்சித் தளமான வாவின்பால் படிதான்ரண்டே. ()

ரெண்டப்பா வாவின்பால் படிதான் ரண்டு நினைவாகப் புளியா ரைச் சாறுபடியொன்று, விண்டப்பா கோரையிட தண்டுச்சாறு விதமாகப் படியதுதான் கூடவிட்டு, நன்றப்பா பொன்முசுட்டை சிறுகாஞ்சோரி நலமான விலாம்விதத் கொத்தமல்லி, கன்றப்பா திரிகடுகு திரிபலாதி கருவான பேரீச்ச முந்திரிகையாமே. (197)

ஆமப்பா கர்க்கடகம்பருப்பாத்தை அப்பனே காட்டத்தி கீழ் க்காய்நெல்லி, நாமப்பா வதிவிடையம் கூவிளத்தின் பிஞ்சு நலமான விளாம்பிஞ்சு மாதுளையின்பிஞ்சு, தாமப்பா சந்தனமுஞ் சாத்திர பேதி தளமான புளிவிரைத்தோல் முத்தக்காசு, வேமப்பா சிறுநா கம் லவங்கப்பட்டை விதமான குரோசானி யோமமாமே. (198)

கூட்டப்பா மருந்துவெள்ளை யமுக்கறாவேர், கூசாதே வகைக் கிரண்டு கழஞ்சுவீதம், ஆட்டப்பா வாவின்பால் விட்டரைத்து அப் பனே நெய்தனிலேகரைததுவிட்டு, மூட்டப்பா வடுப்பேற்றிக்கமல மாக முறிராமல் மெழுகுபத மாகும்போது, நாட்டப்பா வடிவுகொ ண்டு பரணிசெய்து நலமாக விருநேரங் கழஞ்சுகொள்ளே. (199)

கொள்ளவே பெரும்பாண்டு வெலும்புருக்கி கூருன பிரமியங் கள் கடுப்புமூலம், விள்ளவே கிராணிவகையெல்லாந்தீரும் விதமான சுக்கிலந்தா னிறுக்கும்பாரு, கள்ளவே சடம்வெளுமபு கைககால் காந்தல் தளமான குடியெரிப்பு நீர்கடுப்பு, நள்ளவே தீருமடா பத் தியங்காரே நலமாகச் சீரகக் கியாழங் கொள்ளே. (200)

---

* வேந்தன்பட்டை - அரசன்பட்டை.

## பொன்னுங்காணிகிருதம்.

கொள்ளவே கிருதமொன்று சொல்லக்கேளு குறிப்பான காணிச்சாறு படிதானென்று, நள்ளவே பொற்கையான் சாறுபடி யொன்று நலமான பழச்சாறுபடி யரைதான்விட்டு, விள்ளவே யாவினெய் படிதானென்று விருதான வாவின்பால் படிதானெனறு, தெள்ளவே மதுரமொடு பலந்தான் ரண்டு தெளிவான வாவின்பால் விட்டு ஆட்டே. (201)

ஆட்டியே நெய்க்குள்ளே கரைத்துவிட்டு அடுப்பேற்றிமெழுகு பதமானவாறே, நீட்டியே சாதிக்காய் சாதிபத்திரி நினைவாகக்கோரோசனங் கற்கண்டப்பா, நாட்டியே கழஞ்சுகின்ற பொடித்துப் போட்டு நலமாகக் கிண்டிவைத்துக் கரண்டிவீதம், மூட்டியே யிருநேரங் கொண்டாயானல் முக்கியமாய்த் தீருமடா மூலச்சூடே. ()

சூட்டுடனே யுஷ்ணநோ யெல்லாந்தீரும் சுகமாக மேலெரிவு கைகால் காந்தல், நாட்டுடனே யுலத்துகின்ற மேகந்தீரும் நணுக மது வயிற்றிலுள்ள வெரிகட்கெல்லாம், வாட்டுடனே நேத்திரமெல்லாங் குளிர்ச்சியாகும், வளமாகும் வாய்நாற்றம் விட்டுப்போகும், தீட்டுடனே யிரங்குகின்ற பிரமியந்தான் தீருமடா புளியாரைக் கிருதங்கேளே. (203)

## புளியாரைக்கிருதம்.

கேளடா புளியாரைச் சாறுபடி யொன்று கிருபையுள்ள வள்ளிச்சாறு படிதானென்று, நாளடா காணிச்சாறு படிதான் ரண்டு நலமான செவ்விளநீர் படிதான்ரண்டு, தாளடா வாவினெய்சேர்தானஞ்சு தள்ளாம லின்னஞ்சில சரக்குகேளு, ஆளடா சீரகமு மாசிக்காயும் அப்பனே மதுரமொடு கழஞ்சு நாலுநாளே. (204)

நாளப்பா வாவின்பால் விட்டேயாட்டி நலமாக நெய்சாற்றிற் கரைத்துவிட்டு, வேமப்பா வடுப்பேற்றி மெழுகதானல் விருதாக வடித்துமே பொடிதான்கேளு, காளப்பா பத்திய மேலாமாண்டி கருவாகக் கழஞ்சிரண்டு பொடித்துத்தூவி, ஆளப்பா கற்கண்டு பலந்தானென்று அப்பனே பொடித்துவிட்டு கரண்டிநிறையாமே.

ஆமப்பாவிருநேர மண்டலங்கொள் அப்பனே பித்தவெட்டை பித்தவாய்வு, தாமப்பாவெரிச்சலொடு நீர்சுரக்குந் தளமான மயக்கமெல்லாந் தவறிப்போகும், நாமப்பா வாயூற லரோசியங்கள் நாடாது பித்தமெல்லா நடுங்கியோடும், போமப்பா வாந்திமுதல் சரீரமுழுதும் புதிதாக வின்னமொரு கிருதங்கேளே. (206)

## வல்லாரைக்கிருதம்.

கேளப்பா வல்லாரைக் கிருதஞ்சொல்வேன் கெடிதான வல்லாரைச் சாறுபடி யொன்று, தாளப்பா காணிச்சாறு படிதானொன்று தமமான பொடுதலைச் சாறுபடி யொன்று, நாளப்பா பழச்சாறு படி யரைதான்விட்டு நலமான வாவினெய் படிதான்ரண்டு, ஆளப்பா வாவின்பால் படிதான்ரண்டு அப்பனே கற்பவகை சாதிக்காயே. ()

காயோடு பத்திரியும் மாசிக்காயும் கருவான சிக்கியொடு காட்டாத்திப்பூ, தாயொடு மிளகேலங் கிராம்புதானுந் தளமான மதுரமொடு வகையொன்றுக்குப், பாயொடு மிருகழஞ்சு நிறைதான் தூக்கிப் பருவமா யாவின்பால் விட்டேயாட்டி, வாயோடு கரைத்துவிட்டடுப்பிலேற்றி வளமாக மெழுகுபதந் தனில்வடித்தே. (208)

வடித்திட்டுச் சீனிரண்டு பலந்தான் தூக்கி வாகாகப்போட்டதிலே கிண்டிக்கிண்டிக், கடித்திட்டுக் கரண்டிநிறை கொண்டாயானால் கலங்காதே மண்டலத்தில் தீருநோய்கேள், தடித்திட்ட மேகவகையெல்லாந்தீரும் தளமானீ குளிர்ச்சியாஞ் சரீரமெல்லாம், வெடித்திட்ட ரணங்கிரந்தி விழலாய்ப்போகும் விருதான பிரமியமும் விட்டுப்போச்சே. (509)

போச்சப்பா பாசபஸ்பம் வைத்துக்கொள்ளு புகழான மேகவகை சூலைபோகும், காய்ச்சப்பா குஷ்டமொடு சொரிசிரங்கு கருவான * சிங்குவைநோய் காணுதோடும், வீச்சப்பா கிரந்தியொடு யோனிப்புற்று விதமானபுண்புரைகள் விழலாய்ப்போகும், மாச்சப்பா நீரருகில் குறியெரிப்பு மைந்தனே யஸ்திரண மாறிப்போமே.

## கூழ்பாண்டகிருதம்.

ஆறுமே கூழ்பாண்டக் கிருதங்கேளு அப்பனே பூசினிக்காய்ச் சாறுபடிரண்டு, நாறுமே தாழைபிட விழுதின்சாறு நன்றாகப் படியொன்று தென்னம்பூச்சாறு, காருமே படியொன்று கூடவிட்டுக் கலங்காதே குமரிச்சாறு படிதானொன்று, காருமே செவ்விளநீர் படிதானொன்று கனமான வாவினெய் படிதான் ரண்டே. (211)

ரெண்டான தற்குவகை சொல்லக்கேளு நிலையான சாதிக்காய் சாதிபத்திரி, பண்டான சாதிக்காய் திரிபலாதி பாங்கான சீரகமுமேலம் வால்மிளகு, குன்றூன காட்டத்தி கர்க்கடகச்சிங்கி கூறுன மல்லியொடு குரோசனியோமம், நன்றாகக்கழஞ்சுநிறை மூன்றதாக நலமான வாவின்பால் விட்டுஆட்டே. (212)

---

* சிங்குவை - நாக்கு.

ஆட்டியே யாவின்பால் படிரண்டுக்குள் அப்பனே கரைத்து விட் டடுப்பிலேற்றி, நாட்டியே மெழுகுபத மாகும்போது நலமாக படிரெண்டு கலசத்துள்ளே, காட்டியே கற்கண்டு பலந்தான் ரண்டு கருவாக பொடித்திட்டுக் கரண்டிவீதம், மூட்டியே மண்டலங்கள் கொண்டாயானால் மூதண்ட பிரமியங்கள் மேகம் போமே. (213)

போமப்பா வுஷ்ணங்க ளெரியுங்காந்தல் பொல்லாதநீர்க்குத்து குமியெரிப்பு, நாமப்பா வஸ்திரணமஸ்திவெட்டை நாடாதுகிராணி யெல்லா நளினமாகும், தாமப்பா வெலும்புருக்கி மாலையெல்லாம் தவறுண்டே போகுமடா பித்தமெல்லாம், ஆமப்பா வப்பிரேகம் பேரட்டுக்கொள்ளு அணுகாது மேகநீ ரற்றுப்போமே. (214)

தூதுளைக்கிருதம்.

அற்றுப்போம் தூதுளைக் கிருதங்கேளும் அப்பனே தூதுளை பெடைதானென்று, கற்றுப்போநன்மூள்ளி கண்டங்கத்திரி கருது சிறு காஞ்சோரி யாடாதோடை, சற்றுபோம் மிளகுதிப்பிலி கடுக் காய் சதிரான தூரால்பையம் வகையொன்றுக்கு, நற்றுப்போம் பலம்நாலு கொண்டிடித்து நலமாக விருதூணி நிரிலூட்டே. (215)

ஊட்டியே சோடத்தொன் றுகக்காய்ச்சி உத்தமனே வடித்து வொரு பாண்டத்தூற்றி, நாட்டியே யாவினெய் படிதான்ரண்டு நல மான வாவின்பால் படிதான்ரண்டு, காட்டியே திரிகடுகு திரிபலாதி கருவான தாளிசங் கோஷ்ட மக்கிரா, வாட்டியே வாய்விளங்கஞ் சீரகமுமோமம் வாள்மிளகோ டரத்தைரண்டு மேலாந்தானே, ()

ஏலமொடு கிராம்புசாதிக்காய்பத்திரி எடுத்திடுவாய் வகையொ ன்று கழஞ்சு மூன்று, ஆலமொடு மாவின்பால் விட்டேயாட்டி அப் பனே நெய்தனிலே கரைத்துவிட்டு, ஞாலமொடு மெழுகுபத மாகு நேரம் நலமாக வடிவுகொணடு கரண்டிவீதம், காலமே மண்டலந் தான் கொண்டாயானால் கருவான க்ஷயமெட்டுங் காணுதென்றே.

காணுத யீளையோ டிருமல்காணக்கலங்காதே சேத்துமநோய் தொண்ணூற்றுறும், நாணியே மேகமெல்லாநாடாதோடும் நலமான வுஷ்ணநோ யெல்லாந்தீரும், ஆணுமே யீளைவிதைப்பற்றுப்போகும் அப்பனே வாயுவென்ற தெல்லாந்தீரும், தோணுமே குண்டலமாம் வாய்வுதீரும் குறிப்பாக வின்னமொரு செய்திகேளே. (218)

## கண்டங்கத்திரிக்கிருதம்.

கேளடா கண்டங்கத்திரிக் கிருதஞ்சொல்வேன் கிருபையாங் கண்டங்கத்திரி, தூக்கப்பா நாளடா நன்றான சிறுகாஞ்சோரி நலமான தூதுவளை சங்குமூலம், வாளடா வகையொன்று பலந்தானஞ்சு வகையாக வடித்தியிரு தூணிநீரில், தாளடா சோடசத்தொன்றாகக் காய்ச்சித் தப்பாமல்வடிகொண்டு பாண்டத்திலூற்றே.

ஊற்றியே யாவினெய் படிதான்ரண்டு உத்தமனே யாவின்பால் படிதான்ரண்டு, தாற்றியே கற்பவகை சொல்லக்கேளு தளமான திரிகடுகு திரிபலாதி. ஏற்றியே யேலமோ டக்கிறுகாரம் இதமான கிராம்பு சாதிக்காய்பத்திரி, ஆற்றியே தாளிசம் லவங்கப்பட்டை அரத்தைரண்டு சீரம்ரண் டோமமாமே. (220)

ஆமப்பா வகையொன்று கழஞ்சிமூன்று அப்பனே யாவின்பால் விட்டேயாட்டி, நாமப்பா நெய்தனிலேகரைத்துவிட்டு நலமாக மெழுகுபதந் தனில்வடித்து, தாமப்பா கரண்டிநிறை கொண்டாயானால் தவறுண்டோ சயகாச மெல்லாந்தீரும், வேமப்பா வலிபிசுவும் வெருண்டுபோகும் விருதானவயிறுவிம்பல் தளரும்பாரே. ()

பாரப்பா விஷகடிக ளொலிகள் தீரும் பதறுகின்ற வலிப்பெல்லாம் பரிந்துபோகும், நோப்பா குன்மமெட்டு நீங்கிப்போகும் நிலையான மந்தார காசநீங்கும், வாரப்பா சேத்துமனே யெல்லாந்தீரும் வளமான வாய்வெல்லா மாண்டுபோகும், ஆரப்பா தாளகத்தின் பற்பங்கூட்டி அப்பனே மண்டலங்கொள் ளகன்றுபோமே. (222)

## கணத்தெண்ணெய்.

போமப்பா கணத்தெண்ணெய் சொல்லக்கேளு புகழ்முத்துக் கொட்டையெண்ணெய் படிதானொன்று, நாமப்பா வகையானசாறு நலமான குமரிச்சாறீ ருள்ளிச்சாறு, வேமப்பா கோவைச்சாறு புளியாரைச்சாறு விதமான கர்ப்பூர வள்ளிச்சாறு, தாமப்பாவகையொன்று சாறுபடிநாலாம் தப்பாமலெண்ணெயிலே கூட்வாரே. ()

வார்த்தப்பா சாதிக்காய் சாதிபத்திரி மைந்தனே மாசக்காய் கர்க்கடச்சிங்கி, ஏத்தப்பா கோஷ்டமோ டக்கிறுகாரம் இதமானசிரகம்ரண்டு வெந்தயந்தான், காத்தப்பா லவங்கப் பத்திரியம்பட்டை கருவான வெள்ளுள்ளி வகையொன்றுக்குச், சாத்தப்பா கழஞ்சுநிறை வாங்கியேதான் தளமான வாவின்பால் விட்டாட்டே.

ஆட்டியே வெண்ணெயிலே கரைத்துவிட்டு அப்பனே பாய்படி யாலடுப்பிலேற்றி, நாட்டியேமெழுகுபத மாகவேதான் நலமாகவடி கோண்டு கலசத்துள்ளே, கூட்டியே கோரோசனைக் குங்குமப்பூ குணமான சாதிக்காய் கழஞ்சுவீதம், ஆட்டியே பொடித்திட்டுக் கழஞ்சுநிறையாக அப்பனே கொடுத்துவரச் சொல்லக்கேளே. ()

கேளடா கண்டவெட்டை சுணசுரங்கள் கெடியான மாந்தமோ டுப்பிசங்கள், நாளடா வுலர்த்துகின்ற ரணங்களெல்லாம் நலமாகவா றுமடா கெர்ப்பவெட்டை, தாளடா கனப்பாண்டு வெளுத்ததேகம் தளமான நீரிழிவு விடாதசூடு, வேளடா வுடம்பூறு முஷ்ணம்போ கும் வெகுசுறுக்கா யின்னமொரு சேதிகேளே. (326)

கரப்பானெண்ணெய்.

சேதியென்ற கரப்பானும் ரணத்துக்கெல்லாம் தெளிவான வெண்ணெயொன்று சொல்லக்கேளு, சாதியென்றபூவரசு செங்கத் தாரி தளம்பூத கரப்பனொடு கண்டங்காலி, வேதியென்ற நிலவாகை வகையொன்றுக்கு விதமாகப் பலம்பத்து நறுக்கிக்கொண்டு, ஆதி யென்ற தூணிநீரெட்டொன்றுக்கி யப்பனே யாமணக்கெண்ணெய் படியொன்றே. (227)

ஒன்றப்பா வெள்ளாட்டின்பால்தானொன்று உத்தமனே மிளகு கருஞ் சீரகந்தான், வின்றப்பா கார்கோலம் வெள்ளுள்ளி வசம்பு வேறுன சதகுப்பை வலம்புரிக்காய், நன்றப்பா பரங்கியிடபட்டை தானும் நலமானவகையொன்றுகழஞ்சிரண்டு, தன்றப்பாமுன்பாலா லரைத்துக்கொண்டு தளமான வெண்ணெயிலே கரைத்துவிட்டே.

விட்டப்பா வடுப்பேற்றி மெழுகுபதமானல் வெருளாதே கா ண்டிநிறைகொடுத்தாயானல், கட்டப்பா சகலகரப் பானும்போகும் தளமான வரிம்பெல்லாஞ் சாராதோடும், கட்டப்பாரணத்தின்மேல் தடவிபோடக் கச்சாம லுதிர்ந்துபோங் கருவாய்க்கேளு, பட்டப் பா பத்தியந்தான் காத்தாயானல் பறக்குமடா கரப்பனே டிரணந் தானே. (229)

மாந்தயெண்ணெய்.

தானென்ற மாந்தெண்ணெய் சொல்லக்கேளு தயவான வாம ணக்கெ ணெண்ணெய் படியொன்று, வானென்ற வெள்ளிரண்டு வா சின்பட்டை வளமான வறுகுமஞ்சள் வெள்ளைப்பூண்டு, கானென்ற வெவ்வேறே நிம்பக்காய்மட்டும் கருவான வரைத்தெண்ணெய் தனிற்கரைத்து, நானென்ற பேய்த்துமட்டிக்காயப்பா நலமாகப் பாதியதில் நறுக்கிப்போடே. (230)

போட்டப்பா வடுப்பேற்றிக் காய்ச்சிவந்தால்பொட்டெனவே யிறக்கியதை நிறுத்திக்கொண்டு, நாட்டப்பா மூன்றுநாள் கால்சேர் வீதம் நலமாகக் காலமே கொடுத்தாயானால், காட்டப்பா மாந்தமெல்லாங் காணாதோடுங் கருவான யிசுவுமூதல் கண்டிப்பாகும், நீட்டப்பா பெயர் மந்தம் பொருமலெல்லாம் நிலைகெட்டேயோடுமோ மின்னங்கேளே. (231)

## மேகத்தெண்ணெய்.

கேளப்பா மேகமென்றதெல்லாந்தீரக் கெடிதான வெண்ணெயொன்று சொல்லக்கேளு, நாளப்பா கோவைச்சாறு காணிச்சாறு நலமான வல்லாரை செருப்படையின்சாறு, வேளப்பா யானையிட தண்டுச்சாறு வேளப்பா யானையிட நெருஞ்சிச்சாறு வெகுசுறுக்காஞ் சிந்திபிட தண்டுச்சாறு, ஆமப்பா வரசனிட பட்டைச்சாறு அப்பனே வகைக்குப்படி யரையதாமே. (232)

ஆமப்பா வாமணக்கி னெண்ணெய் படிமுக்கால் அப்பனேவதனோடு யின்னங்கேளு, சாமப்பா காற்றிலே விட்டுக்கேளு சதுரான சாதிக்காய் சாதிப்பத்திரி, வாமப்பா மாசிக்காய் கற்கடகச்சிங்கி வளமான சண்பகப்பூ காட்டாத்திப்பூ, வேமப்பா சிறுநாக மேலங் குரோசானி வெகுசுறுக்காய் கழஞ்சிரெண்டெடைதான் தூக்கே. (

தூக்கியே யாவின்பால் விட்டேயாட்டிச் சுறுக்காக வெண்ணெயிலே கரைத்துவிட்டுத், தாக்கியே சித்திரமூலி வேரின்பட்டை சாதகமாம் பலமொன்று கூடப்போட்டுத், தேக்கியே யடுப்பேற்றி மெழுருபதம்பார்த்துத் திறமாக வடித்ததனைக் கலசத்துள்ளே, ஆக்கியேகற்கண்டு பலம்ரண்டிட்டு அப்பனேகாண்டிநிறை கொள்ளு கொள்ளே. (234)

கொள்ளப்பா மண்டலந்தான் கொண்டாயானால் கூறுகெட்ட மேகமெல்லாங் குளிர்ந்துபோகும், தள்ளப்பா ரணகிரந்தி லிங்கப்புற்று தள்ளுமே யோனிப்புற் றரிகிரந்தி, நல்லப்பா வெடிசிலை மேகவூறல் நலமான சொரிசிரங்கு நாடாதோடுந், தள்ளப்பா சீழிரத்தம் பிரமியங்கள் தவறுண்டே போகுமடா சார்ந்துபாரே. (235)

## விழுதியெண்ணெய்.

பாரப்பா கெர்ப்பரோ பெல்லாந்தீரப் பகருகிறேன் விழுதியெண்ணெய் பண்பாய்க்கேளு, சேரப்பா முத்தெண்ணெய் படிதானென்று திறமான வாவினெய்ப்படிதானென்று, தாரப்பா விழுதிச்சாறு படிதானென்று தளமான திரிகடுகு வசம்பீருள்ளி, ஆரப்பாகோஷ்டமொடு லவங்கமேலம் அப்பனே வெள்ளுள்ளிகாலே. (236)

ஆமப்பா வாவின்பா லாலரைத்து அப்பனே செய்தனிலே கரைத்துவிட்டுப், போமப்பா வடுப்பேற்றி மெழுருபதம்பார்த்துப் பொட்டெனவே யிறுத்தொரு கலசத்துள்ளே, நாபப்பா மூன்று நாள் கால்சேர்வீதம் நலமாகக்கொண்டுவர வாறுநாள்தான் வேமப்பா பத்தியந்தா னுப்பைத்தள்ளு வெகுசுறுக்காய்த் தீருமடா கெர்ப்பவாய்வே. (237)

கெர்ப்பத்தின் வாய்வெல்லாங் கெதிகெட்டோடும் கிட்டாது சூதகத்தின் வலியெல்லாம்போம், கற்பகத்தில் புழுக்களெல்லாம் நழுவிவிழும் காணுது சூலையெல்லாங் கண்டிப்பாகும், கற்பத்தி விசுவுமுதல் தளர்ந்துபோகும் சந்தடுப்பில் சூலையெல்லாஞ் சாந்தமாகும், அற்பமது வல்லவடா கெர்ப்பமுண்டாம் ஆச்சரிய மின்னமொன றறைகிறேனே. (238)

அறைகிறேன் நல்லெண்ணெய்ப் படிதானென்று அப்பனே யதனேடியென்பாயின்னம், அறைகிறேன் மூலவேர் பலந்தான்ரண்டு அன்பாக வாவின்பால் விட்டேயாட்டி, நிறைகிறேன் கரைத்துவிட்டடுப்பிலேற்றி நினைவாக மெழுகுபதந் தனில்வடித்து, குறைகிறேன் கரண்டிநிறை கொண்டாயானல் கொடிதான மேகமெல்லாங் கூறிப்போமே. (239)

கூறிப்போங் குறியெரிப்பு விக்கப்புற்று கொடிதான கிரந்தியெல்லாங் குடிபோமப்பா, நாடிப்போமுள்ளழலை வாய்நாற்றங்கள் நாடாதே யெரிப்பெல்லாநளினமாகும், தேறிப்போஞ் சேதிமுதற் வெடிரணங்கள் தீராத குட்டமெல்லாந தீர்ந்துபோகும், காறிப்போங் கொதியிட்டுக்கொண்டாயானல் நலமுடன் கடல்புகுமரணங்கள் குன்மந்தானே. (240)

## (1) கலிங்காதியெண்ணெய்.

குன்மவகை தீருதற்கு கலிங்காதியெண்ணெய் குணமாகச் சொல்லுகிறேன் புலத்தியமனகேள், கனமென்ற தும்மட்டிக்காய்ச் சாறப்பா கருவாக படியிரண் டாவிநீர்தான், தன்மமென்ற படியிரண்டு வெள்ளாட்டுநீர்தான் தப்பாமல் படியொன்று கூடச்சேர்த்து, பண்மமென்ற வசமணக்கி னெண்ணையப்பா பகராதே படியிரண்டு கூடவாரே. (241

வார்த்தப்பா கடுக்காயும் கடுகுரோணி வளமான வாய்விளங்கந் திரிகடுகுமேலம், எத்தப்பா விடுதிப்பு வளைபலுப்பு இதமான கல்லுப்புச் சவுட்டிலுப்பு, காத்தப்பா நவாச்சார மெவாச்சாரங்

---

(1) கலிங்கம் - தும்மட்டிக்காய்.

காரங் கலங்காதே யப்பளாகாரங்கூட்டி, பார்த்தப்பா வால்மிளகு யானை திப்பிலியும் பாங்கான வெள்ளுள்ளிப் பருப்புமாமே. (245)

ஆமப்பா நிலவாகை கண்டங்கத்திரி அப்பனே வெள்ளைச்சாரணையின்மூலம், நாமப்பா சத்திச்சாரணைக்கிழங்கு நலமாக வரைப் பலமா யரைத்துக்கொண்டு, தாமப்பா நொச்சிச்சாறு பசுமஞ்சள் சாறுந் தலமான விஞ்சிச்சாறு குமரிச்சாறு, வேமப்பா படியரையாய்க் கூடவிட்டு விருதான கடைசரக்குக் கழஞ்சுமூன்றே. (243)

மூன்றப்பா வரைத்தெண்ணெய் தனிற்கரைத்து முதிராமலடுப்பேற்றி மெழுகுபதமானால், நன்றப்பா கலசமதில் வடித்து வைத்தே என்னசொல்வே னரைக்கால்சேர் வீதமாகக், கானறப்பா கொண்டுவரப் பத்துநாள்தான் கவுசைபொடு பீலிகையுங் கரைந்துபோகும், ஆன்றப்பா பெறுவயிறு வாய்வுகட்டி அணுகாது மகோதரங்க ளற்றுப்போமே. (244)

அற்றுப்போம் வாயுவென்ற திரட்சியெல்லாம் அப்பனே குணமாகு மெட்டுவாயு, நற்றுப்போங் கெர்ப்பவலி கெர்ப்பச்சூலை நாடாது யிசுவுபுழு நழுவிவீழும், கற்றுப்போங் கைகாலில் கட்டுச்சூலை கடல்புகுந்து வலிகளெல்லாங் காணாதோடும், பற்றுப்போம் வயிற்றிலுள்ள வியாதியெல்லாம் பறக்குமடா வின்னமொன்று பகரக்கேளே. (245)

### வாதவெண்ணெய்.

கேளடா வேப்பெண்ணெய் புங்கனெண்ணெய் கெடியானவாமணக்கின் புன்னைபெண்ணெய், நாளப்பா வெள்ளெணணெய் ஐந்துங் கூட்டி நலமாக வகையொன்று படியரைதான் சேர்த்துத், தாளப்பா வெள்ளுள்ளி வசம்புகாயம் தனமாக திரிகடுகு வோமங்கிரும்பு, ஆமப்பா சதகுப்பை கடுகுரோணி அப்பனே சித்திரமூலமாமே.

ஆமப்பா வகையொன்றுபல மரைதான்வாங்கி அப்பனே காடியா லரைத்துப்யோட்டு, வேமப்பா சாடிபடிரண்டிலேதான் விருதாகக் காலதுவிட்டடுப்பிலேற்றிப் போமப்பா மெழுகுபதம் வடித்துக்கொண்டு புகழாகக் கலசமதில்பதனம்பண்ணி, காமப்பா மேற்பூசிப் பிடித்துக்காய்ச்சத் தவறிப்போம்வாதமொன்பதுவுந்தானே.

தானென்ற மேகவகை சூலையெல்லாந் தளமான திமிர்வாதம் புற விசுவுமுதலா, நானென்ற விசுவுமுதல் நடுக்குவாதம் நாடாது சிறுகடுப்பு நளினமாகும், தேனென்ற காசெடை-தா னுள்ளே தாக்கி தேகத்தின் வாதமெல்லாந் தெறிபட்டுப்போகும், வானென்ற தேகவலி யெல்லாந்தீரும் வளமாகுந் துவாலையிட வாதம்போமே. (248)

### சுகபேதிஎண்ணெய்.

போமப்பா சுகபேதி யெண்ணெயொன்று புகலுகிறேன் முத்தெண்ணெய் படிதானொன்று, காமப்பா குமரிச்சார் படிதானொன்

ன்று கருவான பிரமிச்சாறு படியரைதானும், காமம்பா மிளகு கள்ளி பாக்குகடுக்காய் தவறாமல் கருவேலி பலமிரண்டப்பா, நாம ப்பா பதக்குநீர் தன்னிற்போட்டு நலமாகவெட்டொன்றாய் வடித்து வாங்கே. (249)

வாங்கியே பெண்ணெய்தனக் குள்ளேயப்பா வளமாகக் கடுக் காயுங் கடுகுரோணி, தாங்கியே மிளகுடனே யுள்ளிவகையொன்று தவறாமல் பலமரைதா னரைத்துப்போட்டு, ஏங்கியே வடுப்பேற்றி மெழுகுபதமானால் என்னசொல்வேன் கலசத்துள் வடித்துவைத்து ஆங்கியே கால்சேர்தான் கொடுத்தாயானால் அப்பனே சுகமாக பேதியாமே. (250)

ஆமப்பா நீர்கட்டு வாய்வுஊதல் அப்பனே வாய்வெல்லா மக ன்றுபோகும், தாமப்பா சரீரமெல்லாம் குளிர்ச்சியாகும் தளறாத வயிறுவிம்மல் தளர்ந்துபோகும், நாமப்பா மூலத்தின் குடெல்லாம் போம் நாடாது பித்தமெல்லாங் கீழேசாடும், போமப்பா விதனைப் போல் பேதியெண்ணெய் பூதலத்தில் சுகபேதி யில்லைதானே. ()

பழத்தெண்ணெய்.

தானென்ற பழத்தெண்ணெய் சொல்லக்கேளு தவறாமல் பழச்சாறு படிதானென்று, நானென்ற முத்தெண்ணெய் படிதா னென்று, நலமான குமரிச்சாறு படிகானென்று, வேனென்ற கடுக் காய்தான் பலமிரண்டு விருதாக வரைத்தெண்ணெய் தன்னிற்போ ட்டுக், கானென்ற வடுப்பேற்றி மெழுகுபதமானால் கண்டப்பா வடி கொண்டு கலசம்வாரே. (252)

வார்த்தப்பா கால்சேர்தான் கொடுத்தாயானால் வாங்குமடா பித்தமென்ற நாற்பதும்போம், எத்தப்பா வெரிவுமுதல் காந்தி தீரும் என்னசொல்வே னுஷ்ணநோ யெல்லாந்தீரும், காத்தப்பா பட்சமொன்று கொடுத்தாயானல கருவான நோயெல்லாங் காணு தோடும், பார்த்தப்பா வயிற்றிலுள்ள வியாதியெல்லாம் பறக்குமடா பித்தநோய் பாரும்பாரே. (253)

வீரபத்திரக்கலிக்கம்.

பாரப்பா வீரபத்திரக்கலிக்கங்கேளு பறக்குமடாபசாசுமுதல் சன்னியெல்லாம், சேரப்பா திரிகடுகு கடுக்காயிந்து திறமானவாள மொடு கிரும்போடேழும், வேரப்பா வெந்தயச்சா றதனாலாட்டி வெகுசுறுக்காய் கால்சாம மரைத்துக்கொண்டு, ஆமப்பா முன்காற் றிற் கலிக்கம்போட அப்பனே சன்னிமுதல் தோஷம்போமே. ()

### ஆக்கிராணநசியம்.

போமப்பா வாக்கிராணஞ் சொல்லக்கேளு புகழான கண்டை
வேர் தும்பைமூலம், நாமப்பா விலுப்பைப்பிண்ணாக்குசுட்டு நல
மாக மூன்னிரண்டும் ரவிபுலர்த்தி, சேமப்பா பொடிசெய்து வடி
கட்டிக் கொண்டேதான் திறமான குழலடைக்காக் கிராணஞ்செய்
யத், தாமப்பா தலையிலுள்ள தோஷமெல்லாம் சுண்ணுண்டு போகு
மடா வின்னங்கேளே. (255)

### நசியம்.

கேளப்பா விலுப்பையிட பழம்பிண்ணாக்குக் கிரிகையாய்ப்
பொடிசெய்து துணியிற்கட்டி, வாளப்பா வாலைபிட ஊசிநீரில் மைந்
தனே நசியமிடச் சன்னிதோஷம், தாளப்பா பித்தத்தா லெடுத்த
தோஷம், தளமான கபவாத தோஷமெல்லாம், ஆளப்பா பிரம
ராட்சதன் மூதலாய் ஆகாய பசாசுமுத லகன்றுபோமே. (256)

### கண்டாவிழ்தம்.

போமப்பா கண்டாவிழ்தஞ் சொல்லக்கேளு புதுமையாந்தங்க
மொடு வெள்ளிமுத்து, நாமப்பா மதுரமொடு கிராம்புதிப்பிலி நல
மான பவளமொடு ருத்திராட்சம், தாமப்பா கோஷ்டமோ டக்கிரா
காரம் தளமான காமப்பூ கூவிளத்தின்மூலம், ஆமப்பா கலைக்கொம்
புச் செந்தூரம் அப்பனே யாடாதோடை மூலநதானே. (257)

தானென்ற மூலைப்பாலா லரைத்துக்கொண்டு தப்பாமல்தேன்
குத்தி நாவிற்போட, நானென்ற தோஷமொடு சன்னியெல்லாம்கா
டாது நாவரட்சி நாவழுத்தல், தேனென்றஸ்திரீசங்கோததோஷம்
வாந்தி திறமான விக்கல்முதல் தீரும்தீரும், வர்னென்ற வாதமெல்
லாம் வாங்கிப்போகும் மளமான நாக்கின்முள்ளும் வாங்குந்தானே.

### சூரணங்களின்சுத்தி.

தானென்ற சூரணத்தின்சுத்திகேளு தப்பாதேசரக்கெல்லாஞ்
சூரணித்து, நானென்ற வாவின்பா லாற்பிசைந்து நலமானசட்டியி
லே பாலைவிட்டு, வானென்ற சுத்திசலம் பாதிவிட்டு வளமாக மேற்
சீலைகோடுகட்டிப், பானென்ற சூரணத்தைப் பிட்டுபோல்வைத்துப்
பதருதே வெந்தெடுக்கச் சித்தியாமே. (259)

ஆமப்பா ரவியுலர்த்திப் பொடிதான்செய்து அப்பனேசமனுப்
சர்க்கரையைச் சேர்த்து, நாமப்பா கொண்டுவரத் தோஷம்போ
சசு நன்றாக சுத்திசெய்யாச் சூரணந்தான், தாமப்பா ரோகத்தை
வல்லாதப்பா தளமான வியாதியெல்லாம் பாரிக்கும்பார், வேமப்

பா சுத்திசெய்து கொண்டாயானால் வெகுசுறுக்காய்த் தீருமடா வியாதிகேளு. (260)

## செந்தூரவைப்புக்கரு.

கேளப்பா செந்தூரப் பற்பமெல்லாம் கெடியான சிங்கமுப்பூ தொட்டலாகும், நாளப்பா விதைவிட்டால் பற்பமில்லை நன்றான லோகமுல் சிவப்பேறாது, வாளப்பா விதுவல்லோ புடத்துக்காதி வகையறியார் வைத்தியனல்லோ மாடுமேய்ப்பான், தாளப்பா வைத்தியர்க்காய்க் கருவைச்சொன்னேன் தப்பாது பற்பமுறை செந்தூரந்தானே. (261)

## லோகசெந்தூரம்.

தானென்ற லோகசெந் தூரங்கேளு தயவான யரப்பொடியில் நல்லெண்ணெவிட்டு, வானென்ற நாழிகைதான் அறுபதானால் வளமாக வறுத்ததனைப் பீங்கானில்விட்டு, நானென்ற பழச்சாறுபிழிந்துவிட்டுநலமாகக்கிண்டிவைத்துநாலாநாளில், தேனென்றேயுறுஞ்சியதைக் கழுவிபோட்டுத் திறமாக ரவியுலர்த்திப் பலந்தான் தூக்கே.

தூக்கியே செந்தித்த கெந்திகேளு சுகமாகப் பலமொன்று கூடப்போட்டு, தாக்கியேபழச்சாற்றால்சாமம்நாலுசரியில்லாப்பொற்கலையால் சாமம்நாலு, தேக்கியேயரைக்கையிலே முப்பூவப்பா திறமாகக் கழஞ்சுநிறை சேர்த்துப்போட்டுத், திறமாக வாங்கியேசெந்து ரவியிற் காய்ந்தால் வளமான முப்பதெருப் புடத்திற்போடே.

போடப்பா முக்காலும் பொற்கையானால் புகழாக நாற்சாமமாட்டிக்கொண்டு, நாட்டப்பா பில்லைசெய்து ரவியுலர்த்தி நலமாக முன்போலே புடத்தைப்போட்டு, ஆட்டப்பா வாறினபின் னெடுத்துப்பாரு அப்பனே முருக்கம்பூப் போலாம்வர்ணம், நாடப்பா பணவெடை அனுபானத்தில் நலமாகத் தேன்கூட்டிக் கொள்ளு கொள்ளே. (264)

கொள்ளவேபாண்டுவகை யெல்லாந்தீரும் குறியான பித்தவெட்டை பித்தவாய்வு, நள்ளவே வாய்வென்ற தெல்லாந்தீரும், நாடாதே யரோசிபங்க ளன்னத்தோஷம், விள்ளவே மயக்கமொடுவாந்தி தீரும் விருதான பித்தமெல்லாம் விழலாய்ப்போகும், தள்ளவே யிஞ்சியென்ற சூரணத்தில் சாப்பிடவே தேன்கூட்டிச்சாறும்வாரே.

## அயக்காந்தச்செந்தூரம்.

பாரப்பா காந்தத்தை யிப்படியே செய்யில் பரிவான காந்தமொடு சிவப்புமெத்த, சாரப்பா வனுபான மறிந்துகொண்டால்தப்பான மூலவகை யாவுந்தீரும், சோரப்பா பித்தமெல்லாஞ் சிதறிப்போகும் தேகத்தில் பாண்டுவெல்லாந் தீருந்தீரும், ஆரப்பா தேனிலேகொண்டாயானால்அருணனைப்போல்காந்தியாமதிந்துகொள்ளே.

கொள்ளவே அயக்காந்தச் செந்தூரங்கேள் குறிப்பான ரண்டையுந்தான் சுத்திசெய்து, நள்ளவே சமனாக ரண்டையுந்தான் கூட்டி, தள்ளவே வெண்காரங் கால்தான்கூட்டித் தயவான ரசங் கால்தான் கெந்திசமனப்பா, விள்ளவே சத்திசெய்து கல்வத்திட்டு விருதான பழச்சாற்றூற் சாமம்நாலே. (267)

நாலாக முப்பூவுங் கழஞ்சிரண்டு நலமான பொற்றலையால் சாமம்நாலு, நாலாக வரைத்துபில்லை ரவியிற்காய்ந்தால் கருவான வோட்டில்வைத் தோடுமூடிச், சாலாக முப்பதெருப் புடத்திற் போடு தப்பாது செந்தூரமருணன்போலாம், மாலாகபணவி[illegible]தானனுபானத்தில் மைந்தனே கொண்டுவரப் போம்நோய்கேளே.

கேளப்பா பாண்டாறுங் கிராணியாறும் கிருமையாய்பித்தமது நாற்பதும்போம், நாளப்பா வாய்போட்டு வாதமெல்லாம் நாடாதே யக்கினிபாமந்தங்கேளு, சூளப்பா தாதுவெல்லா முறுக்கத்தேறும் சுகமாக வெளுத்தசடம் வண்டுபோலாம், ஆளப்பா யிரைத்தேனிற் கொண்டாயானால் அணுகாத பாண்டுவென்ற ரோகம்போமே. ()

போமப்பா சூலையொடு வாயுவெல்லாம் பொல்லாத கெர்ப்ப நோய் சொல்லாதோடும், காமப்பா வாந்தியொடு பொருமல் விக்கல் நாடாதவுஷ்ணமாம் வாய்வுதீரும், தாமப்பா சேத்துமங்களெல்லாந் தீரும் தலைமயக்கம் வாயூறல் சாந்தமாகும், வேமப்பாபத்தியங்கார் பித்தமெல்லாம் வெகுசுறுக்காய் தீருமடா வின்னங்கேளே. (270)

திரிலோகசெந்தூரம்.

கேளப்பா திரிலோகச் செந்தூரந்தான் கெடியான லோகமோடப்பிரேகங்காந்தல், நாளப்பா மூன்றையுந்தான் சுத்திசெய்து நலமாகச் சமன்கூட்டிக் கல்வத்திட்டுத், தாளப்பா சுத்தித்த கெந்திசமன்கூடத் தப்பாமல் வாலைரசம் பாதிசேர்த்து, ஆளப்பா பழச்சாற்றூற் சாமம்நாலு அப்பனே யரைக்கையிலே பூநீறுபோடே.

போடப்பா முக்கழஞ்சு தூக்கியேதான் பொற்றலைபால் நாற்சாம மரைத்துக்கொண்டு, நாடப்பா செருப்படையால் சாமம்நாலு நன்றானகுமரிச்சாறு சாமம்நாலு, தேடப்பா பில்லைசெய்து ரவியிற்போடு திறமாக வோட்டில்வைத்துக் கோடுமூடி, ஆடப்பா சீலைசெய்து புடத்தைப்போடு ஆறியபின் னேயெடுத்து யுரைக்கக்கேளே.

கேளப்பா லிங்கமரைப் பலந்தானகூட்டிக் கெடியான குமரிச்சாறு சாமமிட்டு, நாளப்பாவரைத்துபில்லை ரவியிற்காய்ந்தால்கன்

ருக மூப்பதெருப் புடத்தைப்போடு, வேளப்பா செந்தூரமருணன் போலாம் வெகுசுறுக்காய் சஞ்சீவி சூரணத்தில், தாளப்பா பணவி டைதா னெய்யிற்கொள்ளத் தப்பாது மேகநீர் தவறிப்போமே. ()

தவறிப்போம் பாண்டுவகை யெல்லாந்தீரும் தப்பாது பித்த மென்ற நாற்பதும்போம், தவறிப்போ மேகமென்ற விருபத்தொன் றும் சாந்தமரம் வாய்வெல்லா மொழிந்துபோகும், தவறிப்போ முட்சூடு மிருமலெல்லாஞ் சந்திரன்போல்தேகமெல்லாங் குளிர்ச்சி யாகும், தவறிப்போம் பித்தத்தின் கோபமெல்லாம் சண்ணுமடா வின்னமொன்று சாற்றக்கேளே. (274)

பஞ்சலோகச்செந்தூரம்.

கேளடா பஞ்சலோகச் செந்தூரந்தான் கெடியானதங்கமொடு வெள்ளிசெம்பு, நாளடா காந்தமோடிரும்பில்வைத்து நலமாகச்சுத் திசெய்து சமனுய்க்கூட்டி, வேளடா கெந்தகந்தான் ரட்டிப்பிட்டு வெகுவான சூதமரை வீரங்கால்தான், ஆளடா முப்பூவின் சுண்ண மொன்று அப்பனே பழச்சாற்றால் சாமம்நாலே. (275)

நாற்சாமமரைத்துமே யுலாவைத்து நன்றாகவேட்டிலிட்டோ டுமூடிச், சீலான சீலைசெய்து முழப்புடத்தின் சென்றேதானுறின பின னெடுத்துக்கொண்டு, காலான கரிசலைச் சாற்றிலாட்டிக் கசகா மல் நாற்சாம மரைத்துக்கொண்டு, வேலான முழுப்புடத்திற் செந் தூரமாகும் விதமாகச் செருப்படைநாற் சாமமாட்டே. (276)

ஆட்டியே முழுப்புடத்திற் செந்தூரந்தான் அருணனைப்போ னிறமாகுமெடுத்துக்கொண்டு, மூட்டியே திரிகடுகிற் பணந்தான்கொ ள்ள மூதண்ட தேன்கூட்டி மண்டலந்தான், காட்டியேவாயுவென்ற தெண்பதும்போம் நாடாது பித்தத்தின் மூலந்தீரும், காட்டியே சேத்துமங்க ளிருபதும்போம் கருவாகவின்னமொரு சுருதிகேளே.

மண்டூரச்செந்தூரம்.

கேளடா வாயிரந்தான் வருஷஞ்சென்ற கெடியான சிட்டமது கொண்டுவந்து, தாளடாவாவினீர் தன்னிலேதான் தளமாகக் காய்ச் சியேதோய்ச்சுத்தோய்ச்சு, வேளடாபத்துவிசை தோய்ச்செடுத்து விருதான கல்வத்திற் பொடியாய்ச்செய்து, நாளடாபத்திலொன்று கெந்திசூதம் நலமான லிங்கமுப்பு வெண்காரங்கூட்டே. (278)

கூட்டியேபழச்சாற்றில் புடந்தான்பத்து கூசாதே கரிச்சாலைப் புடந்தான்பத்து, ஆட்டியே செருப்படையின் புடந்தான்பத்து அப்

பனே செம்பைச்சாறு புடந்தான்பத்து நீட்டியே வராகனிட பட்டைச்சாற்றில் நேராகப் புடமஞ்சு போட்டெடுத்து, நாட்டியே செந்தூரம் பொடிதான்செய்து நலமான பரணிதனி லடைத்துக் கொள்ளே. (279)

கொள்ளவே திரிகடுகு தேனிலேதான் கூசாதே பணம்ரண்டு கூட்டிக்கொள்ளே, விள்ளவே விப்பாண்டு காமாலையாறும் விருதான பாண்டுவகை குடிபோமப்பா, தள்ளவே பித்தமெல்லாங் கீழே சாடும் தளமான சேத்துமரோய் தொண்ணூற்றுறும், கள்ளவே கடல்புக்கிக் காணுதோடும் கண்டாயோ வெண்பாண்டங் கரும பாண்டமாமே. (280)

ஆமப்பா வரோசிகங்க ளன்னத்தோஷம் அகலாத வாக்கிவிக் கல் அகன்றுபோகும், தாமப்பா வாயுவென்ற தெல்லாம்போகும் தளமானநீர்த்தோஷ நாடாதோடும், காமப்பா ஊறுமடாதேகமின்னும் கலகலெனத் தேகமுழு திறுகிப்போகும், நாமப்பா கண்டபடி சொன்னேமின்னம் நலமான வப்பிரேக வகைசொல்வேனே. (281)

அப்பிரேசகச்செந்தூரம்.

சொல்லக்கேள் கிருஷ்ணவப்பி ரேகம்வாங்கி சுறுக்காகக்காய்ச் சியே பாலிற்போட்டு, வல்லக்கேள் கழுவிபதை யெடுத்துக்கொண்டு வாகான நெல்லோடப் பிரேகங்கூட்டி, நல்லக்கேள் காடியிலேபிசைந்தாயானால் நலமானவப்பிரேக மிறங்கும்பாரு, வெள்ளக்கேள் மறுநாள்தான் தெளிவிறுத்து விருதான வப்பிரேகம் ரவியிற்போடே.

போட்டப்பா வுலர்ந்தபின் னெடுத்துக்கொண்டு புகழான கல்வத்திற் போட்டுநீயும், ஆட்டப்பாபழச்சாற்றால் நாலுசாமம் அப்பனே பத்திலொன்று கெந்திகூட்டி, நாட்டப்பாபில்லைதட்டி ரவிரண்டேதான் நலமாக முப்பதெருப் புடத்திற்போட்டு, நீட்டப்பா கெந்தியிட்டு பழச்சாற்றாலே நேராக நாற்சாமமரைத்துக்காட்டே.

காட்டியே ரவிதனிலே காய்ந்தபின்பு கனமான வோட்டிலிட்டுப் புடத்தைப்போடு, ஆட்டியே கல்வத்திற் போட்டுநீயும் அப்பனே கெந்தியிட்டுப் பழச்சாறூட்டி, ஆட்டியே பத்துவிசைபுடத்தைப்போடு அழகாகப் பின்னெடுத்துக் கரிசாலைச்சாற்றில், காட்டியே புடம்பத்துப் போட்டெடுத்து வாகான செருப்படைச்சாறு விட்டாட்டிடே. (284)

ஆட்டியே யிருசாம மூறவைத்து அப்பனேபுடம்பத்துபோட் டெடுத்து, நீட்டியே பொடுதலைச்சாறு புடந்தான்பத்து நேரான பொற்றலையிற் புடந்தானஞ்சு, நாட்டியே சிறுசெருப் படையின் சாற்றூற் நசகாமற் புடமஞ்சு போட்டெடுத்து, மாட்டியே முருகப் பூச்சாற்றாலாட்டி மைந்தனே புடமைந்து போட்டுக்கொள்ளே. ()

கொள்ளப்பா செந்தூர மருணன்போலாம் கொடிதானவனுபா ன மறிந்துகொள்ளு, விள்ளப்பாசயமெட்டு மீளையிருமல் ஈருதான சேத்துமநோய் தொண்ணூற்றூறும், கள்ளப்பா பறந்தோடுங் கட லேபுக்குங் கருவான சஞ்சீவி சூரணத்தில், அள்ளப்பா பணவிடை தான் தேனிற்கொள்ள அற்றுப்போ நீரிழிவு மகன்றுபோமே. ()

போமப்பா தேகத்துள் மார்தையெல்லாம்போகுமடா பிரமிய நோ யிருமலெல்லாம், சாமப்பா வுட்சூடெ ளெரிவுதானும் தளமான தேகமெல்லாம் குளிர்ச்சியாகும், வேமப்பா விந்தூறும் புஷ்டியாகும் வெருநாளை யெனும்புருக்கி விழலாய்ப்போகும், காமப்பா கண்குளி ருந் தேகமின்னும் கனமான பற்பவகை சொல்லக்கேளே. (287)

துருசுகுரு.

சொல்லக்கேள் புலத்தியனே பற்பத்துக்குச் சுறுக்கான குரு வொன்றுசூட்டக்கேளு, வல்லக்கேள் துருசுசுத்திபண்ணிக்கொண்டு வகையாகமுப்புநீர் மூன்றுநாள்தான், அல்லக்கேள் சாரநீர் மூன்று நாள்தான் அழகாக ரவியுலர்த்திப் பலந்தான்தூக்கு, வல்லக்கேள் வங்கத்தைதக்கடுஞ்சின்ணமூதி வாகாகவெடைக்கெடைதான்கவசம் போடே. (288)

இரசபற்பம்.

போடப்பா ரவியிலே யேழுநாள்தான் புகழாகக் காய்ந்தபின்பு சுண்ணச்சீலே, நாடப்பா மூன்றுசுத்தி காயவைத்து நலமானகாடை யிலே அருவுமாகும், பாடப்பா சிமிளுக்குள் பதனம்பண்ணி பறக்கி றதோர் சூதகத்தில் பத்திலொன்று, நீடப்பா வாய்நீரோ லரைத்துப் பில்லை நிசமாக ரவியுலர்த்தி யோட்டில்வையே. (289)

வையப்பா மேற்கீழுங் கல்லுச்சுண்ணம் வகையாகநடுவில் வில் லை வைத்துமூடி, செய்யப்பா சீலையது மூன்றுசெய்து திறமாக குக் குடத்திற்பற்பமாகும், மெய்யப்பா ரசபற்பம் பரணிதனிலடைத்து விருதான நெய்தேனிற் பணந்தான்கொள்ள, நையப்பா காலோடு முடக்குச்சூலை கண்காணு தோடுமடா வின்னங்கேளே. (290)

கேளடா சர்வாங்க வாதந்தீரும் கெடியானகுன்மநோயெட்டுந் தீரும், பாளடா விசுவுமுதல் பறந்தேபோகும் பறக்குமடா சன்னி யென்ற பதின்மூன்றுந்தான், கேளடா குத்தியதோர் கபாலசூலை

கெதிகெட்டே யோடுமடா சிரநோயெல்லாம், வாளடா தேகமது வலுத்துப்போகும், மகத்தான கெர்ப்பநோய் மாறுந்தானே. (291)

## தாளகபற்பம்.

மாறுமடா வின்னமொன்று சொல்லக்கேளு வகைபானதாள கந்தான் சுத்திசெய்து, வீறுதடா ரசபற்பந் துருசுநீரும் விரகாத வாய்நீரா லரைத்துக்கொண்டு, சாறுமடா சமயந்தானுந் தாளகத்தி லப்பிச் சதுராக ரவியுலர்த்திச் சுண்ணச்சீலை, சீறுமடா மூன்று செய்து சுண்ணத்தில்வைத்துச் சிறப்பாகக் குக்கிடத்தில் சிவன் போலாமே. (292)

ஆமப்பா மால்தேவிபற்பந்தன்னை அளவிலொருபணந்தூக்கித் தேனிற்கொள்ள, போமப்பா க்ஷயமெட்டு மிளைப்போடீளை விரு தான சிலேஷ்மநோ யெல்லாந்தீரும், சாமப்பா பிரமியநோய் சாரா தோடும் சடலத்தில் கெர்ப்பநோய் சட்டென்றோடும், காமப்பாவெ லும்புருக்கி யஸ்திரணங்கள் கண்காணுதோடுமடா வின்னங்கேளு.

## வங்கபற்பம்.

கேளடா வங்கத்தை சுத்திபண்ணிக் கெடியாக லேசாகத்தகடு தட்டித், தாளடாதாளகமும் ரசமூங்கூட்டிச் சமனாகவாய்நீராலரை த்துக்கொண்டு, வாளடா வங்கமென்றக் கட்டிதன்னை வளமாகப் பூசியே சமனாய்நீயும், ஆளடாரவிமுகத்தி லுறப்போட்டு அப்பனே சுண்ணும்புச் சீலைசுற்றே. (294)

சுற்றியே சுண்ணும்புக் குள்ளேவைத்துச் சுகமாகமுழப்புடத் தில் நீறிப்போகும், மத்தியேவங்கமென்றபற்பந்தன்னை வரிசையா ய்த் திரிபலாதி சூரணத்தில், குத்தியே பணவிடைதான் தேனிலப் பா கொண்டுவர பத்துநாள் தீரும்நோய்கேள், வற்றியே ரமியங்கள் பிரமேகங்கள் வளருகின்ற வெலும்புருக்கி மாண்டுபோமே. (2 5)

மாணடுபோன கிரந்தியது நூற்றுப்பத்தும் வறட்சியொடு சொரிசிரங்கு மாண்டுபோகும், பாண்டுபோம் மேலூறல் படர்ந்த வூறல் வகையான சிலவிடங்கள் மாறிப்போகும், மாண்டுபோம் பெரும்பாடு வயற்றில்குத்தல் மகத்தான புகைச்சல்விழி மாறிப் போகும், மாண்டுபோ மேகமென்ற சூலையெல்லாம் வகையான நாகததின் பற்பங்கேளு (296)

## நாகபற்பம.

கேளப்பா நாகத்தைச் சுத்திபண்ணிக் கெடியாக லேசாகப் பில்லைதட்டித், தாளப்பா தாளகமும் வங்கபற்பம் சமனாகநாகத்துக் கிடையேதூக்கி, வாளப்பா வாய்நீரா லறைத்துக்கொண்டு வளமா

கச்சீலேமேல் பூசிக்காய்ச்சித் தாமப்பா சுண்ணும்புச் சீலைசுற்றிச் சுத்தமாஞ் சுண்ணும்புக் குள்ளே வையே. (297)

வைத்தப்பா முழுப்புடத்தில் நீறிப்போகும் * வாசுகிதானீறி யபின் சொல்லக்கேளு, வைத்தப்பா திரிகடுகு தாளிசப்பத்திரிகரு வான லவங்கமைந்துஞ் சமனுப்க்கூட்டி, வைத்தப்பா ரவியில் வைத் துச் சூரணித்துப் பதருமே வடிவுகொண்டு வைத்துக்கொண்டே, சுத்தப்பா பணவெடைதான் தேனிற்கொள்ள எழுந்ததொரு சிலே த்துமரோய் தொண்ணூற்றுமே. (298)

ஆறுன ரோகமெல்லா மற்றுப்போகும் அப்பனே வாதமென்ற தெண்பதும்போம், வீறுன பித்தமது நாற்பதும்போம் வெகுசுழுக் காய் மேகமொடு சூலைதீரும், நாறுன குட்டமென்ற தெட்டுந்தீரும் நலமான கடிவிஷங்கள் சாராதோடும், கூறுன குறியெரிப்பு பத்துந் தீரும் குன்மமென்ற சூலைமுதவ் குடிபோம்பாரே. (299)

## தாம்பிரபற்பம்.

பாரப்பா தாம்பிரபற்பம் பழச்சாறுதன்னில் பதருமே பதினை ந்து தரமேசாய்த்து, நேரப்பா லேசாகத் தகடுகட்டி நினைவாக நாக முந்தா ளகமுங்கூட்டிச் சாரப்பா வாய்நீரா லரைத்துக்கொண்டுசம ணுகத் தாம்பிரந் தனக்குப்பூசி, ஆரப்பா ரவியுலர்த்திச் சுண்ணச் சீலை அப்பனே சுற்றியே சுண்ணத்தில்வையே. (300)

வைத்தப்பா கஜபுடமாய்ப் போட்டெடுக்க வாகான தாம்பிர பற்பமாகும், கைத்தப்பா போகாது வெகுசுழுக்காய் ககணடாவனு பான மறிந்துபோடு, குத்தப்பா குன்மமெட்டும் சூலைபதினெட்டுங் குடிபோகுந் திரிகடுகுதேனிற்கொள்ளச், சித்தப்பாயீளையோடிருமமெல்லாஞ் சிதறிப்போம் வெள்ளியிட பற்பங்கேளே. (301)

## வெள்ளிபற்பம்.

கேளப்பா வெள்ளியது தகடுகட்டிக் கெடியான ரசபஸ்பம் வங்கபற்பம், நாளப்பா தேகமொடுமூன்றுரோய் நலமாகவாய்நீரா லரைத்துக்கொண்டு, கேளப்பா வெள்ளிக்குச் சமனுய்ப்போடு விரு தான ரவியுலர்த்திச் சீலைசெய்து, சூளப்பா சுண்ணும்புக் குள்ளே வைத்து திடியாக முழுப்புடத்தில் ஆக்கிவாங்கே. (302)

வாங்கியதோர் பற்பமதைப் பதனம்பண்ணு வகையாகப் பண வெடைதான் தேனிற்கொள்ளத், தேங்கியதோர் கல்லடைப்புச் சதையடைப்புத் தீராத திரிச்சுணங்கள் தீருந்தீரும், ஏங்கியதோர் காசமோ டிளைப்புந்திரு மிளைக்குமே லிங்கப்புற்று யோனிப்புற்று, பாங்கியே கிரந்தியரி மேகமெல்லாம் பறக்குமடா வின்னமொரு பற்பங்கேளே. (302)

---

* வாசுகி - நாகம.

### தங்கபற்பம்.

கேளப்பா தங்கமொரு பலந்தான்வாங்கிக் கிருபையாய்த்தகடு கட்டிச் சொல்லக்கேளு, நாளப்பா பழச்சாற்றில் பூங்காவியாற்றி நலமாகத் தகட்டின்மேற் பூசிக்காய்ச்சித், தாளப்பா வைந்துதரங் காய்ச்சிக்கொண்டு தளமாக வங்கபற்பம் நாகபற்பம், கேளப்பா ரசபஸ்பம் வீரம்வெள்ளை கோசமனா யண்டத்தி நீராலாட்டே. (304)

ஆட்டியே சமனாகத்தகட்டிற்பூசி அப்பனே யண்டத்தில் சுன்னம்வைத்து, நீட்டியே மேல்மூடிச் சீலைசெய்து நேராக முழுப்புடத்தில் நீலிப்போகும், காட்டியே கறுத்தாக்கால் வீரங்கால்கூட்டிக் கனமான வண்டநீர் தன்னாலாட்டிச், சாட்டியே ரவியுலர்த்தியோட்டில் வைத்துச் சாங்கமாய் முழப்புடத்தில் தாக்கிவாங்கே. (305)

வாங்கியே யெடுத்துப்பார் வெண்ணீறாகும் வளமானதேனெய் சர்க்கரையிற்கொள்ளச், சாங்கியே சந்நியென்ற மூலமெல்லாம் தப்பாது தோஷமென்ற வேழுந்தீரும், நீங்கியே வலிப்பிசுவும் பறந்துபோகும் நினைவுகெட்ட சேத்துமநோய் தொண்ணூற்றாறும், தேங்கியே வாதரோ யெண்பதுந்தான் சிதறிப்போம் பித்தமது வொழிந்துபோமே. (306)

ஒழிந்துபோம் பித்தவெட்டை கிராணிபெரும்பாடு ஒழியாத பிரமியநோ யொடுங்கிப்போகும், ஒழிந்துபோம் குன்மமெட்டு பாண்டோராறும் உத்தமனே மேகாலக்கழிச்சல்தீரும், ஒழிந்துபோம் சூலைமுத லிசுவுரோகம் ஓகோகோ குட்டமெட்டும் கடலேபுக்கும், ஒழிந்துபோம் கிர்ந்தியொடு வெடிமேகந்தான் உட்சுரங்கள் நீர்சுருக்கு மோடும்பாரே. (307)

### வெண்காரம் சலாசத்து கலைக்கொம்பு கல்நார்பற்பம்.

பாரப்பா வெண்காரஞ் சலாசத்துதான் பாங்கான கலைக்கொம்பு கல்நாருந்தான், சேரப்பா சமனாகப் பொடித்துக்கொண்டு சிறப்பானபருத்திதான் மூலமெல்லாம், சேரப்பா சுட்டதனைச்சாம்பலாக்கி சீராகப் படியொன்று வளக்துகொண்டு, வாமப்பா நாலாறு படி சலந்தான் வாகாகக் கலக்கியதை மூடிவையே. (308)

வைத்தப்பா நாலாநாள் தெளிவிறுத்து வாகாசமுன்மருந்தின் விட்டேயாட்டிக், கைத்தப்பா நால்சாம மரைத்துவில்லை கனமான ரவியில்வைத் துலரப்போட்டு, ஒத்தப்பா ஓட்டிவைத்தோடுமூடி யுத்தமனே சீலைகட்டி முழப்புடத்திற்போடு, நித்தப்பா நீறுமது வெள்ளையாகும் நினைவாகப் பின்னுமந்த நீராலாட்டே. (309)

ஆட்டயிலே சாரமது காசுபோடு அடங்காது சூடனது காசுபோடு, நீட்டயிலே வீரமது காசுபோடு நினைவாகப்பூநீறு காசுபோடு, நாட்டயிலே நாற்சாம மரைத்துக்கொண்டு நலமாக வில்லைதட்டி

ரவியுலர்த்தி, சூட்டயிலே சுண்ணும்பு பொடியில்வைத்துச் சுறுக் காக முழுப்புடத்திற் சூட்டிவாங்கே. (310)

வாங்கியே சுறுக்காக வண்டநீரால் வளமாக வரைத்தொரு புடந்தான்போடு, தாங்கியே வெண்மையது சங்குபோலாம் தள மான லிங்கமது சுத்திசெய்து, பாங்கியே பலத்தில் பாதிலிங்கம் பச்சையாய்ச் சேர்த்துநீபொடியாய்ச்செய்து, தேங்கியே இளநீரிற் பணந்தானிரண்டு தீர்க்கமாய் கொண்டுவர போம்நோய்கேளே. ()

கேளப்பா பெருவயிறுமகோதரங்கள் கிரிச்சனங்கள் கல்லடை ப்பு நீரடைப்பு, நீளப்பா நீருகல் நீரெரிவுதானும் நீடாது கதை யொடு நீராம்பல்தானும், ஆளப்பா நீர்ச்சுறுப்பு வுப்பிசங்கள் அணு காது வயிற்றிலுள்ள நீர்க்கட்டும்போம், கேளப்பா நீருகல் துள்ளி விழ்தல் தீருமப்பா பவளமது பற்பங்கேளே. (312)

பவளபற்பம்.

கேளப்பா பவளமது பலந்தானொன்று கெடியான பீங்கானில் நறுக்கிப்போடு, வேளப்பா பழச்சாறு விட்டுநீயும் விருதான நாழி கைதா னறுபதானல், நாளப்பா கழுவியதை யெடுத்துக்கொண்டு நலமான கற்பூரச் சிலாசத்துதான், தாளப்பா சமனுகக்கல்வத்திட் டுச் சார்வான பிரண்டைச்சா றதனலாட்டே. (313)

ஆட்டியே நால்சாமம் பில்லைதட்டி அப்பனே ரவியுலர்த்தியோ ட்டில்மூடி, நாட்டியே முழுப்புடத்தில் நீரும்பாரு நன்றாகப்பின்னு மந்தச் சாற்றாலாட்டிக், காட்டியே ரவியுலர்த்திப் புடத்தைப்போடு கருவான புளியாரைச்சாற்றாலாட்டி, நீட்டியே விருசாமமரைத்துக் கொண்டு நினைவாகப் புடம்போடப் பற்பமாமே. (314)

ஆமப்பா பணவெடைதான் வெணணெயிலேசொள்ள அடங் காத மேகமெல்லா மகன்றுபோகும், வேமப்பா வெலும்புருக்கியஸ் திமேகம் விருதான மதுமேகமெட்டும்போகும், தாமப்பாதேனிலே கொண்டாயாறல் சகலரண மேலூறல் தவறிப்போகும், தாமப்பா வாயுவெல்லாம் கீழேநோக்கும் தப்பாதுமேகத்தின் தினவுபோமே.

வாதசுரக்கியாழம்.

போமப்பா சுரங்களறு பத்துநாலும் புகழாக வாதசுரமுப்பத் திரண்டு, ஆமப்பா பித்தசுரமிருபத்தொன்றும் அளவானசேத்தும நோய் பதினொன்றப்பா, வகையான மூன்றறுபத்து நாலுக்கும் நல மான வாதசுரக் கியாழங்கேளு, வேமப்பா சிறுதேக்கு சுக்கு திப்பிலி விதமான செவியமோடு கோஷ்டந்தானே. (316)

தானென்ற துராலப்பை திப்பிலிமூலம் தருமானசித்திரமூலஞ் சங்குமூலம், வேனென்ற வெள்ளருகு நிலவேம்போடு விருதான முருக்கம்வேர் கழற்கிவேரும், கானென்ற கண்டங்கத்திரி பேரா முட்டி கருவான சிற்றரத்தை பாவிலிங்கம்வேரும், தேனென்றசிறு காஞ்சோரிபேரரத்தைதெளிவானசதகுப்பை விஷ்ணுகாந்திபாரே.

பாரப்பா விந்தவகை யிருபத்தொன்று பலவிதம் தூக்கியே பிடித்துனைப், சேரப்பா விருபத்தோர் பங்குபண்ணித் திறமாக ஒருபங்கு சட்டியிலிட்டு, வாரப்பா மூன்றுசேர் ஜலந்தான்விட்டு வளமான நாழிகைதான் முப்பதானல், ஆரப்பா வடுப்பேற்றிக் கால்சேரானல் அப்பனே வடிகொண்டு பீங்கானில்வாரே. (318)

வார்த்தப்பா வாதராட் சதங்குளிகை வளமாகப்பலமொன்று பொடித்துப்போட்டுத், தேர்த்தப்பா தேனதிலே கழஞ்சிகுத்தித் திறமாக விருநேரங் கொடுத்தாயானல், பார்த்தப்பா வாதசுரம் நடுக்குவாதம் பதறுகின்ற நாளின்முறை பறந்துபோகும், கார்த்தப்பா கடுப்புவலி கடலிலேபுக்கும் கருவான பித்தரோய்க்கியாழங் கேளே. (319)

பித்தசுரக்கியாழம்.

கேளப்பா பித்தசுர மிருபத்தொன்றும் கெடியாகத் தீருமடா கியாழங்கேளு, நாளப்பா விலாமிச்சை சிறுகாஞ்சோரி நலமான வில்வவேர் பாதிரிவேர்தானும், ஆளப்பா வதிமதுரஞ் செவ்வல்லி கோஷ்டம் அப்பனே நன்னரி நிலவாவாரை, தேளப்பா சீரகமுங் கொத்தமல்லி திறமான தும்பைவேர் பேரிச்சங்காயே. (320)

காயோடு யானைத்திப் பிலியுமப்பா கருவானநெல்லிமுள்ளிசுக் கோடொக்கப், பாயோடு பதினைந்து பலவிதந்தூக்கிப் பக்குவமா யிடித்துனைப்பங்குகேளு, தாயோடுவிருபத்தோர் பங்குபண்ணித் தப்பாம லொருபங்கு சட்டியிலிட்டுச், சேயோடு சலமதிலே மூன் றுசேர்தான் திறமாக விட்டதிலே யடுப்பிலேற்றே. (321)

ஏற்றப்பா நாழிகைதான் முப்பதானல் என்மகனே கால்சேர் தானெடுத்துக்கொண்டு, சேர்த்தப்பா தேனதிலே கழஞ்சுகூட்டத் திறமான கோரோசனைக் குளிகையொன்று, பார்த்தப்பா விழைத் ததனை யிருநேரந்தான் பதறாமல் கொடுத்தவரப் பித்தசுரமெல் லாம், கார்த்தப்பா கண்காணு தோடிப்போகும் கருவான நாவரட்சி கழன்றுபோமே. (322)

போமப்பா நாக்கிலுள்ள முள்ளதெல்லாம் பொறுக்காத நீர்த் தாகம் போகுஞ் சொன்னேன், நாமப்பா வுடம்பெரிவு காந்தலெல் லாம் நடுநடுங்கி யோடுமடா வாயூறலெல்லாம், சேமப்பா சிரசிலு ள்ள பித்தமெல்லாம் சீக்கிரத்தி லிரங்கிவிடுஞ் சிரோபாரம்போம், ஆமப்பா சேத்துமசுரம் பதினொன்றுந்தான் அப்பனே தீருதற்குக் கியாழங்கேளே. (323)

சேத்துமசுரக்கியாழம்.

கேளப்பா சுக்குதிப்பிலி கிராம்பு கெடியான துராலப்பையக் கிராகாரம், காளப்பா கருமுள்ளி கடுக்காயோடு கனத்தவாடா தோடைகற் பூரவள்ளி, நாளப்பா முந்திரிகை கண்டங்கத்திரி நல மான பதினொன்று வகையைக்கேளு, ஆளப்பா பலவீதம் நிறுத்து க்கொண்டு அப்பனே யிடித்துரையப் பங்குகேளே. (324)

பங்கென்ன பதினைந்து பண்ணிக்கொண்டு பக்குவமா யொரு பங்கு சட்டியிலிட்டுப், பங்கென்ன ரண்டுபடிசலந்தான்வாரு பதரு தே முப்பதுநாழிகை யூறினக்கால், பங்கென்ன வடுப்பேற்றிக் கம லமாகப் பதருமல் கால்சேர்தா னிடித்துக்கொண்டு, பங்கென்ன சதனிலே கழஞ்சுகுத்திப் பாரப்பாசந்திரேகம் பலந்தான்போடே.

போட்டப்பா கோரோசனைக் குளிகையொன்று புகழாகக் கல க்கியிரு நேரங்கொள்ளக், காட்டப்பா வம்மலெல்லாங் கீழேசாடுங் கனமான சேத்துமசுரங் காணாதோடும், கேட்டப்பா விருமலெல் லாம் க்ஷணத்தில் தீரும் சிறுகடுப்பு குத்துவலிசேராதோடும், காட் டப்பா வலியிசுவுங் கலங்கியோடுங் கருவான சோதியொன்று சொ ல்லக்கேளே. (326)

சன்னிபதின்மூன்றுக்கும்பெயர்.

கேளப்பா சன்னிவகை பதின்மூன்றுக்கும் கெடியானநாமமது சொல்லக்கேளு, நாளப்பா தாந்திரிக வந்தகனுமாகும் நலமான சிதாங்க முருத்திரதாரம், வேளப்பா சித்தவிப் பிரமையோடு வித மான கண்டகுப்பங் கருனியாகம், ஆளப்பா வீக்கணுதம் பக்கநேத் திரம் அருளான ரத்தபுஷ்டி விருக்கிதாகமாமே. (327)

தோஷமேழுக்கும்பெயர்.

ஆமப்பா பிரலாபம் பீநியாசம் அப்பனே சன்னிவகை பதின் மூன்றுக்கும், வேமப்பா தோஷமென்ற தேழுங்கேளு விருதான வுஷ்னதோஷம் ரத்ததோஷம், நாமப்பா நீர்தோஷமஸ்திதோஷம்

நலமான கொடிதோஷம் வலிதோஷந்தான், காமப்பா சையோக தோஷத்தோடு சதுரான தோஷவகை யேழுந்தானே. (328)

தானென்ற சன்னிவகை பதின்மூன்றுக்கும் தளமான தோஷ வகை யெழுக்குந்தான், நானென்ற மருந்துவகை முன்னேசொன் னேம் நலமான சன்னிக்குத் தைலஞ்சொன்னேம், தானென்றமாத் திரையுங் கலிக்கஞ்சொன்னேங் கருவான வைத்தியத்தில் மனதை யூன்றி, வானென்ற வைத்தியத்தைப் பார்த்தாயாகில் மைந்தனே தன்மந்திரிக் கொப்பாம்பாரோ. (329)

## கெந்திசெந்தூரம்.

பாரப்பா செந்தூரஞ் சொல்லக்கேளு பண்பான கெந்தியறப் பலந்தான்வாங்கி, நேரப்பா ஓட்டிலிட் டிருக்கும்போது நேருனரம் பலந்தா னுவிட்டே, காரப்பா வறுத்தாக்கால் பற்பம்போலாம் காதகமாய்ப் புதுச்செங்கல் பாக்குப்போலுடைத்து, வாரப்பா பாண்டத்தில் போட்டுப்பின்பு வளமான கறிவுப்பு சேர்த்தனைத் தால் வாங்கே. (330)

வாங்கியே முன்பற்பங் கல்லுப்புக்கலந்து வாகாகப் பாண்டத திற் றாவிநீயும், தாங்கியே மேல்பானை கவிழ்த்துமூடித் தப்பாம லெழுசீலை மண்ணுசெய்து, சாங்கியே காயவைத் தடுப்பிலேற்றிச் சாதகமாய்க் கமலகா டாக்கினியாலே, தேங்கவே நாற்சாம மெறித் திட்டால் திறமாக மேல்தூரில் பற்பமாமே. (331)

ஆமப்பா சுதபற்பம் பலந்தானுலு அப்பனே கெந்திபல மறை யுங்கூட்டி, நாமப்பா வரிதாரம் பலந்தான்தூக்கி நலமாகப் பொடி செய்து கும்பியிலேபாதி, வேமப்பா போட்டதிலே யேழுசீலை செய்து விருதான ரவியிலேகாயப்போட்டுத், தாமப்பா தாளிக்குள் நாலுவிரல் மண்தான் தப்பாமல் பாதிமேல் குப்பிவைபே. 332

வைத்தப்பா கழுத்தளவு மணலைக்கொட்டி வாகாக முற்றீயுஞ் சாமம்நாலு, நைத்தப்பா வெரியிட்டே யாரிப்பார்த்தால் கசகாது தேங்காய்போல் செந்தூரமாகும், நைத்தப்பா வுடைத்தெடுத்துப் பதனம்பண்ணு நலமான வியாதியெல்லாம் நாடாதோடும், வைத்த ப்பா செந்தூரம் பலந்தானென்று மைந்தனே முன்பற்பம் பலந்தா னலே. (333)

நலமான கெந்திபல மரைதான் போட்டு நலமான தாரங்கால் பலமுமரீரும், நாலான கலவத்தில் பொடித்துயேங் கசகாமல் குப் பிக்குப் பாதிபோட்டுச், சேலான சீலையோ ரேழுஞ்செய்து திற

மான வாய்க்குசசெங்கல் தேய்த்துப்போட்டு, வாலான சீலையோ ரேழுஞ்செய்து மைந்தனே வாலுகையி லடுப்பிலேற்றே. (334)

ஏற்றியே நாற்சாமமுத் தீயாற்யோட்டு எடுத்துப்பார் செந்தூர மருணன்போலாம், பாத்தியேயிப்படியே பத்துமுறைசெய்து பாங்கான செந்தூர மெடுத்துக்கொண்டு, தேத்தியே செந்தூரம் பலந்தானுலு, திறமான பற்பமது பலந்தானுலு, ஆத்தியே கெந்தியது பலந்தான் ரண்டு அப்பனே தாரமது பலமரையுமாமே. (335)

ஆமப்பா சிலைகல்தான் தாளகங்கால் அப்பனே கல்வத்திற் பொடித்துக்கொண்டு, நாமப்பா செம்பாத்தம் பூச்சாற்றாலே நலமாக நாற்சாமமாட்டிக்கொண்டு, தாமப்பா பூவரசன் பூவாற்சாமம் தப்பாமல் தக்காளிபழச் சாறுகேளு, சாமப்பா விருசாம மாட்டிக் கொண்டு சமர்த்தாகப் பொற்கைபான் சாறுகேளே. (336)

கேளப்பா சாமம்ரண் டாட்டிக்கொண்டு கெடியான ரேக்கத்திலே பலமும்போட்டு, நாளப்பா வரைத்துருட்டிப் பொர்டியாய் செய்து நலமான குப்பியிலே யரைதான்போட்டு, கேளப்பா சீலையோ ரேழுஞ்செய்து வெகுசுறுக்காய் வாங்கிச்செங்கல் தேய்த்துப் போட்டு, ஆளப்பா வாய்க்குமந்தச் சீலைசெய்து அப்பனே வாலுகையி லேற்றியாட்டே. (337)

ஆட்டப்பா சாமம்நால் தீபமாக அப்பனே சாமம்நால் கமலவன்னி மூட்டப்பா, காடாக்கினிசாமமெட்டு மூதண்ட நிருவாணி பூசைசெய்து, காட்டப்பா வாறினவின் னெடுத்துப்பாரு கதிர்போலே செந்தூரங் கண்கொள்ளாது, நீட்டப்பா லோகத்தில் நூற்றுக் கொன்று நில்க்குமடா வர்னமது பத்துதானே. (338)

பத்தாகுந் தேகத்தில் குன்றியெடைதேனில் பக்குவமாய் வருடமொன்றுகொண்டாயானல், வித்தாகும் விந்துவது கீழ்நோக்காது விட்டுவிட்டுச் சரீரத்தோர் மாசிகட்டும், அத்தாகு ஸ்திரீகளுட னனுபோகத்தால் அப்பனே நூறுபேர் தோற்றுப்போவார், சித்தாருந் தேகமது சிவந்துமின்னும் செடமிறுகி வயிரம்போலாகும்பாரே. (339)

காலகண்டமேகநாராயணசெந்தூரம்.

பாரப்பா காலகண்டமேக நாராயண செந்தூரம் பரிவாக யின்னமொன்று சொல்லக்கேளு, சேரப்பா ரசபற்பம் பலந்தானெட்டு திறமான கந்தகமோ பலந்தானப்பா, வாரப்பா தாளகமோ பலந்தானென்று வளமான சிலையரைசெந் தூரமறைதான், ஆரப்

பா லிங்கங்கால் வெள்ளிகால்தா னப்பனே வெள்ளீயம் பலந்தா னென்றே. (340)

ஒன்றான நாகமறை வங்கங்கால்தா னுத்தமனே செம்பதுவுங் கழஞ்சிரண்டு, நன்றான தங்கமது கழஞ்சு ஒன்று நாட்டப்பா நாபி யொரு பலமும் நீதான், குன்றுமற் பொடிசெய்தே யரைப்புகேளு கூறான பொற்கையான் சாமம்நாலு, சென்றான குமரிப்பூச் சாமம் நாலு சேர்முருக்கம் பூச்சாறு சாமம்ரண்டே. (341)

இரண்டான பாதிரிப்பூச் சாறுசாமம் ரண்டாகும் பழச்சாற் றில் செம்பரத்தம், பூபொட்டு நன்றாக வெளுத்தபின் பெருந்து போட்டு நலமாக விருசாம மெடுத்தேயாட்டு, சென்றாக ரவியுலர்த் திப் பொடிதான் செய்து சேரப்பா குப்பிக்குச் சீலைசெய்து, வின் றப்பா குப்பிக்குப் பாதிபோட்டு விருதாக வாய்மூடிச் சீலை செய் யே. (342)

செய்தப்பா வாலுகையிலடுப்பிலேற்றித் திறமாகத்தீபாக்கினி யெட்டுசாமம், பெய்தப்பா கமலமோ ரெட்டுச்சாமம் தீர்க்கமாய் காடாக்கினி சாமமெட்டு, செய்தப்பா தீயாற்றி யீசானியத்திற் சேர்க்கறியு மதுவோடு பூசைபண்ணு, செய்தப்பா குப்பிதனைவாங் கிப்பாரு திறமாகக் கருஞ்சிவப்பாய்ச் செந்தூரமாமே. (343)

ஆமப்பா பணவெடைதான் தேனிற்கொள்ள அணுகாது குன் மமெட்டும் பீலியாறும், போமப்பா பெருவயிறு மகோதரங்கள் பொல்லாத சத்தவிம்மல் நீரடக்கல், காமப்பா விரைத்தொருசேர் கைப்பாண்டு கனமான நீர்க்குத்தல் காணுமோடும், சாமப்பா வக் கியா மந்தமெல்லாம் கண்ணுண்டு போகுமடா சேதிகேளே. (344)

### ரசலோகச்செந்தூரம்.

சேதியொன்று சொல்லுகிறேன் புலத்தியனேயையா திறமா ன ரசலோகச் செந்தூரந்தான், ஆதியென்ற சூதபற்பம் பலந்தான் ரண்டு அப்பனே லோகமென்று காக்குமரைகூட்டி, வாதியாம் லிங்க மரை வெண்காரமரைதான் வளமாகச் சாருங்கல் நாபிகால்தான், சாதியென்ற கெந்தியினுற் செந்தூரங்கால்தான் கனமாகப் பொடி செய்தே யரைப்புக்கேளே. (345)

கேளப்பா பழச்சாற்றால் சாமம்நாலு கெடியாகப் பொற்கை யான் சாமம்ரண்டு, நாளப்பா கொறுப்புகால் சாமம்ரண்டு நலமான குமரிப்பூச் சாமம்ரண்டு, தாளப்பா செம்முள்ளி சாமமொன்று தள மாகவே யரைத்துவைத்து ரவியிற்போட்டு, வேளப்பா செய்தத னைக் குப்பிக்கேற்றி விதமான வாய்மூடி வாலுகையில் வையே. ()

வைத்தப்பா வடுப்பேற்றி யெட்டுசாமம் வாகாகத் தீபாக்கினி கமலங்கேளு, கைத்தப்பா சாமமெட்டெரித்துக்கொண்டு கனமான காடாக்கினி சாமமெட்டு, வித்தப்பா வாறவிட் டுடைத்து வாங்கு விருகாகச் செங்கல்நிற மாகக்காணும், பைத்தப்பா பொடிசெய்து பணந்தேனி லுண்ணப் பறக்குமடா காமாலைபாண்டுதானே. (346)

காயனென்ற பித்தநோய் தலைகெட்டோடும் தப்பாதுவாதமெ ன்றதென்பதும்போம், நாயனென்ற சன்னியெல்லாம் நாடாதோடும் நலமானவாயுவென்ற தெல்லாந்தீரும், காயனென்றததிலுள்ளவியாதி யெல்லாம் கடல்புக்குஞ் சூலைபதினெட்டுந்தீரும், மாயனென்றதேனி லே பத்துநாட்கொள்ள மதுமேகந்தீருமடா வின்னங்கேளே. 347)

ரசகற்பூரபற்பம்.

கேளடா ரசகற்பூர பற்பங் கேளு கிருபையாய்ச் சுத்தரசஞ் சுத்திசெய்து, நாளடா கல்லுப்பு நைபோர்பண்ணி நலமான ரவியி லே காயப்போட்டு, கேளடா சட்டிக்குள் ளுப்பைப் போட்டுத் திறமான மேற்கட்டி கொண்டுமூடி, தாளடா வெழுசீலை மண்ணுஞ் செய்து தளமான ரவியிலே காயப்போடே. (348)

போட்டப்பா வடுப்பேற்றிக் கமலமாகப் புகழாக நால்சாம மெரித்தாயானால், நீட்டப்பா தேங்காய்போ லிருகிற்கும் நிசமா வதையெடுத்துத் தூக்கிக்கொண்டு, காட்டப்பா பலம்நாலுபீங்கானு க்குங் கருவானவெற்றியின்சாற்றில்விட்டு, ஆட்டப்பா ரவிமுகத்தி லுலர்ந்தபின்பு அப்பனேநீ யஞ்சுதரம் சாறுவிட்டே. (349)

விட்டப்பா ரவியிலே யுலர்ந்த பின்பு விருதாகப் பொடிபண்ணி குப்பிக்கிட்டு, விட்டப்பா வரைவாசி மட்டம்போட்டு விளக்கியே யெழுசீலை மண்ணுஞ்செய்து, விட்டப்பா வாலுகையில் வைத்து நன்றாய் விதமாக வெண்சாம முத்தீயிட்டு, விட்டப்பா வாறியபின் னுடைத்துப்பாரு விதமான பற்பமதை யெடுத்துக்கொள்ளே. ()

கொள்ளப்பா நாலுபல மெடுத்துக்கொண்டு குரிப்பான பற்ப மது பலநாள் தூக்கி, கள்ளப்பா பொடிசெய்து வெற்றிலையின்சாறு நலமாக விட்டதிலே ரவியுலாத்தி, புள்ளப்பாமேருவிலே யரைவாசி போட்டு விருகான வாலுகையி லடுப்பிலேற்றி, கள்ளப்பா மூந்தீ யுஞ் சாமமெட்டு கருகாம லெடுத்தாறிபின் னுடைத்துபாரே. ()

பாரப்யா முன்போலே பத்துத்தொந்தம் பரிவாக வெடுத்தெ டுத்துப் பதனம்பண்ணி, காரப்பா பணவெடை செய்தானிற்றூன் சார்வாக மண்டலங்கால் கொண்டாயானால், சேரப்பா சூலைபதினெ ட்டுந்தீரும் திறமானகிரந்திபுண் புரைகள் தீரும், வேமப்பாமேஹ றல் வஸ்திரணமெல்லாம் வெவ்வேறாய் தீருமடா வின்னங்கேளே.

காரீயச்செந்தூரம்.

கேளப்பா காரீயச் செந்தூரந்தான் கெடியான காரீயம் பலந் தானுறு, நாளப்பாபழச்சாற்றி லுருக்கிச்சாய்த்து நலமான நல்

லெண்ணெய்க் கோமயத்திலேழு, தாளப்பா கோசலத்திற் கொளுச்சாற்றில் தளமான நாடியிலே யுருக்கிச்சாய்த்து, ஆளப்பா வகையொன்றுக் கேழுதரஞ் சாய்த்து அப்பனே பலநாற் சட்டியிலே வையே. (354)

வைத்தப்பா பாகமது கால்தான்கூட்டி வளமாக வறுக்கையிலாவாரைப்பட்டை, நைத்ததிலே நறுக்கியே புடைத்துக்கொண்டு நலமாகப் போட்டதிலே வறுப்பாயப்பா, நைத்ததிலே நாற்சாமம் வறுத்தாயானல் நலமான செந்தூர மருணன்போலாம், பைத்ததிலே செந்தூர மெடுத்துக்கொண்டு பத்திரமாய் சீசாவிற் பற்பமாமே. (355)

ஆமப்பா நாற்சாமம் வறுத்துப்போட்டு அப்பனே நாற்சாமம் சும்மாய்வைத்து, தாமப்பா செந்தூரமெடுத்துக்கொண்டு தளமான தேனெய்யில் பலந்தா னுண்ணப், போமப்பா பிரமியகோய் பெரும்பாடெல்லாம் பொல்லாத கிரிச்சனங்கள் போகுஞ்சொன்னேன், காமப்பா நீரிழிவு கடலேபுக்கும் கலங்காதே கல்லடைப்பு தெறிக்கும்பாரே. (356)

## பூரணச்சந்திரோதயம்.

பாரப்பா பூரணச்சந் திரோதயமென்றால் பறக்குமடா வியாதியெல்லாஞ் சொல்லக்கேளு, தாளப்பா ரசமிரண்டு கிலையரைக்கால் தவறாமல் வெகுசுறுக்காய தேக்கதுவும் பலந்தானொன்று, காரப்பா சரக்கெல்லாங் கலவத்திட்டு கலக்காமல் பொடித்துமன மொன்றுபட்டே. (357)

பட்டப்பா னரைபங்குச் சாறுகேளு பண்பாக பழச்சாற்றிற் செம்பரக்கம் பூப்போட்டு, கன்றப்பா வெளுத்ததிலே நாள்தான் கிசன்றால் கலங்காதே பிழித்தெறிந்து மருந்தில்விட்டு, வின்றப்பா சாமமே யிருபதாகும் வேளாத பொற்கையா னிருபத்தொன்றும், சென்றப்பா வரைக்கையிலே துருசுகேளு திறமாக பணவெடைதான் கூடப்போடே. (358)

போட்டப்பா ரவியுலர்த்திப் பொடிதான் செய்து புகழான மேருவிலே யரைவாசிபோட்டு, காட்டப்பா சீலேயோ ரேழுஞ்செய்து கனமான வாலுகையி லடுப்பிலேற்றி, நீட்டப்பா தீபமோ ரெட்டுச்சாமம் நிலையான கமலவன்னி யெட்டுச்சாமம், ஆட்டப்பாகாடாக்கினி யாறுசாமம் அப்பனே சலாகையிட்டுக் கிண்டிப்பாரே. (349)

பாரப்பா சலாகைமுகங் கறுப்புகண்டால் பக்குவமென்றே தீயையாற்றிப்போட்டு, சேரப்பா பூரணச்சந் திரனைப்போலே திற

மாகக் காந்தியதா யிருக்கும்பாரு, வாரப்பா வுடைத்தெடுத்து பல மேனூக்கி வகையாகப்பொடிசெய்து கஸ்தூரிகேளு, ஆரப்பா கழஞ்சியொன்றுகூடப்போட்டு அப்பனே கோரோசனைதான் கழஞ்சியாமே. (360)

ஆமப்பா கூடவிட்டுப்பொடிதான்செய்து அப்பனேபாணிதனிலடைத்துக்கொண்டு, சேமப்பாபணவெடைதான் தேனிற்கொள்ள தீராதசன்னியென்ற மூலந்தீரும், வேமப்பாதோஷமென்ற தேழுந்தீரும் வெருளாதே சேத்துமநோய் தொண்ணூற்றுறும், வாமப்பா கீழ்நோக்கி வலியுந்தேகம் வளமாக தேவியைநீ தியானஞ்செய்யே.

செய்யளே பூரணச்சந் திரோதயமென்றால் திடுக்கிடுமே சுரமென்ப தறுபத்தினுனும், கைபவே காசமெட்டுங் கனமான மேகநோ யிருபத்தொன்றும், பையவே தாமிழல்கா ளகன்றுபோகும் பாரப்பா தேகமது சிவந்துமின்னும், வையவே வருடமொன்றும் பணவெடைதான்கொள்ள வளமானதேகமது சந்திரனபோலாமே.

ஆமப்பா கோங்கின்பூ சூரணமேசெய்து அப்பனே பூரணச்சந்திரோதயம்வைத்து, நாமப்பாமண்டலந்தான் கொண்டாயானல் நலமான தேமமோ அருணன்போலாம், போமப்பா சரஸ்வதிதாளிருத்தஞ்செய்வாள் புகழான சுரமெல்லாம் பாடலாங்கேள், காமப்பா லிறுகுமடா சையோகத்தில் கருவான விந்துவது வீழதென்னே. (363)

என்னவே பத்தியந்தான் பாலுஞ் சோறும் இதமான யாவினெய் சிறுகீரை யாகும், பன்னவே பொன்னாங்காணி புளியாரையாகும் பகர்வதனை வண்டையுடன் பீர்க்கும்மாகும், கன்னவேமிளகுசீரகமாகும் கறியென்றால் முள்ளித்தூ துளையுமாகும், தன்னவே பருப்புக்குள் பாசியாகும் தளமான சந்தனுதித்தைலமூழ்கே. ()

மூழ்கவே வியாதியெல்லாங் கடலேபுக்கும் முக்கியமா யகத்தியர்க்குச் செபந்தான்பண்ணு, நெகிழவே தியானமது நிலையாய்ப் பண்ணு நோரகத்தேவியைத்தான் பூசைபண்ணு, திகழவே சிவன்தன்னைத் துதியேபண்ணு தீராதவியாதியெல்லாந் தீர்ந்தேபோகும், மகிழவே வைத்தியனில் வகையாய்ச்செய்தால் மண்டலத்தி லீசனவனுகுமுற்றே. (365)

வைத்தியரத்தினச்சுருக்கம் முற்றிற்று.

அநுபவமானது! பிரசித்தியடைந்தது!! சஞ்சீவிபோன்றது!!!

# அயக்காந்த திராவகம்.

மித்திரர்களே! இந்த அபூர்வமருந்தானது அநேக கொடிய வியாதிகளை ஆச்சரியமாய் கண்டிக்கக்கூடியது. இதை ஆயிரக் கணக்கான ஜனங்கள் உபயோகித்துச் சந்தோஷிக்கின்றனர். வியாதியினாலாவது கெட்ட சகவாசத்தினாலாவது இளைத்துப்போயிருக்கும் தேகத்தைப் புஷ்டியாக்கி பலவிர்த்திதருவதில் இது நிகரற்ற மருந்தாகும். ஆங்கிலேய முறைப்படி தயாரிக்கப்பட்ட அருமையான மருந்து. சாப்பிடுவதற்கு மிக இன்பமாயிருக்கும். இருமல்நோய்கண்டு அவஸ்தைப்படுபவர்கள் இதை உட்கொண்டால் இரண்டேவேளையில் ஆச்சரியமான சுகத்தையடைவார்கள். இதனால் தீரக்கூடிய அநேகவியாதிகளில் முக்கியமான சிலவற்றை இங்கே குறிக்கிறோம்.

நரைத்தமயிரைக் கறுப்பாக்கும். உஷ்ணத்தினாலாவது புழுவெட்டினாலாவது மயிர் உதிர்வதை நிறுத்தும். நீர் வியாதிகள் தீரும். கண்ணெரிச்சல் கைகால் காந்தல் இவை தீரும். முக வசீகரத்தை உண்டாக்கும். தேக அசதியையோட்டும் ஜீரண சக்தியையும் நல்லபசியையும் உண்டாக்கும். மனதை அதிக உற்சாகப்படுத்தும். நரம்புகளுக்கு அதிகவலுவைத்தரும். தேகத்தில் நல்ல இரத்தத்தைச் சுரப்பிக்கும். க்ஷயரோகத்தை க்ஷணத்தில் தீர்க்கும், வாத பித்த சிலேத்துமத்தாலுண்டாகும் ரோகங்களை நிவர்த்திக்கும். சத்ததாதுக்களுக்கும் நல்ல பலத்தைத் தரும். மூலச்சூடு மூலவாய்வு, மலச்சிக்கல் இவைகள் தீரும்.

இந்தச் சஞ்சீவியை நல்லபோஜனத்துடன் 20-நாள் சாப்பிட்டால் இணையில்லாத ஆனந்தத்தைத்தரும். இழந்துபோன தேக திடத்தைப் பழையபடி அடைவதற்கு இதைவிட வேறு மருந்தே கிடையாது. 40-நாள் மருந்து உட்கொள்ளும்பக்ஷத்தில் வியாதியென்பதே அம்மனிதனின் நிழலைக்கூட அணுகாது. தேகம் வச்சிரமேயாகும். இதற்கு யாதொரு பத்தியமுங் கிடையாது.

## இந்த திராவகத்தை உட்கொள்ளவேண்டிய முறை.

அரிக்கால் ஆழாக்கு சுத்தஜலத்தில் திராவகத்தை 5-துளி அல்லது 7-துளி அதில்விட்டுக் கலக்கிக் குடித்துவிடவேண்டும். பத்தியமே கிடையாது இதைப்பற்றிய விவரங்கள் பார்சலோடு வைத்துவரும்.

அரைமண்டலம் 20-நாள் மருந்து ரூபா 1-4-0 டெஜன் 1-க்கு ரூபா-12.
ஒருமண்டலம் 40-நாள் மருந்து ரூபா 2-0-0 டெஜன் 1-க்கு ரூபா-21.

இப்படிக்கு,

பி. நா. லோகநாத முதலியார் அண்டு கோ,

பிரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு, மதராஸ்.